# ஞானச்சுடர்

தை 2017

229 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்**
**பெருந்தகை யான்கட் படின்.**

**பொருள் :** உதவி செய்யும் இயல்புடையவருக்குக் கிடைத்த செல்வம் தனது எல்லா உறுப்புகளும் மருந்தாகி நோயைத் தப்பாது ஆற்றும் மரம் போல்வது. (217)

**இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்**
**கடனறி காட்சி யவர்.**

**பொருள் :** தாம் செய்யத்தகும் கடமைகளை அறிந்த அறிவுடையார் செல்வம் சுருங்கிய காலத்தும் உபகாரஞ் செய்வதற்குத் தளரார்.
(218)

---

# நற்சிந்தனை

**மறப்பேனோ குருநாதன் தன்னை**
**முத்தி நல்குமே**
**ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்**

**வேறு**




தாமரையில் நீர்போற் சகத்திலே தம்பிநீ
சேமமுடன் வாழ்வாய் சிவனைநினை - ஆமளவும்
நன்மையையே செய்வாய்நீ நல்லோரைப் பேணிநட
தன்னை யறியலாந் தான். 01

தந்தைதாய் மற்றுந் தமர்தார மெல்லாருஞ்
சந்தையிற் கூட்டமிது தப்பாது - எந்தைபால்
எப்போது மன்புவை எல்லா மவன்செயலே
இப்போ சமய மிணங்கு. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 229

2017 **பொருளடக்கம்** தை


| | | |
|---|---|---|
| பஜனையே வாழ்வின்... | கே.எஸ். சிவஞானராஜா | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -08 |
| எண்ணங்களும் அதன்... | இ. சிவராசா | 09 -13 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 14 -19 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 20 -21 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 22 -25 |
| தீராத விளையாட்டுப் பிள்ளை | சு. சிவராசா | 26 -27 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 28 -29 |
| சிவகாமசுந்தரியின் பாலுண்ட... | அ. சுப்பிரமணியம் | 30 -32 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 33 -35 |
| பக்தர்களைக் காப்பாற்ற... | வீ.எஸ். ஸ்ரீகந்தசாமி | 36 -37 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 38 -39 |
| மனிதரில் தெய்வத்தைக்... | கந்த. சத்தியதாசன் | 40 -41 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 42 -47 |
| தைப்பொங்கல் தத்துவம் | ஆர்.வீ. கந்தசுவாமி | 48 -49 |
| சந்நிதியான் ஆச்சிரமம் | தொகுப்பு | 50 -51 |
| மனிதனும் தெய்வமாகலாம் | நீர்வைமணி | 52 -53 |
| சந்நிதியான் திருவடி... | பொ. பாலேஸ்வரன் | -54 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 55 -56 |
| திருவாசக விழா | வல்வையூர் அப்பாண்ணா | 57 -62 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி



1998ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டுவரை ஒரு ஆன்மீக மலர் எவ்வித விளம்பரம் அற்ற வகையில் சமயம் சார்ந்த மலராக் வெளிவந்து 2017ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பது ஒரு சாதனை என்றே கூறவேண்டும்.

ஆரம்ப காலங்களில் இம்மலர் வெளியீடும் ஒரு வரையறைக்குள் நின்றுவிடுமோ என்ற ஐயப்பாடு என் மனதில் இருந்தது. ஆனாலும் சந்நிதி வேலவனின் அருளோடு இம்மலர் தொடர்ந்து வெளிவருவது போற்றத்தக்க விடயம்.

இம் மலர் தொடர்ந்து பிரகாசிக்க நாம் அனைவரும் உந்துசக்தியாக விளங்கவேண்டும்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்.

# வல்வை
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான
# பிரதம குருவின்
# ஆசிச் செய்தி



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மீகச் சஞ்சிகையான ஞானச்சுடர் தனது 20ஆவது அகவையில் தடம்பதிப்பதையிட்டு பேரவையின் ஆரம்பகாலம் தொடக்கம் போஷகர் என்ற வகையில் நான் பேருவகை அடைகின்றேன். அதே நேரத்தில் தைமாத 229ஆவது இதழாக வெளிவருவது ஒரு மாபெரும் சாதனையாகும்.

ஞானச்சுடர் மலரானது அனைவரது மனங்களிலும் நீங்காத இடம்பெற்று இன்று இருபதாவது பிறந்தநாளைக் கொண்டாடுவதையிட்டு எனது பாராட்டுக்களையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்து, ஆச்சிரம முதல்வர் சிவத்திரு செ. மோகனதாஸ் சுவாமிகளின் ஆற்றுப்படுத்தலினால் ஆச்சிரம பணிகள் அனைத்தும் சிறப்புற நடைபெற எல்லாம்வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"சர்வே ஜனன சுகினே பவந்து"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
"வாழ்க வளமுடன்"
"வாழ்க பல்லாண்டு"
"சுபம் - மங்களம்"

*சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்* J.P
இந்துமத குருபீடாதிபதி
பிரதமகுரு:
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை.
ஆதீனகர்த்தாவும், தர்மகர்த்தாவும்
புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஷகரின் ஆசிச்செய்தி



ஞானச்சுடர் இதழ் 19ஆவது அகவை நிறைவு செய்து 20ஆவது அகவையில் கால் பதிப்பது என்பது எல்லாம் சந்நிதி வேலவனின் திருவருள் ஆகும்.

சமயம் சார்ந்த அறிவுப் பொக்கிஷமாகவும், மக்களின் அறிவு சார்ந்த மேம்பாட்டிற்காகவும் ஞானமாகிய சுடர் என்றும் பிரகாசிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தற்கால சூழ்நிலையில் மக்களின் ஆன்மீக சிந்தனைகளை வெளிக்கொணர்வதில் ஞானச் சுடருக்கு நிகர் வேறெதுவுமில்லை. தொடர்ந்தும் ஞானச்சுடர், ஒளிவிட்டுப் பிரகாசிக்க சந்நிதி வேலவனின் திருவருளோடு, எனது நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

"வளர்க! சமயப்பணி"

"வாழ்க! ஞானச்சுடர்"

கிரியா க்ரம ஜோதி, கிரியா கலாப முக்தாமணி

*சிவஸ்ரீ ப. மனோகரக் குருக்கள்*

பிரதமகுரு:

வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி

தேவஸ்தானம்.

வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானதானம் தொடர வாழ்த்துகின்றோம்



மயில்வாகனம் சுவாமிகளின் குருவருளும் மயில்வாகனப் பெருமானாகிய செல்வச்சந்நிதிச் செல்வனின் திருவருளும் பொலிய அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கும் ஞானதானமாக மிளிர்வது ஞானச்சுடர்.

அன்னப்பணி, அறிவுப்பணி, அறப்பணி, மருத்துவப்பணி, இடர்களை பணி என பன்முகப்பணிகளாற்றும் அறநிலையமாகத் திகழ்வது இந்த ஆச்சிரமம் என்பது யாவரும் அறிந்த உண்மை.

இந்த பெருமைகளையெல்லாம் ஒருங்கே பெற்ற சந்நிதியான் ஆச்சிரமத்தின் தூணாக மிளிரும் தவநெறிச்செல்வர். மோகனதாஸ் சுவாமி தம்பதியினரதும் அவரோடு இணைந்து தம் கடன் பணி செய்வதே என தொண்டாற்றி மகிழும் அன்பர்களதும் தொண்டு நினை தொறும் நினைதொறும் வியக்க வைப்பதாகும்.

இத்தகு தொண்டர்கள் நிறைந்த அமைப்பினூடாக, வெளியாகும் ஞானச்சுடர் அஷ்டாதச வருஷங்களை கடந்து தொடர்வதும் அதன் வழியே ஆன்மீக எழுச்சி பரவலாக்கப்படுவதும் பெருமைக்குரியதாகும்.

இவ்வாறு சீரிய பணியாற்றும் மாதச்சஞ்சிகை இன்னும் பல்லாண்டு தொடர்ந்து வெளிவர நம் வழிபடு தெய்வமான நீர்வை செல்லக்கதிர்காமச் செவ்வேளை பிரார்த்தித்து வாழ்த்துவதுடன், ஞானதான வள்ளல் அவர்களையும் அவரது அறப்பணிகளுக்கெல்லாம் துணையாய் விளங்கும் அனைவரையும் வாழ்த்தி, யாவருக்கும் இறைவனின் ஆசீர்வாதமானது கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம் கலி கல்மஸ நாஸினீம்"
(கந்தனின் கருணையே கலியுகத்துன்பங்களிலிருந்து காக்க வல்லது)

"நீர்வை மணி" சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்,
பிரதமகுரு:
செல்லக்கதிர்காம முருகன் தேவஸ்தானம்.
நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர்**
**திரு ச. லலீசன் அவர்கள் வழங்கிய**

# பிரார்த்தனை உரை



இந்து ஆன்மீக உலகோரை வழிப்படுத்தும் ஞானச்சுடர் சந்நிதி வேற்பெருமானின் கிருபையால் தொடர்ச்சியாக சிறப்புற மலர்ந்து வருகின்றது. ஆச்சிரம சுவாமிகளுக்கும் மலர்க்குழுவிற்கும் தோன்றாத் துணையாக வேற்பெருமான் விளங்குகின்றான் என்பது ஆச்சிரமத்துடன் தொடர்புறுவோர் அனுபவிக்கும் உண்மை.

இந்து ஆன்மீக சஞ்சிகைகளின் தேவையை இன்றைய இந்து உலகோர் பெரிதும் உணர்ந்துள்ளனர். ஆயினும் தமிழகத்தில் இருந்து வருகின்ற ஆன்மீகச் சஞ்சிகைகள் பெரும்பாலும் சோதிடம் சார்ந்த அல்லது வாஸ்து சார்ந்த நம்பிக்கைகளை விதைப்பனவாகவும் வணிக ஆன்மீக நாட்டத்தை மேலுறச் செய்வனவாகவும் விளங்குகின்றன. ஆனால் இலங்கையில் இருந்து இந்து சமயம் சார்ந்து ஒரு சில ஆன்மீகச் சஞ்சிகைகளே வெளிவருகின்ற நிலையில் அவை உண்மையான ஆன்மீகத் தேடலை பெரிதும் வலியுறுத்தி நிற்பது பாராட்டிற்குரியதாகும்.

இலங்கைப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் வரலாற்றில் தொடக்க காலத்தில் எழுந்தவை யாவும் சமயம் சார்ந்த நிலையிலேயே முகிழ்த்தன. இந்துக்களின் தளத்தில் எழுந்த பத்திரிகைகள் எமது சமயத்தவருக்கு அரணாக விளங்கின. இதன் தொடர்ச்சியில் இன்றைய ஆன்மீகம் சார்ந்த சஞ்சிகைகளின்பால் இளையோரின் நாட்டம் குறைவுற்றிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கின்றது. இளையோருக்கு ஏற்றவிதத்தில் நாம் எடுத்துரைப்பதற்குத் தவறிவிடுகின்றோமோ எனவும் நான் நினைத்துப் பார்ப்பதுண்டு.

சந்நிதியான் ஆச்சிரமத்தைப் பொறுத்தவரையில் ஆன்மீக நாட்டமுள்ள இளையோரை அங்கீகரித்து வழிப்படுத்தும் போக்கு சுவாமிகளாலும் ஆச்சிரம அன்பர்களாலும் விதந்து பேசத்தக்க வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கல்விசார்ந்த உதவிகள் வழங்குவதில் இருந்து ஆன்மீகச் சொற்பொழிவு, கட்டுரை மற்றும் கவிதையாக்கம், ஆன்மீகப் பயிற்சிப் பட்டறைகள் எனப் பலதுறைகளில் இளையோருக்கான களம் விரிந்து நிற்கின்றது. இந்தப் பயில்நெறியில் முகிழ்த்தவன் என்ற உரிமை எனக்கும் உண்டு.

அரசியல் நிலையில் எமது சமயத்தையும் மொழியையும் வேறுபிரித்து பாகம் செய்யும் போக்கு இன்று அவதானிக்கப்படுகின்றது. இது எம் வாழ்வியலுக்கு ஆரோக்கியமானதல்ல. தமிழும் சைவமும் இரு கண்கள் என வலியுறுத்தப்படுவதன் ஊடாக மொழியின் வழி சமய உரிமையையும் சமயத்தின் வழி மொழியின் உரிமையையும் பெற்றெடுக்க முடியும். ஞானச்சுடர் மொழியையும் சமயத்தையும் முன்னிலைப்படுத்தும் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

ஞானச்சுடரின் ஆன்மீக ஒளியில் எமது சமயம்சார் பயணம் சிறப்புற அமையவும், வேற்பெருமான் என்றும் வழித்துணையாக அமையவும் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் மார்கழிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

228ஆவது மாதமாக வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையை குப்பிளான் கிராம சேவகர் திரு சோ. பரமநாதன் அவர்கள் ஆற்றியிருந்தார்கள்.

அவர் தம் உரையினூடாக ஆச்சிரமம் ஆற்றும் சகல சமய, சமூகப் பணிகளை வியந்து கூறியதுடன், இம்மலரின் வெளியீடு ஒரு காத்திரமான செயற்பாடு என்றதோடு மலரில் புதிய புதிய கட்டுரையாளர்களை உள்வாங்கி, ஆக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களது எழுத்தாற்றலை வளர்ப்பது போற்றப்படவேண்டியது.

இதன் பயனாக பலவித கருத்துக்களை புதிய புதிய கோணங்களில் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது என்று கூறியதுடன் தாங்களும் வருடம் ஒருமுறை இம்மலர் வெளியீட்டில் பங்குபற்றுவதும் சந்நிதி வேலவனின் பூரண அருளே என்று கூறி மலர் வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

2016 மார்கழி மாதத்துக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் ஆற்ற இருந்த வேளையில் தவிர்க்க முடியாத காரணத்தால் அவரது வருகை இடம்பெறவில்லை. அவருக்குப் பதிலாக ஆசிரியர் இரா. செல்வ வடிவேல் அவர்கள் மதிப்புரையை ஆற்றி இருந்தார்கள்.

அவர் ஆற்றிய உரையில் பலவித கருத்துக்கள் அடங்கியிருந்தன. ஆக்கங்களை எழுதுவோர் இளைஞர் சமூகத்தை வழிப்படுத்துமுகமாகவும் மலரில் இடம்பெறும் கட்டுரைகளை அவர்கள் வாசிக்கக் கூடிய வகையிலும் இடம்பெற வேண்டும் என்றதோடு மலரை வெளியீடு செய்பவர்களும் காலத்துக்கேற்ற வகையில் கட்டுரைகளில் அடங்கியுள்ள கருத்துக்களை இலகுவான முறையில் புரியக்கூடிய வகையில் வெளிவருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை ஞானச்சுடர் சமூகத்திடம் விடுத்திருந்தார். ஆனாலும் இம்மலர் கடந்த 228 மாத காலமாக வெளிவருவது சந்நிதி வேலவனது அருட்பார்வை இவ் ஆச்சிரமத்தில் விழுவதுதான் இம்மலர் வெளியீடு மிகவும் சிறப்பாக இடம்பெறுகிறது என்று கூறி மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் உள்ள கருத்துக்களை சபையில் உள்ளோருக்குக் கூறியதோடு மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

"ஞானச்சுடர்" மலரின் 231ஆவது பங்குனி மாத இதழ் ஒரு வித்தியாசமான முறையில் "**வாசகர் சிறப்பிதழ்**" ஆக வெளிவர உள்ளது என்பதை அறிவிப்பதில் பேரவை பெருமகிழ்வு கொள்ளுகிறது.

1998 தை மாதம் ஆரம்பமான "ஞானச்சுடர்" ஆன்மீக இதழ் 20ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் இந்நன்னாளில் நாம் அறிவிக்கும் "வாசகர் சிறப்பிதழ்" முற்றிலும் வித்தியாசமானது.

ஞானச்சுடரின் 100, 150, 200, 225ஆவது மலர்கள் கூடிய பக்கங்களுடனும் - விசேட கட்டுரைகளுடனும் - சிறப்பு மலர்களாக வெளிவந்தமையை வாசகர்கள் அறிவீர்கள்.

மலரின் ஒருசில பதிப்புகளில் ஒருசில வாசகர்களின் கடிதங்கள் மட்டுமே பிரசுரமாகி இருந்தமையும் நீங்கள் அறிந்ததே. அதிகமான வாசகர்களுடன் நமது தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளாமை ஒரு குறைபாடாகவே நம் மனதில் நெருடலைக் கொடுத்து வந்தது. இதை நிவர்த்திக்கும் ஏற்பாடே இந்த "**வாசகர் சிறப்பிதழ்**" வெளியீட்டிற்கான அறிவிப்பாகும்.

ஞானச்சுடரின் கவிதைகள், கட்டுரைகள் மூலமாக வாசகர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், அறிவுபூர்வமாகத் தோன்றிய கருத்துக்கள் ஆகியவற்றை கடித ரூபத்தில் (கட்டுரைகளாக அல்ல) மலரின் ஒருபக்கத்திற்கு மேற்படாமல், மாசிமாத இறுதிக்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறு அன்பார்ந்த வாசகர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்களது அபிப்பிராயங்கள் - விமர்சனங்கள் - ஆலோசனைகள் என்பன எதிர்காலத்தில் ஞானச்சுடரின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருக்கும். அதனால், தயக்கம் எதுவுமின்றி எழுதுங்கள். கடிதத்தில் முழுமையான விலாசமும், தொலைபேசி இலக்கமும் தவறாது குறிக்கப்படவேண்டும்.

இந்த வாசகர் சிறப்பிதழில் வழமையான நமது கட்டுரையாளர்கள், கவிதையாளர்கள், வெளியீட்டுரை - மதிப்பீட்டுரை வழங்குவோர் தயவுசெய்து பங்குகொள்ள வேண்டாம். ஆனாலும் "**வாசகர் சிறப்பிதழ்**" சார்ந்த தங்களது பெறுமதிமிக்க ஆலோசனைகளைப் பேரவை வரவேற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச் சுடரே நீ வாழி

சதுர்மறைச் சீர்மையும் சமுதாயச் சீர்மையும்
புதுமைக்கும் பழமைக்கும் இணக்கமாம் சீர்மையும்
சிவாகமச் சீர்மையும் அவதார மகிமையும்
தேவாலயச் சீர்மையும் தெய்வீகப் பெற்றியும் தாங்கிவரும் இனிய சுடரே நீ வாழி!

இறை நம்பிக்கையே வாழ்வாதார மென்னும்
நிறைவான செய்திகளைத் தாங்கிவரும் திருச்சுடரே
பறையறைந்து பண்பாடு பரப்பிவரும் பரஞ்சுடரே
குறைவின்றிக் குடாநாடு மேன்மையுற மிளிர்வாய் நிறைமலரே!

பகுத்தறிவுக் கதைகளும் பக்திக் கதைகளும்
தொகுத்தே தந்திடும் தூயமலரே நீ வாழி
வரலாற்றுப் பெருமைகளும் இதிகாச மகிமைகளும்
புராணப் பெருமையும் தரமுடனே தந்திடும் தீபமே நீ வாழி!

தெய்வீகப் பணியும் திருத்தொண்டர் பணியும்
சமுதாயப் பணியும் சன்மார்க்கப் பணியும்
ஆன்மீகப் பணியும் அறநெறிப் பணியும்
பணிவுடனே ஆற்றிவரும் ஆச்சிரமத் தொண்டர்கள் வாழி!

திருமுருகன் கைக் கருவியாம் மோகனதாஸ் சுவாமிகளும்
அரும் பணியாற்றும் சைவ கலை பண்பாட்டுப் பேரவைப் பணியாளர்களும்
சீரும் சிறப்பும் பெற்று செய்யும் பணியே இறை பணியாய்
சிரத்தையுடனே சேவைகள் செய்திட திருமுருகன் அருள் தருவான்.

வையமுள்ளவரை வாழ்ந்து நல்லறம் பேணிடும் ஞானச்சுடரே
தேயாத மதியாக மலர்ந்துமணம்வீச வாழ்த்துகின்றோம்
நேயமுடன் உன்வரவிற்காய் வாசலிலே காத்திருக்கும்
தூய மலராம் ஞானச்சுடரின் வாசகர் நாம்.

வாழி வாழி ஞானச்சுடர் வாழி
வாழி வாழி ஆச்சிரமத் தொண்டர் சபை வாழி

-திருமதி ப. நடராஜா அவர்கள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**மக்கள் வங்கி இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்**

திரு சி. பத்மநாதன்
திரு வ. சண்முகநாதமுதலி
திரு ந. நாகேஸ்வரன்
திரு இ. யோகராசா
திரு தி. சிவகுமாரன்
திரு க. சண்முகலிங்கம்
திரு இ. சிவஞானசுந்தரம்பிள்ளை
திரு பி. கிருஸ்ணானந்தன்
திரு க. ஞானசீலன்
திரு த. சிவகுமார்
திரு பொ. தங்கராசா
திரு எஸ். இராஜேந்திரம்
திரு க. ஞானச்சந்திரன்
திரு க. ஸ்ரீதரன்
திரு க. அமிர்தலிங்கம்
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
திருமதி சு. விஜயகுமார்
திரு க. கலையரசன்
திரு து. பாலேந்திரா

**மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள்**

திரு க. சுசீந்திரன்
திரு க. ஸ்ரீதரன்
திருமதி வி. பிரியகாந்தினி
திருமதி பீ. கஸ்தூரி
திருமதி ச. நீரஜா
திருமதி சி. கீர்த்திகா
திரு வா. வேணுகோபாலன்
திரு த. தவேந்திரராஜா
திரு வி.கே. அரசரத்தினம்
திரு எஸ். ஸ்ரீரங்கநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லிவீதி உத்தியோகத்தர்கள்**

திரு ஆ. சத்தியமூர்த்தி
திருமதி செ. ஞானேஸ்வரி
திருமதி பி. ஜனனி
திருமதி தி லோஜினி
திருமதி இ. பத்மகலா
திரு சி. ரஜீவன்
திரு ச. சுஜென்
செல்வி சி. சியாமளா
திருமதி ஜீ சயந்தினி
திருமதி உ. குகன்யா
திருமதி க. செல்வமலர்
செல்வி மு. ஹேமப்பிரியா
திருமதி செ. உஷாந்திகா
திருமதி சு. மலர்மதி
செல்வி சு. மைவிழி
செல்வி இ. ஜமுனாவாணி
திருமதி க. பர்மிளா
திரு ஞா. யுகதாஸ்
திருமதி சிந்துலா

**மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள்**

திரு A. பிரான்ஸிஸ்
திருமதி ந. கிருஷாந்தி
திருமதி ப. ரம்யா
திருமதி எச். இசைவாணி
திரு ப. உதயணன்
திருமதி T. அனுஜா
திருமதி T வானதி
திருமதி சி. பானுஜா
திருமதி B. சிந்துஷா
திரு G. லதிகரன்
திரு P. கிருஷ்ணகுமார்
திரு பா. பிறேம்லால்
திரு G. ஜெயகணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள்**

திருமதி சு. யாழினி
திருமதி சு. வனஜா
திருமதி சி. தமயந்தி
திரு ந. தனேஸ்
திரு இ. சந்திரகோபன்
திரு தே. ரஜீவன்
திருமதி இ. சரண்யா
திருமதி சி. வித்யா
திருமதி ல. நிஷங்கா
செல்வி க. சுமித்திரா
செல்வி இ. கீர்த்திகா
செல்வி ந. ஜிராணு
திரு இ. ஆனந்தராசா

**மக்கள் வங்கி யாழ். கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள்**

திரு P. சஞ்சீவ்
செல்வி நா கிருஷிகா
செல்வி லி. மயூரி
திருமதி S. லாவண்யா
திருமதி லி. உஷா
திரு சி. பகீரதன்
திருமதி கோ. பிரதக்ஷி

**மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள்**

திரு ப. பார்த்தீபன்
திரு கு. வெங்கடேஷ்
திருமதி தி. புஷாலினி
திருமதி கி. மனஸ்வினி
திருமதி ஜெ. பகீரதி
திரு ம. சுவிற்சன்
திரு பி. தேவநேசன்
திரு ம. லம்போதரன்
திரு தெ. ஹர்சன்
திருமதி தி. சசிதேவி
திரு கோ. அஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி செ. உஷாநந்தினி
திரு ச. ஜணாங்கணன்
செல்வி கே. சாருலதா
திரு ச. சுகிர்தகுமாரி
செல்வி ப. ஜர்மிளா
திருமதி பி. சிவசொரூபி
செல்வி மு. தர்சனா
திரு இ. ஜெயகாந்தன்
திரு வி. கஜதீபன்
செல்வி ச. ஹம்சா
திரு எஸ். ரமணிகரன்
ஒரு அன்பர்

**மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள்**

திருமதி உ. தனுஷ்யா
திருமதி ப. சுதர்ஷினி
திருமதி ஜசிகா
திருமதி அ. சுகன்யா
திருமதி ப. பிரதீபா
செல்வி ப. நிருஜா
திரு ச. கெங்காதரன்
திருமதி ஜிந்துஜா

**மக்கள் வங்கி காங்கேசந்துறை உத்தியோகத்தர்**

திரு க. ரமேஸ்நேசன்

**மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள்**

திரு க. விஜயகுமார்
திருமதி கா. மீரா
திரு ம. மாலவன்
திரு பா. சீராளன்
திருமதி இ. ஆர்த்திகா
திருமதி இ. சுமணா
திரு என். சஞ்சீவ்
திரு ச. கிரீடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி M. சிந்துஜா
செல்வி S. கிருபாளினி
திரு மு. தெய்வேந்திரம்

**மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள்**

திரு S. சிவகுமார்
திரு A. ஹரிகேசன்
திரு R. வாகீசன்
திருமதி K. பிரசாந்தினி
செல்வி S. துவாரகா
செல்வி R. சசிதா
செல்வி K. கௌதமி

**மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள்**

திரு க. வாசு
திரு செ. உமாசங்கர்
திரு ம. வைகுந்தவாசன்
திருமதி ச. கிருத்திகா
திருமதி கே. உதயசாந்தி
திருமதி கே. தர்சிகா
திருமதி பி. அர்ச்சனா

**மக்கள் வங்கி நெல்லியடி உத்தியோகத்தர்கள்**

திருமதி எஸ். ராதிகா
செல்வி ஞா. அனோஜா
செல்வி இ. அஞ்சனா
செல்வி ம. சுபேந்தினி

**மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள்**

திரு ச. சர்வானந்தன்
திரு தெ. ஆனந்த்
திரு வி. ஜெயமோகன்
திரு சி. மனோராஜ்
திரு க. கமலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ஆ. பரணன்

திருமதி ஜெ. நிமாலினி

திருமதி த. சுகந்தி

திருமதி சு. மாதங்கி

செல்வி சி. பிரசாந்தினி

செல்வி செள. யாழினி

திருமதி த. சங்கீதா

செல்வி இ. வாஹினி

**மக்கள் வங்கி பரந்தன் உத்தியோகத்தர்கள்**

திருமதி ம. அகிலா

திரு க. தேவராசா

திரு என். கோபி

திருமதி தி. லதாஜினி

திருமதி எஸ் பத்மினி

திரு பொ. ஜெகதீசன்

திரு T. லிங்கராஜ்

திரு த. ரஜிந்தன்

**மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள்**

திரு அ. ஐங்கரன்

திரு க. மதிவதனன்

திரு ம. பிரேம்குமார்

திரு எஸ். துஷாந்தன்

திருமதி கு. வையெந்தி

**மக்கள் வங்கி மட்டக்களப்பு உத்தியோகத்தர்**

செல்வி வ. கனகசபை

**மக்கள் வங்கி வன்னி மாவட்ட உத்தியோகத்தர்கள்**

திரு சி. நித்தியானந்தன்

திரு கு. கோடீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி கலைச்செல்வி தயாளன்**

(திருகோணமலை)

**திரு S. திருநாவுக்கரசு**

(அச்செழு, நீர்வேலி)

**திரு E. செல்வேஸ்வரன்**

(பாட்டா பாதணி முகவர், திருமலை)

**திரு த. கணேசமூர்த்தி**

(நிறைவேற்று அதிகாரி, இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

**திரு பொ. பாலசிங்கம்**

(காசாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

**செல்வி ஹரினி ஹரிதரன்**

(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)

**செல்வி ஹம்ஷாலினி ஹரிதரன்**

(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி)

**திரு பா. இராசேந்திரம்**

(இளை. கி. சேவகர், உடுப்பிட்டி)

**திரு செ. மதியாபரணம்**

(வளர்மதி புடவை அகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்)

**திரு நீ. சுப்பிரமணியன்**

(இளை. உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச, உடுப்பிட்டி)

**செல்வி தட்சாயிணி செல்வமாணிக்கம்**

(நாவலடி, உடுப்பிட்டி)

**திரு வே. இரத்தினசிங்கம்**

(சிவசக்தி மோட்டோர்ஸ், பருத்தித்துறை)

**திரு சி. கணேசலிங்கம்**

(தமிழ்ப்பூங்கா, நெல்லியடி)

**உரிமையாளர்**

(பெசன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(பெற்றா ஏசென்ஸ் விநியோகத்தர், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு சிவஞானம் கிருபாகரன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**திரு மு. சரவணபவான்**
(கலைமகள் விலாஸ், சங்கானை)

**செல்வி நா. ஜெயராணி**
(இளை. அதிபர், சங்கானை)

**திரு இ. கோபாலசுந்தரம்**
(சதா வெதுப்பகம், உரும்பராய்)

**திரு J. பிரபாகரன் மாஸ்ரர்**
(நெல்லியடி)

**திரு க. நாகராசா**
(காங்கேசந்துறை)

**திரு இ. சொக்கலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி, கைதடி)

**திரு கு. கங்கைவேணியன்**
(உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்)

**திரு ந. சத்தியரூபன்**
(சிறி நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**திரு க. சோமசேகரம்**
(மகாராணி புடவையகம், யாழ்ப்பாணம்)

**திரு ஐ. சிவகுமார்**
(சுதுமலை கிழக்கு, மானிப்பாய்)

**திருமதி வ. தபேந்திரன்**
(உப அஞ்சல் அதிபர், குப்பிளான்)

**திரு க. இராசநாயகம்**
(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், தொட்டிலடி, சங்கானை)

**திரு R.S. தனபாலன்**
(பாலன் மில், வட்டுக்கோட்டை)

**திரு சி. சச்சிதானந்தம்**
(சச்சியா இரும்பகம், வட்டுக்கோட்டை)

**உரிமையாளர்**
(V.M.K. நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**திரு வே. பொன்னம்பலம்**
(பாக்கியரெத்தினம் இரும்பு விற்பனை நிலையம், சங்கானை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையாளர்
(சாரங்கா நகைமாடம், யாழ்ப்பாணம்)

திரு வல்லிபுரம் சிவகுமாரன்
(சங்கானை)

உரிமையாளர்
(வெங்கடேஸ்வரா, யாழ்ப்பாணம்)

திரு இ. இராசநாயகம்
(துர்க்கா மரக்காலை, சண்டிலிப்பாய்)

திரு ஆ. சுந்தரலிங்கம்
(இளை. பிரதம அஞ்சல் அதிபர்)

திரு நா. கந்தப்பு
(தோப்பு, அச்சுவேலி)

திரு க. தர்மலிங்கம் J.P.
(நீர்வேலி)

திரு மு. தர்மலிங்கம்
(சிங்காரராசா வாசா, உடுப்பிட்டி)

உரிமையாளர்
(வே. கந்தையாபிள்ளை அன்சன்ஸ், யாழ்ப்பாணம்)

உரிமையாளர்
(மலாயன் கபே, யாழ்ப்பாணம்)

திரு ஜெ. இராஜகோபால்
(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

திரு சேனாதிராசா சற்குணராசா
(பண்டத்தரிப்பு)

திருமதி பாலகிருஸ்ணன் சிவனேஸ்வரி
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)

திரு க. இராஜதுரை
(நீர்வேலி)

திரு த. சிவசுப்பிரமணியம்
(லீலா வெதுப்பகம், சங்கானை)

திரு Dr சி. இராசலிங்கம்
(இளை. வைத்திய பொறுப்பதிகாரி, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஜனையே வாழ்வின் இரசனை! அதன் பலனோ நாளும் நமக்குப் பசனை!

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஆன்மீகத் தேட்டத்தையும், சமூக இசை வாக்கத்தையும், இடையறாத பக்தியையும், வாழ்க்கையில் அதிசயங்களையும் தரவல்ல மாபெருஞ்சக்தி பஜனைக்குண்டு. இதில் சாதனை செய்யும் ஒவ்வொரு பக்தனுக்கும் மேற்கூறிய அனுபவமும், அற்புதமும், ஆச்சரியமும் ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றை வெறும் ஒப்பாசாரத்திற்காக எழுதுவதாக யாருமே எண்ணிவிட வேண்டாம். யோகர்சுவாமிகள் கூறியதுபோல, முழுதும் உண்மை. நான் கூறுவது சகல மதங்களுக்கும் பொதுவானதாக இருந்தாலும், இந்து சமயத்தவர்களுக்கு மிகவும் தேவைப்படும் ஒரு வரப்பிரசாதமாக "பஜனை" வரம் பெற்றுள்ளது. பொதுவாக இந்தியா, இலங்கை, மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலேயும் இது பெரும்பேறுக்கு வழி சமைத்ததெனலாம். யாழ்ப்பாணத்தில் பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, கூட்டு வழிபாடு என்ற ஒரே பொருள் தரும் இரசனைக்கு நிகர் வேறொன்றில்லை. ஆண்டவனுக்கும் அடியவனுக்கும் இடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துவதில் வல்லமை பெற்றதே இந்த பஜனை என்றழைக்கப்படும் கூட்டுப்பிரார்த்தனையாகும்.

**பஜன் (பஜனை)**

இந்தியாவில் குறிப்பாக வட இந்தியாவில் "பஜன்" என்ற உருப்படிதான், தமிழில் "பஜனை" என்றழைக்கப்பட்டு, சுத்தமாகக் "கூட்டுப்பிரார்த்தனை" என்று இப்பொழுது ஆலயங்களில் பிரபல்யம் பெற்றுள்ளது. தெய்வீகம் சொட்டும் வார்த்தைகளை இசையிலும், தாளத்திலும் தோயும் வண்ணம் குழைத்து பின்னர் பக்தி என்னும் சுவையில் நனைத்து, கேட்போரைக் கேட்ட மாத்திரத்தில் பரவசப்படுத்தி, எல்லாம்வல்ல இறைவனிடம் சரணாகதியடையச் செய்வதே பஜனை என்ற உருப்படியாகும். ஆகவே இவையெல்லாவற்றிற்கும் ஆதார சுருதியாக அமைவது, இறைவனிடத்தே பெருகும் மாறாத, வற்றாத காதலாகும்.

காதலாகி, கசிந்து, கண்ணீரமல்க ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது பஜனையாகும். நாயன்மார் காலத்தில் இந்த கூட்டுப் பிரார்த்தனை உயிர்பெற்றது எனலாம்.

யாவரையும் இறைவனிடத்தே அழைத்துச் செல்லக்கூடிய ஒருவரோ, இருவரோ, பலரோ சமத்துவமாக ஆலயத்தின் பொருத்தமான இடத்தில் அமர்ந்து சிவசின்னங்களான திருநீறு, உருத்திராக்கம் தரித்து, வேட்டி சால்வை உத்தரியமுடன், சுவாமி எழுந்தருளும்படி வேண்டி ஓம்கார ஒலியெழுப்பி ஓதுவோரையும், பாடுவோரையும், கேட்போரையும் ஒருமுகப்படுத்துவதே இதன் சிறப்பாகும். விரும்பிய அடியார்கள் இக்குழுவில் ஈர்க்கப்படுகிறார்கள். ஏகனாகி, அனேகனாகி பஜனையில் சங்கமமாகி ஆலய வளாகத்தை அடியார் கூட்டமாக்கி நிறைவிக்கின்றார்கள். இதில் எந்தவித பாகுபாடின்றி, வேறுபாடின்றி, பிரிவின்றி, யாதுமூரே யாவரும் கேளிரென, ஒன்றே குலமாக, சமத்துவமாகக் கலந்து மெய்மறந்து பாடப்படுகிறது. இ்.து ஓர் உன்னத சகவாழ்வின் உச்சக்கட்டமாகும். உலகம் சொல்கின்ற சூட்சமும் இதுவாகும். பொதுவாகப் பெரிய அறிவாளிகள்கூட இதிலே

*பிறருக்குக் கொடுத்து உண்ணும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்காளிகளாக வாய்விட்டுப் பாடுகிறார்கள். நோய் விட்டுப் போகிறது. யாழ்ப்பாணத்தில் பஜனைக்குப் போதிய அங்கீகாரம் கிடைக் காதிருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய தாகும். அங்கீகாரம் என்பது சமயத்தைப் பொறுத்தவரையில் இடமளிப்பது, அனுமதிப் பது, வரவேற்பது, பெறுமதியாக்குவது, வெகு மதியாக்குவது, விட்டுக்கொடுப்பது, வரமளிப் பது, வாழ்வளிப்பது, வாழ்த்துவது எனப் பலவகையாலும் குறிப்பிடலாம். மாறாகத் தடுப்பதோ கட்டுப்படுத்துவதோ ஆகாது.

**தகுதி**

பஜனையில் பங்குபற்றுவதற்கு எந்த விதப் பட்டமோ, படிப்போ, பணமோ, அங்கத் துவமோ, நற்சான்றுப் பத்திரமோ, அறிமுகமோ தேவையில்லை. பக்தி மட்டும் இருந்தால் போதுமானது. இன, மத, மொழி, குல பேதங் களுக்கு அப்பாற்பட்டதே பஜனையாகும். முக்கியம் மிகுந்த ஆசார சீலர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும், பணிவுள்ளவர்களாக வும் இருக்கவேண்டும். சுருதியோ, தாள விளக்கமோ, சங்கீத சாஸ்திரீய அறிவோ இதற்கு அவசியமில்லை. கேள்விஞானம் இருந் தால் போதுமானது. சிவன், அம்பிகை, பிள்ளை யார், முருகன், வைரவர், காளி, விஷ்ணு, சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை, நவக்கிரக நாயகர்கள், அனுமான், ஐயப்பன் என பல தெய்வ வழிபாட்டு அம்சங்களைக் கொண்ட அகண்ட நாம பஜனைப் பாடல்களைக் கேட் டுக் கேட்டுச் சொல்லிக்கொள்ள வாயானது தன்பாட்டில் பாட தன்னை வாலாயப்படுத்திக் கொள்ளும். காலப்போக்கில் ஏற்பட்ட வாலாய மானது- பஜனையைக் கொண்டுநடாத்தும் தலைமைக்கு அவரைப் பொறுப்பாக்கும். மேலும் உச்சரிப்பு, சொல்லாட்சி, சொல் மாட்சி, சொல் இனிமை, சொற்சேர்மானம், சொற்பொருள், சொற்பிரிப்பு, சொற்புணர்ச்சி யாவுமே பஜனைமூலம் பாடுபவரையும் கேட் போரையும் தகுதியுள்ளவனாக்கும். இத்தகு குரு சிஷ்ய பாரம்பரிய பக்தியில் - பஜனைக் குழுவினர் திளைப்பதனால், இந்து கலாச்சார அமைச்சும், இந்து நிறுவனங்களும் உரிய ஊக்குவிப்புக்கள் செய்வது பஜனைக் குழு வினருக்கு மென்மேலும் தாற்பரியத்தை ஏற் படுத்தும். அவர்களின் எல்லையைக் கட்டுப் படுத்தாது மேம்படுத்துவது பக்திக்கு வழி சமைக்கும். இந்தியாவில் ஒரு தொலைக்காட்சி பஜனைக்கு முக்கியத்துவம் கொடுத்து பரிசளித்து வருவது எம்மத்தியில் ஒரு விழிப் புணர்வினை உருவாக்கியுள்ளது. நல்லூர், சந்நிதி, கதிர்காமம், கும்பழாவளை, பொன் னாலை, இணுவில், மருதனார்மடம், நயினா தீவு, அளவெட்டி, கேணிக்கரை, அலுக்கை, திருவடி நீழல், மாவிட்டபுரம், கீரிமலை, திருக் கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், காரை நகர், ஏழாலை, தெல்லிப்பளை, சுன்னாகம், பன்னாலை ஆகிய திருப்பதிகளில் பஜனை யாம் கூட்டுப்பிரார்த்தனை சிறப்பாக நடை பெற்று வருகிறது. பாராட்டப்படவேண்டியதொன் றாகும். சுமார் எழுபத்திரண்டு வருடங்களாகப் பொன்னாலைக் கிருஷ்ணன் கோவிலில் பஜனைக்கு உரமூட்டி வரமீந்த நாராயண தாசன் (சிவகுருநாதன்) அவர்கள் 31.10. 2016இல் வைகுந்தம் சென்ற செய்தி, பஜனை வரலாற்றில் ஒரு ஆவணமாகிறது.

முக்கியமாக, நாம சங்கீர்த்தனம், பஜனை, கூட்டுப்பிரார்த்தனை யாவற்றிற்கும் பக்தியை அடிப்படையாகக்கொண்டு இசைக் கருவிகள் அணி செய்கின்றன. அவற்றுள், ஹார்மோனியம், டோல்கி, சிப்லாக்கட்டை, தாளம், மத்தளம், உடுக்கு, சதங்கை, கெஞ் சிரா, புல்லாங்குழல், தபேலா, மிருதங்கம் எனப் பல சுவைகொட்டும் இசைக்கருவிகள் நாளடைவில் இடம்பிடித்து முதன்மை பெறு கின்றன. ஹார்மோனியம் எவர் குரலையும்

*மதியின் வல்லமையைக் காட்டிலும் விதியின் வல்லமை பெரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவ்விப்பிடிக்கும் உன்னதக் கருவியாகும். எது எப்படியிருப்பினும், பஜனையும், நாம சங்கீர்த்தனமும், கூட்டுப்பிரார்த்தனையும் இப் பொழுது சுருதி, லய இரசனைக்குள் வந்து விட்டது. எப்படியெனில், சமூகமானது தொலைக்காட்சி நிகழ்வுகளில் அதிகம் ஊறிப்போய் உள்ளதனால் கேள்விஞானம் மலிந்துள்ளது. இதன்பேறாகப் பஜனை இரசனை மிக்கதாகச் சமூகத்தவர்களால் போற்றப்படுவதற்கு, ஆலயங்கள் சம்பந்தப்பட்டவர்களை வளம்பெறச் செய்ய ஆவனபுரிதல் வேண்டும். கௌரவமளித்தல், மேடையேற்றுதல், பரிசளித்தல், அந்தஸ்து பெறச் செய்தல், போட்டிகள் நடாத்துதல், அங்கீகாரமளித்தல் போன்ற கைங்கரியங்களினால் வாழ்விலே இரசனையையும், அதன் பேறாக நமக்குப் புதியதான வாழ்வின் பிடிப்பையும் பஜனை பெற்றுத் தரும் எனத் திடமாக நம்பலாம்.

**தைப் பொங்கல் திருநாளே வருக!**

காலமெலாம் தம் கடின உழைப்பினாலே,
கழனிகளில் நெல் வளர்த்து, விளைவினாலே,
ஞாலத்திற் குணவளிக்கும் உழவர், தமக் குதவுகின்ற
ஞாயிறினை வணங்கி வரவேற்றுப், புதிதெடுத்துப்
பாலமுதப் பொங்கல் பொங்கிப் படையலிட்டுப்
பக்தியொடு நன்றியினைச் செலுத்த வந்த
மேலான தைப் பொங்கல் திருநாளே வருக!, யாரும்
மெச்சுகின்ற வண்ணமதாய் மேன்மைகளையே தருக!!

முற்றத்தில் கோலமிட்டுக் கும்பம் வைத்து,
முறையாக அங்கழகுப் பந்தல் கட்டி,
அற்புதமாய் அவ்விடத்தை அலங்கரித்து
அடுப்பேற்றிப் புதுக் கலசந்தன்னில், நல்ல
புத்தரிசி, பால், பழம், சர்க்கரை இவைகளைச் சேர்த்து
பொங்கலிட வந்த திருநாளே! நின்னை
மெத்த மகிழ்வோடு வரவேற்றோம் யாமே! இங்கு
மென்மேலும் உயர வழி காட்டுவாயே!!

பொங்கிப் புதிதினையே படைத்து, இன்பம்
பொங்கிடவே அகமகிழ்ந்து அனைவரோடும்
இங்கிதமாய்ப் பகிர்ந்துண்ண வந்த எங்கள்
இனிய தைத் திருநாளே! வருக! வாழ்வில்
மங்களங்கள் பொங்கிடவும், மனைகள் சிறந்திடவும்
மனங்களிலே உயர்வான எண்ணங்கள் மலர்ந்திடவும்,
தங்கத் தமிழர்தம் தைத்திரு நாளே வருக!
தானம், தவம் யாவும் தளைத்திங்கு மிக ஓங்க!

-கி. குலசேகரன்-

*விலக நினைப்பவன் வெல்லுவதில்லை; வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

30. சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணினைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

**ப-ரை:**

வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை- வலிய எழுந்தருளி வந்து அடியேனை ஆளாகக்கொண்டு எனது உள்ளத்துள்ளே புகுந்தருளிய வித்தையை யுடைய, மால் அமுத பெரு கடலே- யாவ ராலும் விரும்பத்தக்க அமுதப் பெருங்கடலே, மலையே- அருண்மலையே, செந்தாமரை காடுஅனைய மேனி தனி சுடரே- செந்தாமரை மலர்களின் நெருக்கத்தை ஒத்த திருமேனி யையுடைய ஒப்பற்ற சுடரே, நாயினேன் தன் சிந்தனை நின் தனக்கு ஆக்கி- நாய்போன்ற கீழ்மையுடையேனது நினைவு முழுவதையும் உனக்குரியதாகச் செய்து, கண் இணை நின் திருபாதம் போதுக்கு ஆக்கி- என் இரு கண்களையும் நின்றிருவடி மலர்களுக்கு உரியனவாக்கி அவற்றைக் கண்டுகளிக்கும் வண்ணம் அமைத்து, வந்தனையுரும் அம் மலர்க்கே ஆக்கி- வழிபாட்டினையும் அத் திருவடி மலர்களுக்கே அமையச் செய்து, வாக்கு உன்மணி வார்த்தைக்கு ஆக்கி- என் மொழியினையும் நின்னைப்பற்றிய மாணிக்கம் போன்ற வாசகங்களுக்கு உரிமை யாக்கி, இரண்டு இலி தனியனேற்கு- முழு வதும் சத்தாகிய தன்மையும் முழுவதும் அசத்தாகிய தன்மையுமில்லாதோனாகிய சதசத்தாயிருக்கின்ற தனித் தன்மையுடையே னாகிய எனக்கு, ஐம்புலன்கள் ஆர உன்னை தந்தனை- கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல நுகர்வும் நிறைவுறு வண்ணம் உன்னையே எனக்குத் தந்தருளி னாய். உன் அருட்பெருஞ் செயலை என் னென்பேன்.

வலிய எழுந்தருளி வந்து அடியேனை ஆட்கொண்டு எனது உள்ளத்தின்கண்ணே புகுந்தருளிய விச்சையையுடைய யாவராலும் விரும்பத்தக்க அமுதப் பெருங்கடலே, மலையே, செந்தாமரைக்காடனைய திரு மேனிச் தனிச் சுடரே, நாய்போன்ற கீழ்மை யுடையேனது நினைவு முழுவதையும் உனக் குரியதாகச் செய்து என் இரு கண்களை யும் நின்றிருவடி மலர்களுக்கு உரியனவாய் அமைத்து வழிபாட்டினையும் அத்திருவடி

*வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்களுக்கே அமையச் செய்து என்மொழி யினையும் நின்னைப்பற்றிய மாணிக்கம் போன்ற வாசகங்களுக்கே உரிமையாக்கி இரண்டுமிலித் தனியனேற்கு ஐம்புல நுகர்வும் நிறைவுறும் வண்ணம் உன்னையே எனக்குத் தந்தருளினாய்; நின் அருட்பெருஞ் செயலை என்னென்பேன் என்றவாறு.

உலகியல் நினைவு பிறிதொன்று மின்றித் தன்னையே எப்பொழுதும் நினைந்து கொண்டிருக்கும் வண்ணம் இறைவன் செய் தமையால் "சிந்தனை நின்றனக்காக்கி" என்றார். "என்னை நினைந் தடிமைகொண் டென்னிடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்" எனப் பதினொராந் திருமுறை யில் (விநாயகர் திருவிட் 1) வருதலுங் காண்க. சிந்தனை- நினைவு. கண்கள் எங்கு நோக்கினும் காண்பது இறைவன் திருவடி களையேயாதலின் "கண்ணினை நின்திருப் பாதப் போதுக்காக்கி" என்றார். தான் செய் யும் வழிபாடுகள் முழுவதும் அத்திருவடி மலர்களுக்கே அமைந்தமைபற்றி "வந்தனை யும் அம்மலர்க்கே யாக்கி" என்றார்.

வாயினால் மொழியும் மொழிகள் இறைவனைப்பற்றிய மணிவாசகமாக அமைந் தமை பற்றி "வாக்கு உன் மணி வார்த்தைக் காக்கி" என்றார். "மாசின் மணியின் மணி வார்த்தை- பேசிப், பெருந்துறையேயென்று பிறப்பறுத்தேன்" (பண்டாய 7) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. "வாக்குன் மணிவார்த்தைக்காக்கி" என உடம்பொடு புணர்த்தலால் அடிகள் இறைவனைப்பற்றி அருளிய அருட்பாடல்கள் "மாணிக்கவாச கம்" ஆனமை அறியப்படும். இது குறித்தே அடிகள் "மாணிக்கவாசகர்" என அழைக்கப் பட்டனர்போலும். ஆக்கி என்ற வினையெச் சங்கள் நான்கும் இறைவன் செயலாக, அவை தந்தனை என்னும் இறைவன் வினை யொடு முடிந்தன.

ஐம்புலன்கள் ஆர என்றது கண் முதலிய பொறிகளால் நுகரப்படும் காட்சி முதலிய புலன்கள் ஐந்தும் நிறைவுறும் வண்ணம் இறைவன் அருளியமைபற்றி என்க. வந்தனை என்னும் முன்னிலையொருமை வினைமுற்று, வந்து என்னும் செய்தனெச்சப் பொருளில் வந்தது.

இறைவன் இவ்வுலகில் ஞானாசாரிய னாக வலிய எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொண்டமையின் "வந்தனை யாட் கொண்டு" என்றார்.

"பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு" அம் 1.
"சிவனவனி வந்தருளி, எந்தரமும் ஆட்கொண்டு" அம் 3.
"இப்புறத்தே..... மாதினொம் வந்தருளி..... அந்தணனாய் ஆட்கொண்ட" கோத் 4.
"அந்தணனாகி வந்திங்கே..... என்னையு மாட்கொண்டருளும்" குயிற் 10.
"குணக்கடல்..... அணைந்து வந்தெனை
ஆண்டுகொண்டருளிய அற்புதம்" அற் 6.
"பக்தர்சூழப் பராபரன் வாரில் வந்து பார்ப்பானென..... எத்
தனாகிவந்தில் புகுந்தெமை ஆளுங்கொண்டு" சென்னிப் 4.

என அடிகள் பிறாண்டு அருளியவாறுங் காண்க.

உள்ளே புகுந்த- உள்ளத்தினுட் புகுந்த, "வந்தென் உளம் புகுந்த ஆரியனை" (அம்2) "சிவபெருமான் ஊனாடி நாடிவந் துள்புகுந்தான்" (பூவல்5) "ஆட்கொண்ட வள்ளல் ஊன்பழித் துள்ளம் புகுந்து" (குயில்4) என வருவன காண்க.

*தட்டிப்பறித்தவன் வாழ்ந்ததில்லை. விட்டுக்கொடுத்தவன் வீழ்ந்ததில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விச்சை- வித்தை. "கல்லை மென்கனி யாக்கும் விச்சை கொண்டு" (சத94) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. மால்- விருப்பம், வேட்கை. "மயக்கம் வேட்கை மாலென் றுரைப்பர்'' பிங் 10:931 இறைவன் அடியார்கள் பருகுவதற்கேற்ற அமுதப் பெருங்கடலாயுள்ளானாதலின் "அமுதப்பெருங் கடலே" என்றார்.

"கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே" நீத் 12.

"திரைபொரா மன்னு மமுதத் தெண்கடலே" கோயிற் 3.

என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. "கடலே" என்றது கொள்ளக் குறைவுபாடாமைபற்றியென்க. "கொளக் குறைபடாமையின் முந்நீரனையை" (பதிற் 90:16) என்றார் பிறரும்.

உலகமும் உயிரும் தன் வியாபகத்துள் அடங்கி நிற்பினும் தான் அவற்றால் தாக்குண்ணாது அசைவற நிற்றல் பற்றி "மலையே" என்றார். "தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு"(தெள் 18) என்பது ஈண்டைக்கேற்ப அறியற்பாலது. உன்னைத் தந்தனை- உன்னை அடியேனுக்குத் தந்தனை. "தந்ததுன் றன்னைக் கொண்ட தென் றன்னை" (கோயிற் 10) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. இறைவன் திருமேனி வெம்மையில்லாத ஒப்பற்ற தழல்வடிவமாதல் பற்றிச் "செந்தாமரைக் காடனைய மேனித் தனிச்சுடரே" என்றார். "அந்தாமரை மேனியப்பா" (நீத் 29) எனவும் "சீருடைச் செங்கமலத்தில் திகழுருவாகிய செல்வன்" (குயில் 9) எனவும் வருவன காண்க. "செந்தாமரை வண்ணன் தீர்த்தச் சடையன்" எனப் பதினொராந் திருமுறையில் (திருவாரூர் மும்மணி 12) என வருதலும் ஈண்டு அறியற்பாலது. காடு என்றது தாமரையின் நெருக்கத்தைக் குறித்தது. "தாமரைக் காடு போன்றார்" என்பதற்கு "தாமரையின் நெருக்கத்தை யொத்தார்'' என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையுங் காண்க. (சீவக 2199 உரை).

இரண்டுமிலி என்பது இரண்டுமில்லாதவன் எனப் பொருள்படும். அவ்விரண்டினையும் இருவினைகள் என்றும், ஆக்கக் கேடுகள் என்றும் நூலறி அனுபவ அறிவு என்றும் உரைப்பர். இருவினைகள் நீங்கியிருப்பின் அடிகள் திருமேனி நில்லாது. "வினைப் போகமே யொருதேகங் கண்டாய்" எனப் பட்டினத்தடிகள் அருளியமையுங் காண்க. ஆக்கக் கேடுகள் நீங்கியிருப்பின் அஃது இடைப்பட்ட பயனாமன்றி அடிகளின் குறிக்கோளன்றாம். நூலறிவு அநுபவவறிவு எனக் கொள்ளின் ஈரெட்டாண்டெல்லைதனில் எக்கலையுங் கற்றுணர்ந்து முதன் மந்திரியாய் அமர்ந்திருந்த அடிகளுக்கு அவ்வறிவுகள் இல்லையெனல் அமையாது. பின்னை, இரண்டும் என்றது என்னையெனின் இறை உயிர் உலகு என்னும் மூன்றனுள் இறை சத்து; உலகு அசத்து; உயிர் இறையை நோக்க அசத்தாதலும் உலகினை நோக்கச் சத்தாதலும் உடைமையின் சதசத்து. "இருதிறனறிவுள்ள திரண்டலா தான்மா" எனச் சிவஞானபோதம் ஏழாஞ் சூத்திரத்து வருதலும், "பாரிசேட வளவையான் இருதிறனறிவுள தொன்றுண்டென்பது பெறப்படுதலின் அதுவே சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய இரண்டுமின்றிச் சதசத்தாயுள்ள உயிராம்" என்னும் அப்பகுதிப் பொழிப்புரையும் ஈண்டறியற்பாலன. உயிர்களுக்குச் சார்ந்த தன் வண்ணம் உண்மையால் கடவுளைச் சார்ந்து அறிவிக்க அறிந்து ஈடேறுதலும், உலகினைச் சார்ந்து பிறப்பு இறப்பு அடைந்து உழலுதலுமுண்டு. உயிர் வியாபக சத்தாகிய இறையுள் அடங்கிய வியாப்பியச்

*நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தாகும். உலகு வியாப்பிய அசத்தாகும். இங்ஙனம் உயிருக்குச் சத்தாதற்றன்மையும் அசத்தாதற்றன்மையும் உண்டெனின் அத்தன் மைத்தான பிறபொருள்களுமுண்டோ என்னும் வினா நிகழும். அதற்கு விடை, காண்டற்கருவியாகிய கண் தனக்கு ஒளியின் உதவி கிடைத்தவழி காண்டலும் அ∴தில்வழி காணமாட்டாமையும், சார்ந்ததன் வண்ணமாகிய பளிங்கு ஒளியின் உதவி பெற்ற வழி விளங்குதலும் அ∴தில்வழி விளங்காமையும் காண்டுமன்றே. ஆதலால் இரண்டு மிலித்தனியனேன் என்றது முழுவதும் சத்தாதலும் முழுவதும் அசத்தாதலும் இன்றிச் சதசத்தாயிருக்கின்ற தனியனேன் என்றதாறு. இன்னும் உணர்வு சிறிதுமில்லாத உலகினை நோக்கச் சிற்றறிவுடைய உயிர் சித்தாதலும், பேரறிவுடைய இறைவனை நோக்க அசித்தாதலுமுண்மையின் சிதசித்தாயிருக்கின்ற தனியேன் எனவும் உரைக்கலாம். உயிரைச் சதசத்து எனவோ சிதசித்து எனவோ கொள்ளுதல் சத்தாதல் அசத்தாதல்; சித்தாதல் அசித்தாதல் நிரம்பப் பெறாமைபற்றியாகும். தனியனேற்கு உன்னைத் தந்தனை என முடிக்க.

இதன்கண் என் மனமொழி மெய்கள் நின்னைச் சிந்தித்தலும் புகழ்ந்துரைத்தலும் வழிபடுதலுமாகிய செயல்கள் செய்யுமாறு ஆக்கி உன்னைத் தந்தனை என்பதனால், மனமொழிமெய்கள் தாமாக நினைந்து புகழ்ந்து வழிபடமாட்டா என்பது பெறப்படுதலின் சுட்டறுத்தல் என்னும் மூன்றாம்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 26.

31. தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்க.

**ப-ரை:**

முனைவனே- வினையினீங்கி விளங்கிய அறிவினையுடையவனே, தனியனேன்- இரண்டுமிலியாகிய தனித்தன்மையுடையனாகிய யான், பிறவி பெரு பௌவத்து- பிறவியாகிய பெரிய கடலில் விழுந்து, எவ்வ தடதிரையால் எற்றுண்டு- பிறவித் துன்பமாகிய பெரிய அலைகளால் எறியப்பட்டு, பற்று ஒன்று இன்றி- பற்றுக்கோடு யாதும் இல்லாமல், கனியை நேர் துவர் வாயார் என்னும் காலால் கலக்குண்டு- கொவ்வைப் பழத்தினை ஒத்த சிவந்த வாயினையுடைய மகளிர் என்னும் சுழல் காற்றினால் மனக்கலக்கம் எய்தி, காம வான் சுறவின் வாய்ப்பட்டு- காமமாகிய பெரிய சுறாமீனின் வலையில் அகப்பட்டு, இனி உய்யும் ஆறு என் என்று எண்ணி- வருந்துகின்ற இந்நிலையில் உய்வதற்கு வழி யாது என்று பலகால் நினைந்து, அஞ்சு எழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை- திருவைந்தெழுத்தாகிய தெப்பத்தைப் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு கிடக்கின்றவனாகிய என்னை, ஆட்கொண்டு- அடிமை கொண்டருளி, மூர்க்கனேற்கு முதல் அந்தம் இல்லா மல்லல் கரை காட்டினாய்- மாறுபட்ட குணத்தினையுடைய

*வருத்தமோ துன்பமோ இன்றி எவராலும் எளிதில் வெற்றிபெற முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு தோற்றமும் அழிவுமில்லாத வளப்பம் பொருந்திய முத்திக்கரையைக் காட்டியருளி னாய். நின் பெருங்கருணையை என்னென்பேன்.

முனைவனே. தனியனேன் பிறவி யாகிய பெருங்கடலில் விழுந்து பிறவித் துன்பமாகிய பேரலைகளால் எறியப்பட்டுப் பற்றுக்கோடு யாதும் இல்லாமல் மகளிர் என்னும் சுழல் காற்றாற் கலக்குண்டு காம மாகிய பெரிய சுறவின்வாயில் அகப்பட்டு வருந்துகின்ற இந்நிலையில் உய்வதற்கு வழி எதுவாம் என்று எண்ணித் திருவைந்தெழுத் தாகிய தெப்பத்தினைப் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு கிடந்தவனாகிய என்னை ஆட்கொண்டு மூர்க்கனேற்கு தோற்றமும் அழிவுமில்லாத முத்திக்கரையைக் காட்டி அருளினாய். நின் பெருங்கருணையை என்னென்பேன் என்பதாம்.

தனியனேன் கிடக்கின்றேனை எனக் கூட்டிக் கிடக்கின்ற தனியனேனை என்பது கருத்தாகக் கொள்க. பிறவியைக் கடல் என்றார். காரண காரியத் தொடர்ச்சியாய் இடையீடின்றி வருதலின், "பிறவியென்னுமிக் கடலை நீந்த" (சென்னிப் 4) "மேலைப்பிறப்பு முந்நீர் கடக்க" (பாண்டி 9) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. பிறவி யைப் பௌவம் என்றதற்கேற்பப் பிறவி அடைந்த உயிர்களைத் தாக்குவனவாகிய தன்னால் வருவதும் பிறவுயிரால் வருவதும் தெய்வத்தால் வருவதுமாகிய பிறவித் துன்பங் களைத் திரையாக உருவகித்தார் பிறவிகட லாக, துன்பங்கள் திரையாக, அக்கடலில் எழும் சுழல் காற்றுப்போலாக மாதர் கலக்கு தலின் "துவர் வயார் என்னும் காலால்" என உருவகித்தார். கனி என்றது கொவ்வைக் கனியை.

"குழல் கொன்றை கொவ்வை செவ் வாய்" (திருக்கோவை 108) என வருதல் காண்க. துவர்- சிவப்பு. "இன்மொழித் துவர் வாய்" (பொருந 27) என்புழியும் இப்பொருட் டாதல் காண்க. மாதரின் அழகை வாயின் மேலிட்டுத் "துவர்வாயார்" என்றார்.

காமம்- புணர்ச்சி வேட்கை. அத னைப் பிறவிக் கடலில் உள்ள சுறா மீனாக உருவகித்தார். இனி என்றது பிறவிப் பெருங் கடலில் வீழ்ந்து எவ்வத்திரையால் எற்றுண்டு பற்றுக் கோடின்றித் துவர்வாயார் என்னும் காலாற் கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு வருந்திக் கிடக்கின்ற நிலையை உணர்த்தியது. என் என்று எண்ணி- யாது என்று பலகால் நினைந்து. அதன் பெறுபேறு அஞ்செழுத்தின் புணைபிடித்தலாகும். அஞ் செழுத்தின் என்புழி இன் தவிர்வழி வந்தது. பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்குத் திரு வைந்தினைத் தெப்பமாக உருவகித்தார். முதலந்தமில்லா என்பது தோற்றமும் தேகமில் லாத வீடாகிய கரையைச் சிறப்பித்து. இறை வனுக்கு முதலந்தமின்மையின் அவ்விறை வனால் அருளப்படும் வீட்டிற்கும் அச்சிறப்புக் கூறப்பட்டது. மல்லம்- வளம். "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம் (உரி 7) வளம் அந்தமிலின்பம். அது அவ்வின்பத் தினையுடைய வீட்டினை உணர்த்தியது. பிறவி யைக் கடலாகக் கூறினமையின் அதனின்று நீங்கி அடையும் வீடுபேற்றினைக் கரையாக உருவகஞ் செய்தார். ஐந்தெழுத்தின் புணை பிடித்தல் ஆட்கொள்ளுதற்கும் ஆட்கொள் ளல் கரை காட்டற்கும் ஏதுவாகும். கரை காட்டினாய் என விகுதி பிரித்து மாற்றிக் கூட்டிக் கிடக்கின்றேனை ஆட்கொண்டு கரை காட்டினாய் என முடிக்க.

இதன்கண் அடிகள் முதலந்தமில்லா மல்லற் கரைகாட்டக் கண்டனராதலின் அதனை மனமொழி மெய்களால் அறியமுடியாமை பெறப்படுதலின் சுட்டறுத்தல் என்னும் மூன் றாம்பத்து நுதலியபொருள் போந்தவாறு காண்க. 27.

(தொடரும்...

*புகழ் என்பது தனிச்சொத்து. அதன் அருமை அதை இழந்தபிறகுதான் தெரிகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களும் அதன் விளைவுகளும்

– திரு இ. சிவராசா அவர்கள் –

இந்த உலகமே எண்ணங்களின் அதிர்வலைகளால் சூழப்பட்டிருக்கின்றது. ஒரு மனிதனது மனதில் தினம் கோடிக் கணக்கான எண்ணங்கள் ஓடும் முகில் களைப்போல் தோன்றி மறைந்தவண்ணமிருக் கின்றன. அவரவர் வாசனைகட்கேற்ப அவற் றுட் சில அவரில் தங்கி மனதை இயக்கத் தூண்டுகின்றது. திசைகாட்டியின்றிப் பயணிக் கும் கப்பல் பாரிய அழிவைச் சந்திக்க நேரிடு வதுபோல் அவ்வெண்ணங்களின் பின்புலத்தை ஆராயாது செயற்படும்போது மனிதன் நிம் மதியை இழக்கின்றான். மனமானது ஒரு எண்ணத்தால் தூண்டப்படும்போது அது மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் கர்மேந் திரியங்களின் வாயிலாக அச்செயற்பாட்டை ஆரம்பித்துவிட்டு சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அவ்வெண்ணத்தின் விளைவு அது உருவாவதற்குக் காரணமான விதையைப் பொறுத்து அமைகின்றது. எமது இன்ப துன்பம், பிறப்பு இறப்பு என அனைத் திற்கும் காரணமாக அமைவது எமது எண் ணங்களின் அதிர்வலைகள்தாம். நாம் அனு பவிப்பதற்கும் எமது எண்ணங்களும் உணர்வு களும்தான் காரணமாக அமைகின்றன. வெளிச்சக்திகள் எதுவுமல்ல. எண்ணங்களே மனிதனின் உயிர் மூச்சாகும். இவைதான் பின்னர் செயல்வடிவம் பெறுகின்றன. எனவே எண்ணங்கள் தூய்மையானவையாக அமை யும்போது செயல்களும் புனிதமானவை யாகவே அமைய வேண்டும். இன்ப துன்பங் களும், நன்மை தீமைகளும் உனது மனதின் வெளிப்பாடேயாகும். அந்நிலைக்கு நீயே காரணமெனும் பொறுப்பை ஏற்பதற்கு நீ மறுக்கலாம், அல்லது உன்னிடம் அவ்வளவு சக்தி குடிகொண்டுள்ளதாவென்பதை நம்ப முடியாதிருக்கலாம். உனது உடம்புதான் வரையறுக்கப்பட்ட சக்தியைக் கொண்டுள் ளது. ஆனால் சக்தி வரையறை அற்றது.

அண்டத்திலுள்ள அனைத்தும் பிண் டத்திலுள்ளன. ஓரிரு வருடங்களுக்கு முன் இந்தியாவில் தனது பன்னிரண்டாவது வய திலிருந்து உணவோ, நீராகாரமோ எடுக்காது வாழ்ந்துவரும் 87 வயதான ஒரு முதியவரை தலைசிறந்த வைத்தியர்கள் ஆராய்ச்சி செய்தபோது அவரது உடலுறுப்புக்கள் அனைத்தும் ஒழுங்காக இயங்குகின்றன எனும் முடிவுக்கு வந்தனர். அந்நபர் பிராணாயாமத் தின்மூலம் காற்றை உட்கொள்ளும் பயிற் சியை மாத்திரம் மேற்கொண்டிருந்தார். யோகப்பயிற்சிகள்மூலம் எமது உயிர் வாழ் வதற்குத் தேவையான அனைத்து விற்றமின் களும் பிரபஞ்சத்திலிருந்து உறிஞ்சப்பட முடியும். புற உலகில் காணப்படும் அனைத் தும் நிலையற்றதனவாகவும் மாறுபடும் தன்மையுடையனவாகவும் காணப்படுகின்றன. அவையனைத்தும் உனது மனத்தின் வெளிப் பாடேயாகும். நாம் எமது உணர்வின்மூலமாக பெற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் ஒரு பொருளுக்கோ புற உலகத்துக்கோ ஒரு வடிவத்தைக் கொடுக்கின்றோம். யானையைப் பார்த்த குருடனின் கதை ஞாபகமிருக்கலாம். நனவு கனவு நிலைகளில் அனுபவிக்கும் அனைத்துக்கும் மனமே காரணமாகும். அப் படியானால் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு உலகமல்லவா தெரியவேண்டும். ஆம் ஒவ் வொருவரது சாத்வீக, தாமஸ குணங்களின் விகிதாசாரத்திற்கேற்பவும் மனதின் பக்குவ நிலையைப் பொறுத்தும் அவரவரது உலகம்

*அன்புள்ள இடத்தில்த்தான் ஆண்டவன் இருக்கின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறாகத் தென்படும். நல்லவரெனப் பெயர் பெற்ற ஒருவரின் செயற்பாடுகளில் எதுவித தவறும் தெரிவதில்லை. ஆனால் அதே நபர் தீயவர் என கேள்விப்பட்டவர்கட்கு அவரின் நடவடிக்கைகள் சமுதாயத்துக்குத் தீமை பயப்பனவாகத் தென்படும். இங்கே பார்க்கப்பட்டவர் ஒரே நபர்தான். எமக்கு நெருக்கமானவர்களின் நடவடிக்கைகள் வெறுப்பை ஏற்படுத்துவதில்லைத்தானே. அதே நேரம் எமது வெறுப்புக்குள்ளான ஒருவரின் செயல் அனைத்தும் எரிச்சலூட்டுபவையாக அமைகின்றனவல்லவா.

மனிதன் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை எனும் விழுமியப் பண்புகளுடன் படைக்கப்பட்டவனாவான். இவற்றை வளர்த்துக் கொள்வதற்கு தூய்மையான எண்ணங்களை மனதில் பதியவைக்க வேண்டும். உனது நன்மைக்கும் தீமைக்கும் புறச்சக்திகள் எதுவுமின்றி நீயே காரணமென்பதை பொறுப் பேற்க வேண்டும். வாளெடுத்தவன் வாளால் அழிவதுபோல் பிறருக்குத் தீங்கு விளைவிக் கும் எண்ணமானது சுவரில் எறிந்த பந்தைப் போல் தனது முழு சக்தியுடனும் திரும்பி நினைத்தவரையே தாக்குகின்றது. எண்ணங் களின் வலிமையை குறைத்து மதிப்பிடுபவன் மனதின் முக்கியத்துவத்தை அறியாதவ னாகின்றான். எண்ணங்களின் தொகுப்பான மனமே எமது ஆரோக்கியத்துக்கு ஆதாரமாய் இருப்பதால் அதன் சக்தியை உணர்வதற்கு நாம் சதா முயலவேண்டும். எமது பாதுகாப் பும் ஆரோக்கியமும் சொத்துக்களிலோ படை களிலோ தங்கியிருக்கவில்லை. நல்ல எண் ணங்களிலும் செயல்களிலுமே தங்கியிருக் கின்றன.

கடவுள் ஒன்றல்ல பல எனவும் நன்மை பயப்பன தீமை பயப்பன, பாவம் புண்ணியம் எனவும் எமக்குத் தோன்றும் உணர்வுகட்கு மனமே அடிப்படைக் காரணி யாகும். பாவ புண்ணியம் என்பதைத் தீர் மானிப்பது ஒரு செயலின் நோக்கத்தைப் பொறுத்து வேறுபடுகின்றது. சுயநலம் கருதிச் செய்யப்படும் தானமானது ஒருபோதும் புண் ணியமாகக் கருதப்படமாட்டாது. கொலை செய்தல் பாவமெனக் கருதப்பட்டாலும் ஆதர வற்ற ஒருவரை கொள்ளையடிக்க முற்படு பவனை அதைத் தடுக்கும் நோக்கில் எடுக் கப்படும் முயற்சியில் கொள்ளைக்காரன் இறக்க நேரிட்டாலும் அது பாவச்செயலாகக் கருதப்படமாட்டாது. இந்து சமயத்தில் பாவ மாகக் கருதப்படும் புலாலுண்ணல் கிறிஸ்து, இஸ்லாம் மதங்களில் அவ்வாறாகக் கருதப் படவில்லை. அன்புள்ளம் கொண்டவர் அனைத் திலும் காருண்யம் நிறைந்திருப்பதைக் காண்பர். கடவுள் பக்தி உள்ளவர் எங்கும் தெய்வீகம் நிறைந்திருப்பதைக் காண்பர். வெறுப்பு மனப்பாங்குள்ளவர் எங்கும் துட்டர் களையும் எதிரிகளையுமே காண்பர். இந்த அன்பும் வெறுப்பும் உருவாகுவது எமது மனத்தில்தான் என்பதை மறுக்க இயலா தல்லவா. எனவே நல்லவற்றையும் தீயவற் றையும் அனுபவிப்பது எமது மன உணர்வு தான்.

பிறரில் நீ காணும் குறையும் உனது மனதில் உதிக்கும் ஒரு உணர்வுதான். ஆனால் உனது நடவடிக்கைகளை ஆழமாக ஆராய்ந்தால் அதே குறை உன்னிலும் இருப் பதை புரிந்துகொள்ள முடியும். எனவே நீ அவரிலிருந்து வேறுபட்டவரல்ல. நஞ்சைத் தொட்டவனும் உட்கொண்டவனும் பாதிப்புக் குள்ளாவதுபோல் மற்றவர்க்கு தீமை பயக் கும் எண்ணம் நினைப்பவரிலும் நினைக்கப் படுபவரிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். பாண்ட வரை அழிப்பதற்குரிய யுக்திகளை கௌரவர் கள் பலவிதமாகக் கையாண்டும் ஈற்றில் நூற்றொருவரும் அழிக்கப்பட்டு சகல வளங் களையும் இழந்த நிலையில் பாண்டவர்

*தோல்வியை நேசி வெற்றியின் விளிம்பு உன் விழியருகே தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசூட்டப்பட்டனர். பிரஜைகளும் சந்தோஷ மாக வாழ்ந்தனர். மனமானது தூய்மையாக அமையும்போது தீங்கு எதுவும் எம்மைச் சூழ்ந்து கொள்வதற்கு இடமேயில்லை. எனவே தீய எண்ணங்கள் முளைவிடும் போதே கவனமாக ஆராய்ந்து காற்றுடன் சேர்ந்துவரும் துர்நாற்றத்தைத் தவிர்ப்பது போல் அவற்றைப் புறக்கணிக்கப் பழக வேண்டும். கடலானது சிறிதளவு குப்பை யைக்கூட தன்னிடத்தில் சேரவிடாது அலை களின் உதவியோடு வெளியேற்றிவிடும். மற்றவர்க்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இரண்டொரு சிறிய எண்ணங்கள்தானே இருந்துவிட்டுப் போகட்டும் என்ற உணர் வைக் கொண்டிருப்பதில் எதுவித பிரயோசன மும் இல்லை. ஆழமாக வேரூன்றி வளர்ந் துள்ள மரத்தை அடியோடு அழிக்காது இரண்டொரு கிளைகளுடன் விடுவதிலும் பார்க்க ஆணிவேருடன் பிடுங்கியெடுக்கும் போதுதான் எதிர்பார்த்த பலனை அடைய முடியும்.

எமது குண இயல்புகளை பிறர் அலசும்போது உண்மையில் அவர்கள் தங் களைத் தாங்களே விமர்சிக்கின்றனர். இன்று பரவலாகக் காணப்படும் தொற்றா நோய்கட்கு நமது எண்ணங்களே காரணமாகும் - எமது உடம்பல்ல. மாசுபடாத மனமே நிலையான ஆரோக்கியத்தைத் தரவல்லது. தீங்கு செய் தவருக்குப் பதிலடியாக நீ தீங்கு செய்ய முற்படும்போது அது பழிவாங்கல் எனப்படு கிறது. அதாவது அத்தீங்கின் விளைவாகிய பழியை நீயே வாங்குவதாக அமைகிறது. நீ அவரை விடச் சிறந்தவரெனின் அவருக்கு நன்மை செய்ய முயலவேண்டும். "உன்னை வெறுப்பவர்க்கும் நன்மை செய். உன்னை ஏசுபவர்களை ஆசீர்வதி. குறை கூறுபவர்க் காக ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்" என யேசுநாதரும், "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நந்நயம் செய்து விடல்" என வள்ளுவரும் போதித்துள்ளனர். எனவே எதிரியையும் காணும்போது மரி யாதை செய். உன்னில் இருக்கும் அதே இறைவன் அவரிலும் உறைவதால் அந்த மரியாதை இறைவனைச் சென்றடைகின்றது. எமது கண்ணுக்குப் புலப்படும் அனைவரும் எமது பிரதிவிம்பம் என்பதை உணரவேண் டும். நான் காண விழையும் உலக மாற்றம் முதலில் எனது செயல்களில் வெளிப்பட வேண்டும்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் மூலமாக தமது ஆசைகளை நிறைவேற்ற முயன்றவண்ணமிருக்கின்றன. மனஉறுதி யுடன் கர்மேந்திரியங்களை இயங்கவிடாது தடைசெய்தாலும் ஞானேந்திரியங்கள் அடங்கி விடுவதில்லை. மேன்மேலும் மனதைத் தூண் டியவண்ணமிருக்கும். இவற்றையும் அடக்க முடிந்தவனால்த்தான் மன அமைதியைப் பெறமுடியும். நச்சு விதையிலிருந்து இனிமை யான பழத்தை எதிர்பார்த்து ஏமாந்தபின் கடவுளைக் குறைகூறுவதில் எதுவிதப் பிர யோசனமும் இல்லை. மாசடைந்த இதயத் தில் கடவுளின் விம்பத்தைத் தானும் பதிய வைக்க முடியாது. அழுக்கடைந்த நீருள்ள பாத்திரத்துள் தொடர்ந்து நன்னீரை ஊற்றும் போது அழுக்கு நீர் வெளியேறி விடுவதைப் போல் நல்ல எண்ணங்களைப் பதிய வைக்க வேண்டுமென்ற மனஉறுதி எந்தவிதத் தடை களையும் தாண்டி மனதைக் கட்டுப்பாட்டில் வைக்கின்றது. முனிவர்களும் துறவிகளும் விரதம் தியானம் போன்ற பயிற்சிகள்மூலம் தமது இச்சாசக்தியை வளர்த்து மனதைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டனர். கடுமை யான மனஉறுதி கொண்டவரால் வழங்கப் படும் ஆசீர்வாதமானது குறிதவறாத துப் பாக்கி ரவையைப்போல் எய்தப்படுவரை

*உயிரே போகும் நிலைவந்தாலும் உன் தைரியத்தைக் கைவிடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகச் சென்றடையும் வலுவுடையது. உபநிடதங்களிலோ கீதையிலோ எவ்வளவு பாண்டித்தியம் பெற்றாலும் கடவுள் நம் பிக்கையெனும் அத்திவாரத்தில் எழுப்பப்படும் உயரிய சிந்தனைகள் சிறந்த பலனைத் தரவல்லன. மனிதப் படைப்புக்கு மாத்திரம் அளவற்ற சக்தியைக் கொண்ட மனம் படைக்கப்பட்டிருக்கின்றது. மனமில்லாத உடம்பை மின்சாரமில்லாத கடத்திக்கு ஒப்பிடலாம். எதற்கும் பயனற்றது. ஐம்பூதங்களின் சேர்க்கையான உடம்பும் எண்ணங்களின் தொகுப்பான மனமும் நிரந்தரமாக இணைபிரியாதன என்ற உணர்வில் உடம்பை வளர்ப்பதில் மனிதன் காலத்தை வீணடிக்கின்றான்.

மனம் ஒரு வெற்றுக்காகிதமல்ல. இதில் உனது பழைய பிறப்புக்களின் அனுபவங்களும் நடவடிக்கைகளும் பதியப்பட்டிருக்கின்றன. இதில் நல்ல எண்ணங்களைப் பதியவைப்பதன்மூலம் பிறவிப்பெருங்கடலை நீந்த முடியும். இதற்கு தொடர்ச்சியான நாமஸ்மரணை சிறந்த பலனைத் தரவல்லது. நாம் பிறக்கும்போது எமது கடந்த பிறப்புக்களில் சேகரித்த வினைப்பயன்களால் கோர்க்கப்பட்டு கழுத்தில் தொங்கவிடப்பட்டவர்களாகவே பிறக்கின்றோம். இறுவட்டில் பதியப்பட்டிருக்கும் பாடல்களை அதை இயங்க வைக்கும்போதுதான் கேட்டு ரசிக்க முடிகின்றது. எனவே சந்தோஷமோ துக்கமோ எதையும் சமநிலையான மனோபாவத்துடன் வரவேற்கப் பழக வேண்டும். உயரிய சிந்தனையில் மனமானது தொடர்ந்து ஆழ்ந்திருக்கும்போது கடந்த பிறப்புக்களின் பதிவுகளான தீய எண்ணங்களும் பழக்க வழக்கங்களும் தாமாக அற்றுப்போய்விடுகின்றன. மகான்களும் துறவிகளும் இப்பயிற்சியின் மூலமாகவே புலன்களை அடக்குவதில் வெற்றி பெற்று மன அமைதியடைந்தனர். நதி தனது பாதையில் எந்தவிதமான தடைகளையும் தாண்டிப்பாயும்போது திரும்பிப் பார்ப்பதில்லை. தனது இலக்கான கடலே அதன் குறிக்கோள். நாமும் தீய எண்ணங்களை புறந்தள்ளி வைக்க வேண்டுமென்ற மனஉறுதியுடன் செயற்படும்போது இடையில் ஏற்படும் தடங்கல்களைப் பற்றிக் கவலைப்படாது புலனடக்கம் என்ற இலக்கை அடைவதில் முனைப்புடன் செயற்படும்போது இலகுவாகச் சாதிக்க முடியும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்" (குறள்)

நல்லோரினது சகவாசமும் சத்சங்கங்களும் நற்சிந்தனைகளை மனதில் பதிய வைக்கின்றன. புத்தபெருமானின் காலத்தில் வாழ்ந்த பிரபல கொள்ளைக்காரனான அங்குலிமாலா புத்தரின் போதனைகளால் கவரப்பட்டு மிகப்பெரும் கிருஷ்ண பக்தனாக மாறினான். மஹாத்மா காந்தியின் காலத்தில் வாழ்ந்த ஒரு பிராமணப் பையனும் தாயாரும் அவரின் கொள்கைகளினால் மிகவும் கவரப்பட்டிருந்தனர். காந்தியைப்போல் நீயும் படித்து மஹானாக வரவேண்டுமென்று தாயார் மகனுக்கு அறிவுரை வழங்குவார். அவ்வாறே ஆழ்ந்த பக்தியுடைய மகனும் தாயாரின் கனவை நனவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சதா மூழ்கியிருந்தான். தெருவீதியில் படிக்கும் பரம ஏழையாக இருந்தும் அவன் சட்டத்துறையை விரும்பிக் கற்றான். இறுதித் தேர்வு நேரத்தில் தெருவீதியில் படித்துக் கொண்டிருந்தபோது நடுஜாமத்தில் குளிர் தாங்க முடியாது தூக்கம் அவனை வாட்டியது. சூடாக ஒரு தேநீர் அருந்துவதற்கும் வீட்டில் வசதியிருக்கவில்லை. தெருவோரமாகவிருந்த

*தேவையும் துன்பமும் ஒருபொழுதும் விட்டுப்பிரியாத நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்ந்த நீரில் தனது கண்களைக் கழுவிய பின் படிப்பைத் தொடர்ந்தான். இறுதித் தேர்வில் முதன்மையாகச் சித்தியடைந்தான். மேலும் கடவுள் பக்தி காரணமாக அவன் எப்போதும் நல்லவர்களின் சகவாசத்தையே நாடினான். அவனது திறமையையும் நட வடிக்கைகளையும் அவதானித்த வெள்ளை யர் ஆட்சி அவனை சென்னை உயர்நீதி மன்ற நீதவானாக நியமித்தது. இந்தியா காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த அக் காலத்தில் முதன்முதலில் தமிழர் ஒருவர்க் குக் கிடைத்த மிகப்பெரும் கௌரவமாக இது போற்றப்பட்டது. அவர்தான் திரு முத்து சாமி ஐயர். கடவுள் பக்தியுடன் கூடிய உயரிய சிந்தனைகள் ஆண்டவனால் ஆசீர் வதிக்கப்படுகின்றன என்பதற்கு இவரது வாழ்க்கை சிறந்த சான்றாகும்.

நாம் மற்றவர்களை வெறுப்பதில்லை என்ற எண்ணத்தை வளர்த்து எம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம். நாம் நல்லவர் என்ற தற்பெருமையினால் எமது உண்மைத் தோற்றத்தை மறைப்பதன்மூலம் நாம் உண்மையான அன்பிலிருந்து பிரிந்திருக்கின் றோம். இப்படியாக உண்மைத் தோற்றத்தை மறைப்பதும் கவலைகட்கும் அன்பின் வெளிப் பாடற்ற எண்ணங்கட்கும் காரணமாக அமை கின்றது. ஒரு நிறுவனத்தின் நுழைவாயிலில் தொங்கவிடப்பட்டுள்ள அறிவிப்புப்பலகை அந்நிறுவனத்தின் பல்வேறுபட்ட செயற்பாடு களை விபரிக்கிறது. அதுபோல் முகமானது எமது மனநிலை விருப்பு, வெறுப்பு என்ப வற்றை துல்லியமாகப் பிரதிபலிக்கின்றது. நம் ஒவ்வொருவரையும் சுற்றி ஒரு காந்தப் புலம் இருப்பதுபோல் எமது குண இயல்பு களைப் பிரதிபலிக்கும் அருள்வட்டமும் ஒன்றுள்ளது. இது பக்குவமடைந்த ஞானி களின் கண்களுக்கும் ரஷ்ய விஞ்ஞானியின் கண்டுபிடிப்பான ஹிர்லியன் கமராவிலும் துல்லியமாகப் புலப்படும். ஒருவரின் பக்குவ நிலைக்கேற்ப இதன் நிறமும் பரந்து விரிந்திருக்கும் அளவும் மாறுபடும். பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவைச் சுற்றியிருந்த இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்பட்ட அருள் வட்டம் 40 அடி தூரம் வரை பரந்திருந்ததை கிர்லியன் கமராமூலம் அவதானிக்கப்பட்டது. இவ்வட்டம் அன்பு வடிவானவர்களில் இளஞ் சிவப்பு நிறத்திலும், ஆன்மீகத்தில் ஆழ்ந் திருப்பவர்களில் மெல்லிய நீல நிறத்திலும், சுயநலமற்றவர்களில் அழகான றோஸ் நிறத் திலும் காணப்படும். அதேபோல் வெறுப்பு மனப்பாங்குள்ளவர்களில் கறுப்புக் கலந்த கடும் சிவப்பு நிறத்திலும், பொறாமை உள்ள வர்களில் கறுப்புக் கலந்த பச்சை நிறத்திலும் சுயநலவாதிகளில் பிரகாசமான சாம்பல் நிறத்திலும் காணப்படுவதாக அவதானிக்கப் பட்டுள்ளது. ஒளியைவிட வேகமாகப் பயணிக் கக்கூடிய எண்ண அலைகள் எவ்வாறான மன உணர்வுடன் பிறப்பிக்கப்பட்டதோ அதற் கான பலனை மறுகணமே உரியவரிடம் கொண்டு சேர்க்கின்றது.

எனவே தீங்கு விளைவிக்கக்கூடிய எண்ணங்களை முளையிலேயே புறந்தள்ளி வைப்பதன்மூலம் எமது ஆரோக்கியத்தை செவ்வனே பேண முடியும். மேலும் இவ்வா றான எண்ணங்களின் உருவாக்கத்தை தடுப்பதற்குப்பின் வருவன சிறந்த ஆயுதமாக அமைகின்றன. அவையாவன; அன்பு செலுத்து தல், கடவுள் நம்பிக்கை, நல்லோர் சகவாசம், சத்சங்கம், பஜனை, தியானம், பலனை எதிர் பாராத சேவை என்பனவாகும். இவ்வாறான சாதனைகள் எமது மன அழுத்தத்தையும், வெறுப்புணர்ச்சியையும் தூர விலக்கி இதயத் தைச் செவ்வனே இயங்க வைத்து ஆரோக் கியமானதும் அமைதியானதுமான வாழ்வுக்கு வழிவகுக்கிறது.

*தன்னம்பிக்கையிருந்தால் தைரியம் தானாகவே வரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



### 52. நித்தப் பொருள்கள் ஆறு

ஏகன் அனேகன் இருள் கருமம் மாயை இரண்டு
ஆக இவை ஆறு ஆதி இல்.

**பொருள்:**

ஒருவனாகிய இறைவனும், பலவாகிய உயிரும், ஆணவமும், கன்மமும், சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இரு மாயையும் ஆகிய இந்த ஆறு பொருள்கள் தோற்றம் இல்லாதவையாகும்.

**சொற்பொருள்:**

ஏகன்- ஒருவனாகிய இறைவனும், அனேகன்- பலவாகிய உயிரும், இருள்- ஆணவமும், கருமம்- கன்மமும், மாயைஇரண்டு- சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இரு மாயையும், ஆகஇவை ஆறு- ஆகிய இந்த ஆறு பொருள்கள், ஆதிஇல்- தோற்றம் இல்லாதன.

**விளக்கம்:**

இந்த ஆறு பொருள்கள் தோன்றியன அல்ல என்று கூறவே, அவை அழிவன அல்ல என்பதும் பெறப்படும். தோற்றமும் அழிவும் இல்லாதவையாதலின் அவை என்றும் உள்ள பொருள்கள் என்று கொள்ளப்படும். தோற்றம் இல்லாதவற்றை அநாதி என்ற சொல்லால் குறிப்பர். எனவே இந்த ஆறும் அநாதி நித்தப் பொருள்கள் எனப்படும்.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையைக் கொள்ளும். அம்மூன்றன் இயல்புகளை முதல் மூன்று அதிகாரங்களில் விளக்கிச் சென்றார் ஆசிரியர். அம் மூன்றினையே இங்கு ஆறாக விரித்துக் கூறியுள்ளார். பதியை ஏகன் எனவும், பசுவை அனேகன் எனவும் குறிப்பிட்டவர் பாசத்தை இருள் கருமம் மாயை இரண்டு என அமைத்துக் கொண்டுள்ளார்.

பாசத்தை ஆணவம் கன்மம் மாயை என மூன்றாகக் கூறுவதே வழக்கு. ஆயின் நம் ஆசிரியர் இங்கு மாயையை இரண்டாக வைத்து, பாசத்தை நான்காகக் கூறியுள்ளதைக் காணலாம்.

*நிகழ்காலத் தோல்விகளே எதிர்கால வெற்றிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயை இரண்டு:

மாயை இரண்டு என இவ்வாசிரியர் கூறியது பற்றி, சுத்த மாயையும் அசுத்த மாயையும் வேறு வேறான இரு தனிப்பொருள்கள் என்று கொள்வாரும் உளர். அவ்வாறு கொள்வது பொருந்தாது. ஏனெனில், சடமாயும் பலவாயும் இருப்பன எல்லாம் தோன்றி அழிவெய்தும். ஆடை சடமாய் இருப்பது. அது பருத்தியாடை, பட்டாடை, தோலாடை எனப் பல வகையாய் உள்ளது. குடம் சடமாய் இருப்பதோடு மண்குடம், பொன்குடம், செப்புக்குடம் எனப் பலவகைப்படுவதாயும் உள்ளது. இவ்வாறு சடமாயும் பலவாயும் இருப்பதனாலே ஆடை, குடம் முதலியவை தோன்றி அழியக்கூடிய காரியப் பொருள்கள் என்பது விளங்கும்.

இவைபோலச் சுத்தமாயையும், அசுத்த மாயையும் ஆகிய இரண்டும் சடமாய் இருப்பவை. அவை தனித்தனிப் பொருள்கள் எனக் கொண்டால் பல எனப்பட்டு, பலவாயும், சடமாயும் இருப்பதனால் அவை தோன்றி அழிவெய்தும் என்று கூறும்படி ஆகும். இது, மாயை இரண்டு உள்ளிட்ட ஆறும் நிலையான பொருள்கள் என்று ஆசிரியர் கூறியதற்கு மாறாகும்.

நம் ஆசிரியர் மாயை இரண்டு என்று கூறினாரேனும், அது பொருளால் இரண்டு என்பது அவரது கருத்தன்று. இரண்டு என்று கருதியிருப்பாரானால், தமது மற்றொரு நூலான சிவப்பிரகாசத்திலும் அவ்வாறே கூறியிருப்பார். அங்ஙனம் கூறாமல்,

"பகர் மாயை ஒன்று; படர் கன்மம் ஒன்று"

(சிவப்பிரகாசம், 32)

என்றே தெளிவாகக் கூறியுள்ளார். இதனால் மாயை ஒன்று என்பதே அவர்தம் கருத்தாதல் விளங்கும்.

அவ்வாறாயின், திருவருட்பயனில் மாயை இரண்டு எனக் கூறியது எக்காரணம் பற்றி என வினவலாம். இதற்கு விடை காண்போம்.

மாயை ஒன்றே தன்னில் சுத்தப் பகுதியும், அசுத்தப் பகுதியும் என இரு பகுதியாய் நிற்கும். ஆணவ மலத்தோடு கலவாதது சுத்தப்பகுதி. ஆணவ மலத்தோடு கலந்தது அசுத்தப்பகுதி. குன்றிமணி ஒரு பகுதி செம்மையாகவும், மற்றொரு பகுதி கரியதாயும் காணப்படுவதுபோல மாயை ஒன்றே இவ்வாறு இரு பகுதியாய் நின்று செயற்படும்.

மாயை உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களைத் தோற்றுவித்து உதவும் என்பது நாமறிந்தது. சுத்த மாயையும் அசுத்த மாயையும் ஆகிய இவ்விரு பகுதியும் வெவ்வேறு முறையில் இக்காரியங்களைத் தோற்றுவிக்கும். சுத்த மாயை விருத்தியடைந்து காரியங்களைத் தோற்றுவிக்கும், அசுத்தமாயை பரிணாமம் அடைந்து காரியங்களை உண்டாக்கும்.

சிறியதாய் நின்றது பெரியதாய் விரிவதே விருத்தியாகும். மடக்கி வைக்கப்பட்டிருந்த துணியை விரித்துக் கூடாரமாக அமைப்பர். இவ்வாறு விரிவடைவது விருத்தி எனப்படும். இங்ஙனம் விருத்திப்படுவது சுத்தமாயை.

இனி, ஒரு பொருள் மற்றொரு பொருளாய்த் திரிந்து வேறுபடுவது பரிணாமமாகும். பால் தயிராதல் இதற்கு எடுத்துக்காட்டு. இவ்வாறு பரிணாமம் அடைவது அசுத்தமாயை.

இங்ஙனம் மாயை சுத்தப் பகுதியும் அசுத்தப் பகுதியும் என இரு பகுதியாய் நின்று, முன்னது விருத்தியாயும், பின்னது பரிணாமமாயும் இரு தன்மைப்பட்ட காரியங்களைத்

*தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்து உதவுகிறது. இவ்வேறுபாடு கருதியே ஆசிரியர் உமாபதி சிவம் இங்கு மாயையை இரண்டாக வைத்து ஓதினார் என்பது அறியத்தகும்.

**கருமம்:**

மனம் மொழி மெய்களினால் விருப்பு வெறுப்போடு செய்யும் முயற்சிகளே வினை அல்லது கன்மம் ஆகின்றன. இவ்வினைகள் நல்வினை, தீவினை என இரு வகையாய் அமைந்து, யாவருக்கும் புலப்படுவனவாய் உள்ளன. இவ்விரு வகை வினைகளும் ஆகாமியம் என்ற பெயரைப் பெறும். புலப்படுவனவாய் இருத்தலால் தூல கன்மம் எனப்படும்.

இவ்வாறு நல்லதும் தீயதுமாய்ச் செய்யப்படும் வினைகள் அச்செயல் முடிந்தபின் புலப்படும் நிலையின் நீங்கிப் புலப்படாத நிலையை அடைந்து நிற்கும். அந்நிலையில் அவை புண்ணியம், பாவம் எனப்படும். இவ்விரண்டும் சஞ்சிதம் என்ற பெயரைப் பெறும்.

புலப்படாமல் சஞ்சிதமாய் நிற்கும் வினைகள் தம் பயனைக் கொடுத்தற்குரிய காலம் வந்தபோது இன்பமும் துன்பமும் ஆகிய பயன்களைத் தம்மைச் செய்த ஆன்மாக்களுக்குக் கொடுக்கும். இவ்வாறு காலத்தில் வந்து பயனைக் கொடுத்து நீங்கும் வினைகள் பிராரத்தம் என்ற பெயரைப் பெறும்.

இதனால், வினைக்கு மூன்று நிலைகள் உண்டு என்பது விளங்கும். தோற்ற நிலையில் அது ஆகாமியமாய் நிகழும்; நிலை பேற்று நிலையில் அது சஞ்சிதமாய் நிற்கும்; பின் அழிவு நிலையில் பிராரத்தமாய்க் கழியும் என அறியலாம்.

இங்கு மாணவர்க்கு ஓர் ஐயம் எழலாம். வினை தோன்றி நின்று அழியும் என்று கூறுவது, இச்செய்யுளில் கன்மம் பற்றிக் கூறிய கருத்திற்கு மாறாக அல்லவா உள்ளது. தோற்றம் என்பது இல்லாத, என்றும் உள்ள பொருள்களில் ஒன்றாகக் கன்மத்தை ஆசிரியர் கூறியிருக்கும்போது அதற்குத் தோற்றமும் அழிவும் உண்டு என்று கூறுவது எப்படிப் பொருந்தும் எனக் கேட்கலாம். இதற்கு விடை கூறுவோம்.

கன்மத்திற்கு இரு நிலைகள் உண்டு. ஒன்று காரண நிலை; பிறிதொன்று காரியநிலை. கன்மம் தனித்து நில்லாது. அது மாயையாகிய பொருளைப் பற்றியே நிற்கும். எனவே கன்மத் திற்குப் பற்றுக்கோடு மாயை என அறியலாம். மாயையிடத்தில் கன்மம், நிகழ்ச்சியின்றி இருந்த படி இருக்கும் நிலையே அதன் காரண நிலையாகும். இந்நிலையில் அது மூலகன்மம் எனப்படும்.

இனி உயிர்கள் மாயையின் காரியங்களாகிய தனு, கரண, புவன, போகங்களைப் பெற்ற காலத்தில் அம்மாயா காரியங்களின் வழியே மூலகன்மம் ஆகாமிய, சஞ்சித, பிராரத்தங்களாய்க் காரியப்படும். மனம், மொழி, மெய் முதலியனவெல்லாம் மாயையின் காரியங்களே. அவற்றின் வழியாக வினைகள் தோன்றி நிலைபெறுவதையும் பின் அழிவதையும் மேலே பார்த்தோம். இதுவே கன்மத்தின் காரிய நிலையாகும்.

இதனால் காரண நிலையில் செயலின்றி உள்ளது மூல கன்மம் என்பதும். செயல் நிலையில் உள்ளது காரிய கன்மம் என்பதும் விளங்கும்.

இவற்றுள், காரிய கன்மமே உயிர்களைப் பிணித்து நின்று மயக்குவது எனவும், மூலகன்மம் அவ்வாறு ஆகாது எனவும் அறிதல் வேண்டும்.

மேலும், காரிய கன்மத்திற்கே தோற்ற அழிவுகள் உண்டு என்பதும் மூலகன்மம் அவ்வாறின்றி அநாதியாய் நிற்பது என்பதும் அறியத்தகும்.

*முதலாவது செல்வமும் முதன்மையான செல்வமும் உடல் நலமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலகன்மம், காரிய கன்மங்களைப் பின்வருமாறு வேறுபடுத்தி அமைத்துக் காணலாம்.

| *மூலகன்மம்* | *காரிய கன்மம்* |
|---|---|
| 1. தோற்றம் இல்லது | தோன்றி அழிவது |
| 2. நன்மை தீமை என்ற பாகுபாடு இல்லாதது | நல்வினை தீவினை என்னும் பாகுபாடு உடையது. |
| 3. உயிர்கட்கு நேரே பந்தம் ஆகாது. | உயிர்கட்கு நேரே பந்தம் ஆவது. |

இதுகாறும் கூறியவற்றால் இச்செய்யுளில் ஆசிரியர் "கரும்ம்" என்று குறிப்பிட்டது காரண கன்மமாகிய மூலகன்மத்தையே என்பது இனிது விளங்கும். காரிய கன்மத்தை அடுத்த செய்யுளில் "செய்வினையும்" என்பதனால் குறிப்பிடுவார்.

சித்தாந்த ஞான நெறியைத் தலைப்படுவோர் நித்தப் பொருள்கள் ஆறு உள்ளன என உணர்தல் வேண்டும் என்பது கூறப்பட்டது.

## 53. பொருள்கள் தம்மில் இயைந்து நிற்றல்.

செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன் என்று உணர்.

**பொருள்:**

மாணவனே, வினையைச் செய்பவனாகிய நீயும், உன்னால் செய்யப்படுவனவாகிய இரு வினைகளும், அவற்றின் பயன்களாகிய இன்ப துன்பங்களும், அப்பயன்களை உன்னோடு கூட்டுவிப்பவனாகிய இறைவனும் என இம்முறையில் நீ பாசத்தோடும் பதியோடும் தொடர்பு கொண்டுள்ளாய். இவ்வாறு யான் உள்ளேன் என்று உன்னியல்பை உணர்வாயாக.

**சொற்பொருள்:**

செய்வானும்- (மாணவனே!) வினையைச் செய்பவனாகிய நீயும், செய்வினையும்- உன்னால் செய்யப்படும் வினையும், சேர்பயனும்- அவ்வினையின் வழியாக உன்னை வந்து அடைகின்ற இன்ப துன்பங்களாகிய பயனும், சேர்ப்பவனும்- அவ்வினையின் பயன்களை உன்பால் சேர்ப்பிப்பவனாகிய இறைவனும் (ஆகிய இந்நான்கு பொருள்களை) உய்வான்- யான் உய்தி பெறுதற்கு, உளன்- உடையேன், என்று உணர்- என்று உணர்வாயாக.

**விளக்கம்:**

முந்திய செய்யுளில், சித்தாந்தத்திற் கொள்ளப்படும் பொருள்களைப் பெயரளவில் சொல்லிச் சென்றார். இச்செய்யுளில், அப்பொருள்கள் தம்முள் எவ்வாறு தொடர்புபட்டு நிற்கின்றன என்பதைக் காட்டுகின்றார்.

ஏகன் எனப்பட்ட இறைவன் சேர்ப்பவன் ஆகின்றான். அனேகன் எனப்பட்ட உயிர் செய்வான் ஆகின்றான். இருள், கருமம், மாயை ஆகியவை செய்வினையும், சேர் பயனும் ஆகியவற்றுக்குக் காரணம் ஆகின்றன. மும்மலங்களும் தம்முள் இயைந்து இன்ப துன்ப விளைவிற்கு எவ்வாறு ஏதுவாகின்றன என்பதைக் காண்போம்.

*உழைப்பும் நம்பிக்கையும் சேரும் இடத்தில் ஏழ்மை இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப துன்பங்கள் உயிருக்கு இயற்கையல்ல; உயிரோடு என்றும் உடனாக இருப் பவையல்ல, அவை இடையிலே வந்து உயிரைப் பற்றுகின்றன; பின் இடையிலே நீங்கி விடுகின்றன. இன்ப துன்பங்கள் இவ்வாறு தோன்றி நீங்குவதால் அவை காரியம் எனப்படும்.

ஒரு காரியத்திற்குப் பல காரணங்கள் உண்டு. அக்காரணங்கள் எல்லாம் கூடியபோதே அக்காரியம் நிகழும். அக்காரணங்களை மூன்றாகக் கூறுவர். அவை முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என்பன. இவற்றுள் முதற்காரணமே முதன்மையுடையதாய் இருக்கும். ஏனைய காரணங்கள் அதற்குத் துணையாய் அமையும். உதாரணமாக குடம் என்ற காரியம் தோன்றுவதற்கு முதற்காரணமாக இருப்பது களிமண். சக்கரம், கழி, நீர் முதலியவை அதற்குத் துணை செய்வதால் துணைக் காரணம் எனப்படும். இனி, முதற்காரண மாகிய களிமண்ணையும், பிற துணைக் காரணங்களையும் இயைவித்துக் குடமாகிய காரியத் தைச் செய்கின்ற குயவன் நிமித்த காரணம் ஆகின்றான்.

இன்ப துன்பங்கள் காரியம் என்று கூறினோம். எனவே அவற்றிற்கும் மேற்கூறிய மூன்று காரணங்கள் தேவை என்பது விளங்கும். இன்ப துன்பங்களுக்கு முதற் காரணமாய் இருப்பது வினையாகும். துணைக் காரணமாய் அமைவது மாயையாகும். நிமித்த காரணமாய் நிற்பது ஆணவ மலமாகும். இக் கருத்தை மேலும் சிறிது விளக்குவோம்.

நெல்லில் முளை, தவிடு, உமி என்ற மூன்று உள்ளன. முளை என்பது முளைத்தற் சத்தியைக் குறிக்கும். நெல்லில் உள்ள முளைத்தற் சத்தியே முளையைத் தோற்றுவிக்கிறது. அச்சத்தி இல்லையேல் நெல் எக்காலத்திலும் முளைக்காது. எனவே முளைத்தற் சத்தியே முளை தோன்றுவதற்கு முதற் காரணம் என்பது புலனாகும். இம் முளைத்தற் சத்திக்குத் துணைபுரிந்து நிற்பது அரிசியோடு ஒட்டிக்கொண்டுள்ள தவிடு ஆகும். தவிட்டை நீக்கிவிட்டால் முளைத்தற் சத்தி தன் காரியத்தைத் தோற்றுவிக்கமாட்டாது. எனவே, தவிடு முளை தோன்றுவதற்குத் துணைக் காரணம் என்பது புலனாகும். இனி, அம்முளைத்தற் சத்தியைக் கெடாது பாதுகாத்து அது முளையைத் தோற்றுவித்தற்கு நிமித்தமாக நிற்பது உமியாகும். இதனால் உமி, நிமித்த காரணம் என்பது புலனாகும்.

முளைத்தல் என்னும் காரியத்திற்கு முளைத்தற்சத்தி முதற் காரணமும், தவிடு துணைக்காரணமும், உமி நிமித்த காரணமும் ஆதல்போல, இன்ப துன்பங்களாகிய காரியத் திற்குக் கன்மம் முதற் காரணமும், மாயை துணைக் காரணமும், ஆணவம் நிமித்த காரணமும் ஆகின்றன.

இந்த ஒப்புவமையைப் பின்வருமாறு அமைத்துக் காட்டலாம்.

| *உவமை* | *பொருள்* |
|---|---|
| 1. முளை (முளைத்தற்சத்தி) | கன்மம் |
| 2. தவிடு | மாயை |
| 3. உமி | ஆணவம் |

கன்ம மலம் முதற் காரணமாய் நின்று இன்ப துன்பங்களை உயிரறிவில் தோற்றுவித்து உயிருக்கு போகத்தைத் தருகிறது.

இன்ப துன்பங்கள் உயிருக்கு நேரே வருவதில்லை. உலகப் பொருள்களின் வழி யாகவே வருகின்றன. உலகப் பொருள்கள் யாவும் மாயையின் காரியங்கள் என்பது

*அறிவாளிக்கும் இயற்கையை உணர்ந்தவனுக்கும் துன்பமே வராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படை. எனவே மாயை இன்ப துன்பங்களுக்குச் சார்பாய் உள்ள தனு, கரண, புவன, போகங்களைத் தந்து கன்ம நுகர்ச்சிக்குத் துணை செய்கிறது என அறியலாம். மேலும், தனது காரியங்களாகிய உடம்போடும் உலகோடும் உயிரைப் பிணிப்புண்டு நிற்கச் செய்கிறது.

இவ்வாறு மாயை துணைக் காரணமாய் நின்று உயிருக்குப் பந்தத்தைத் தருகிறது.

ஆணவ மலம் நிமித்த காரணமாய் நின்று, இன்ப துன்பங்களைத் தோற்றுவிக்கின்ற கன்மம் உயிரைவிட்டு நீங்காதவாறு அக்கன்மத்தை நிலைநிறுத்துகிறது. உயிரிடத்தில் “நான்” என்ற உணர்வை உண்டாக்கி உயிருக்கு நுகர்வோனாம் தன்மையைக் கொடுக்கிறது.

இம் மும்மலங்களின் செயற்பாட்டினைப் பின்வருமாறு அமைத்துக் காட்டலாம்.

| *மலங்கள்* | *செயல்கள்* |
|---|---|
| 1. கன்மம் - முதற்காரணம் | -போகத்தைத் தருதல் |
| 2. மாயை - துணைக் காரணம் | -பந்தத்தைத் தருதல் |
| 3. ஆணவம் - நிமித்த காரணம் | -நுகர்வோனாம் தன்மையைத் தருதல் |

இவ்வாறு மும்மலங்களும் இயைந்து நின்று இன்ப துன்ப அனுபவங்களுக்கு ஏதுவாகின்றன.

**உய்வான் உளன் என்று உணர்:**

இறைவன் சேர்ப்பவனாய் நிற்க, உயிர் செய்வோனாகவும் நுகர்வோனாகவும் இருந்து, பிறவித் துன்பத்திற் பட்டு உழலகிறது.

இதிலிருந்து விடுபடும் வழியில்லையோ? என்று மாணவர் கேட்கக் கூடும். அதற்குப் பின்வருமாறு குறிப்பாய் விடை கூறுகிறார் ஆசிரியர். எல்லாக் கேட்டிற்கும் மூலமாய் உள்ள ஆணவ மலமே தீராத பெருநோயாகும். அதற்கு மருந்தாகவே வினைப்பயனைச் சேர்ப்பிக்கின்றான் இறைவன். ஆகவே, செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும் ஆகிய இந் நான்கு பொருள்களை நீ உடையவனாக இருப்பது நீ உய்தியடைதற் பொருட் டேயாகும் என்று தெளிவிப்பாராய், “உய்வான் உளன் என்று உணர்” என்கிறார் ஆசிரியர். இந் நான்கு பொருள்களும் ஆன்மாவை மலத்தினின்றும் நீக்கி ஈடேற்றுவன என்பது கருத்து.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜனவரி | 17 | தை | 04 | செவ்வாய் | சண்டேசுரர் |
| ஜனவரி | 21 | தை | 08 | சனி | தாயுமான சுவாமி<br>திருநீலகண்டர் |
| ஜனவரி | 26 | தை | 13 | வியாழன் | நயினாதீவு முத்துக்குமாரசாமி |
| மார்ச் | 06 | மாசி | 22 | திங்கள் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| மார்ச் | 13 | மாசி | 29 | திங்கள் | திருவள்ளுவர் |
| மார்ச் | 26 | பங்குனி | 13 | ஞாயிறு | பரமகுருசுவாமி |
| மார்ச் | 28 | பங்குனி | 15 | செவ்வாய் | குழந்தைவேற்சுவாமி |
| மார்ச் | 30 | பங்குனி | 17 | வியாழன் | செல்லப்பாசுவாமி |

*எதையும் அவசரப்படாது அமைதியாகச் செய்பவரை உலகத்தவர் மதிப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

எதையெடுத்துக்கொண்டாலும் அதில் ஒரு குறை காண்பது எமக்கெல்லாம் இன்ப மான விடயம். சமய வழிபாட்டிலும் இப்படிச் சிலர் காணும் குறைகளில் ஒன்று எமது சமய வழிபாடு பற்றியதாகும்.

சைவ சமயத்தில் இப்படித்தான் இறைவனை வழிபடவேண்டும் என்று வரை யறை செய்யப்படவில்லை. ஆனால் நாம் தேர்ந்தெடுக்கும் வழிபாட்டு முறைக்கு விதி கள் வகுக்கப்பட்டிருப்பதால் அவற்றை நாம் பின்பற்ற வேண்டும்.

மௌனமாக இறைவனைப் பிரார்த் திப்பது, நமது பிரார்த்தனையை வாய்விட்டுக் கூறி வேண்டுதல் செய்வது, விரும்பிய பாடல் களைப் பாடி வழிபடுவது, பலர் ஒன்றுகூடி கூட்டுப்பிரார்த்தனை செய்வது, ஆகம விதிப் படி கிரியைகள் செய்து வணங்குவது எனப் பல வழிகளிலும் இறைவனைத் துதிக்கலாம்.

கிரியைகள் நடைபெறும் வேளையில் கூறப்படும் வடமொழிச் சுலோகங்கள் புரிய வில்லை என்பது சிலரின் குறை. எந்தக் குறை யும் தீர்க்கப்படக் கூடியதே. வடமொழி அறிந் தவர் அச்சுலோகங்களின் பொருளையும் கிரி யைகள் பற்றிய விளக்கங்களையும் வழிபடு வோருக்குத் தெளிவுபடுத்தலாம். அல்லது நாமே அந்த மொழியைக் கற்று அவற்றை விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறு அதனை வெவ்வேறு வழிகளில் நிவர்த்திக்கலாம்.

இதே கிரியைகளின்போது தமிழில் பாடப்பட்ட திருமுறைகளை ஓதி தமிழில் வழி பாடு செய்யும் முறையும் உள்ளது. செல்வச் சந்நிதி போன்ற ஆலயங்களில் மௌன மாகவே கிரியைகளைச் செய்து வழிபாடு ஆற்றுகின்றனர். இதேவேளை மந்திரங்கள் கூறிச் செய்வதனால் அதற்குரிய ஆகம விதி முறைகள் பின்பற்றப்படவேண்டியது அவசியம்.

இறை வணக்கம் என்பதன் மூலவேர் நம்பிக்கையாகும். எப்படித் துதித்தாலும் இறை அருளைப் பெறலாம் என்றாலும் "எனது இந்த வழிபாட்டின்மூலம் என்னால் இறைவனது அருளைப் பெறமுடியும்" என்ற நம்பிக்கை எமக்கு வேண்டும்.

அப்படியான நம்பிக்கையுடன் நாம் செய்யும் பூசை அதற்குரிய விதிமுறைப்படி செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்ய வேண்டும் என்பதிலும் எமக்கு உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும். இறைதியானத் தின்போது புலாலை நினைக்கவே கூடாது என்பது விதிமுறையாயிருக்க "கண்ணப்ப நாயனார் சிவபெருமானுக்குப் புலாலைப் படைத்திருக்கிறாரே" என்று கூறிக்கொண்டு அதை உண்ண எண்ணக் கூடாது. கண்ணப் பருக்கு அந்த விதிமுறை தெரியாது. கண் ணில் இரத்தம் வந்தால் தனது கண்ணை இடந்து அதன்மேல் அப்பினால் குணமாகும் என்று எண்ணுகின்ற நிலையில் அவரிருந்தார். ஊனுண்ண கண்ணப்ப நாயனாரை உதார ணங்காட்டும் நாம் கண்ணைப் பிடுங்கி எடுக்க ஒப்புக்கொள்வோமா? எனவே அந்த ஆகம விதிப்படி அவற்றைச் செய்யவேண்டும் என்ற உறுதிப்பாடு இருக்கவேண்டும்.

இறைவனது நாமத்தை நூற்றெட்டுத் தடவை கூறுவதால் அவனருள் கிடைக்கும் என்ற தளராத நம்பிக்கையோடு நாமஜபம் செய்யும் வழிபாட்டை இயற்ற வேண்டும். இப் படி நாமத்தைச் சொன்னால் பயன் கிட்டுமா?

*நல்ல எண்ணம் விதையானால் நன்மைச் செடியே செழித்துவரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஐயப்பாட்டுடன் ஓதுவதோ, இறைவனை இறுகப்பற்றாது மனம் எங்கெங்கோ அலைய நா மட்டும் ஜபம் செய்வதோ பயன்கிட்ட வழியமைக்காது. உறுதியான நம்பிக்கை யோடு செய்யும்போது அதற்கொரு தனித்துவ மான சக்தி ஏற்படுகிறது.

இறையருளைப் பெற்று தம்மை மேல் நிலைக்குக் கொண்டு சென்ற அருளாளர் களின் பாடல்களிலும் சுலோகங்களிலும் அதீத சக்தி நிறைந்து ததும்பும். அவற்றை நம்பிக் கையுடன் ஓதும்போது அதற்கேற்ற பயன் கிட்டும். அவ்வாறு பயன்கிட்டுமென்ற அசை யாத நம்பிக்கையுடன் செயற்படுவதுதான் முக்கியமானது. அவற்றை ஒருமுறைப்படி செய்யவேண்டுமென்று விதியிருக்குமாயின் அதனையும் கடைப்பிடிக்க வேண்டும்.

அடுத்து "நாம் ஓதுவதை விளங்கிச் செய்தால் மனம் அதிலீடுபடுவது இலகு" என்று கூறப்படும் கருத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. இதற்கு எமது தாய்மொழியாகிய தமிழில் உள்ள பாக்களைப் பாடிப் பணியலாம் என்று சொன்னாலும் அவற்றிலும் எமக்கு விளங்காத பாக்கள் உள்ளனவே என்று வாதிடுவோரும் உள்ளனர்.

தமிழ்மொழியிலும் பல்வேறு வகை யான பாக்கள் சமுத்திரம்போல் நிறைந்திருக் கின்றன. ஒருவர் எல்லாவற்றையும் பாடித் தொழவேண்டும் என்றில்லையே. நம் மனம் லயப்படும் ஏதோ ஒன்றைப் பின்பற்றி இறை வனை நாடோறும் வணங்கி வரலாம்.

சைவ சமயிகள் திருமுறைகளைப் பாராயணம் செய்வது பெருவழக்காக உள்ள ஒன்றாகும். கோவில்களிலும் சமயச் சடங்கு களிலும் திருமுறை ஓதுவதற்கு முக்கியத் துவம் கொடுக்கப்படுகிறது. சிறு பிள்ளை களை இறைவழிபாட்டில் ஈடுபடப் பழக்கும் பெரியவர்கள் தேவாரம் பாடி கடவுளை வணங்கப் பழக்குகிறார்கள். எனவே தேவாரம் பாடும்போது அதன் பொருளை விளங்கி மன மொன்றிப் பாடுவது எமது ஆன்ம ஈடேற்றத் திற்கு ஏதுவாக அமையும்.

திருமுறைப் பாடல்கள் செல்லரித்து, சிதைந்து கிடந்தபோது செல்லரிக்காது கிடைக்கப்பெற்ற பாடல்களை நம்பியாண்டார் நம்பிகள் பன்னிரு திருமுறைகளாக வகுத் துத் தொகுத்தார். திருஞானசம்பந்தப் பெரு மான் பாடிய தேவாரங்கள் முதல் மூன்று திருமுறைகளாகவும் அப்பரடிகளின் தேவா ரங்கள் நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறை களாகவும் சுந்தரமூர்த்தி நாயனார் அருளி யவை ஏழாம் திருமுறையாகவும் தொகுக்கப் பட்டுள்ளன. மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாக அமைந்துள்ளன. திருவிசைப் பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறை யாகவும் திருமந்திரம் பத்தாந் திருமுறை யாகவும் திருஆலவாயுடையார் முதலிய பன்னிருவர் பாடியவை பதினோராந் திருமுறை யாகவும் அமைக்கப்பட்டுள்ளன. திருமுறை களைப் பாடும்போது இந்த நிரலிலேயே பாட வேண்டும். எனவே நாம் பாடுவது எத்தனை யாந் திருமுறை என்பதை அறிந்து வைத் திருக்க வேண்டும். இவற்றினிடையே பக்திப் பாடலாயிருந்தாலும் வேறு பாக்களைப் பாடக் கூடாது. சிலர் புராணம் பாடுமுன்னர் திருப் புகழ், அபிராமி அந்தாதி போன்றவற்றைப் பாடுகின்றனர். அப்படிச் செய்யக்கூடாது. திருமுறைப் பாக்களைப் பாடும்போது நம்பி யாண்டார் நம்பிகள் வகுத்த வழிமுறைப்படியே பாடவேண்டும் என்பதே விதிமுறை. அதனை நாம் பின்பற்றவேண்டும். தேவாரம் பண்ணுடன் இசைக்க வேண்டும். இத்திருமுறைப் பாடல் களின் பொருளை விளங்கிக் கொள்வதோடு அவற்றின் மகத்துவத்தையும் உணர்ந்து கொண்டு பாடுவது சாலச்சிறந்ததாகும். அந்த மகத்துவம் பற்றியும் அடுத்துப் பார்ப்போம்.

*மலையளவு பேச்சைவிடக் கடுகளவு செயற்பாடே சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

விதுரரின் கருத்துக்களை கேட்டு வந்த திருதராஷ்டிரன், "விதுரா! கயிற்றில் கோர்க்கப்பட்ட மரப்பொம்மைபோல நான் சக்தியில்லாதவனாக இருக்கின்றேன். எல்லாம் முன்வினைப் பயன். நீ சொல்! நான் அக்கறையுடன் கேட்கிறேன்" என்றுகூற விதுரர் தொடர்கிறார்.

விதுரர், "மன்னா! தேவ குருவான வியாழபகவானே வந்து சொன்னாலும், காலக் கோளாறினால் அவர் அவமானப்படுவதோடு, அவரது தீட்சண்யமான உத்தியும் பழிக்கப் படும்"

தானம் கொடுப்பதால் ஒருவன் விருப்பத்துக்குரியவனாகிறான். அன்படன் பேசுவதால் மற்றொருவன் விருப்பத்துக்குரியவனாகிறான். ஆலோசனை சொல்லி உதவுவதால் இன்னொருவன் விருப்பத்துக்குரியவனாகிறான். எவன் இயல்பாகவே எல்லோரிடமும் அன்பாக இருக்கிறானோ, அவனிடம் எல்லோரும் அன்பாக இருக்கிறார்கள்.

நமக்கு வேண்டாதவன் என்று ஒருவனைத் தீர்மானம் செய்துவிட்டால் அவனிடம் உள்ள நல்லவைகளோ, புத்திசாலித்தனமோ, படிப்பறிவோ நமக்குத் தென்படுவதில்லை. வேண்டியவன் என்று ஆகிவிட்டாலோ, அவனிடமுள்ள எல்லாமே நல்லவைகளாகப்படும். இதுதான் மனிதனின் மனம்.

அரசே! துரியோதனன் பிறந்தபோதே, "நீங்கள் இந்த ஒரு பிள்ளையை விட்டு விடுங்கள். இவனைவிட்டால் நூறு பிள்ளைகளும் வாழ்வார்கள். இவனை விடாவிட்டால் நூறு பிள்ளைகளும் அழிவார்கள்" என்று நான் சொன்னேன். எவன் வளர்ச்சி எதிர் காலத்தில் அழிவைக் கொடுக்குமோ அவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. அவனுடைய அழிவிற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், அது எதிர் கால வளர்ச்சிக்கு அவசியமாகிறது. எந்த அழிவானது வளர்ச்சியைக் கொடுக்குமோ, அது அழிவில்லை. எந்தக் காரியத்தைச் செய்து எதிர்காலத்தில் பலவற்றை அழிப்பானோ அதுவே அழிவு என்று நினைக்கத் தகுந்தது.

சில மனிதர்கள் தம்முடைய உயரிய குணங்களால் பெரியவர்களாக இருக்கிறார்கள். சில மனிதர்கள் செல்வத்தால் பெரியவர்களாக இருக்கிறார்கள். குணங்களால் குறைந்தவர்களாகிய துரியோதனன், துச்சாதனன் முதலியோரை விட்டுவிடுங்கள்.

திருதராஷ்டிரன், "விதுரா! அறிவுடையவர்களால் ஒப்புக்கொள்ளக்கூடியவைகளையும், எதிர்காலத்தில் நல்ல பலனைத் தருபவைகளுமான எல்லாவற்றையும் நீ சொல்கிறாய். ஆனாலும் துரியோதனனை விடுவதற்கு எனக்கு மனம் இல்லை. தர்மம் எங்கே இருக்குமோ அங்கே வெற்றி உண்டாகட்டும்" என்றான்.

### விட்டுவிட வேண்டியவர்கள்

விதுரர், "மிகுந்த நல்ல குணங்கள் உடையவனும், அடக்கம் உள்ளவனுமாக இருப்பவன், மற்ற உயிர்களுக்கு கடுகளவு கூட நாசம் ஏற்படுவதை விரும்பமாட்டான். அடுத்தவர்களைத் திட்டுவதில் ஆர்வம்

வேளை அறிந்து பேசு; நாளை அறிந்து பயணம் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளவர்கள், அடுத்தவர்களுக்குத் துயரங் களை உண்டாக்குபவர்கள், ஒருவருக்கொரு வர் விரோதத்தை உண்டாக்குபவர்கள், யாரைப் பார்த்தாலும் அவர்களுடன் கூட வாழ்வதாலும் பாவமும் பயமும் உண்டா குமோ அவர்கள், யாரிடமிருந்து பணத்தை வாங்கினால் பெருங்குற்றம் ஏற்படுமோ அவர் கள், யாருக்குப் பணத்தைக் கொடுத்தால் பெருந் தீங்கு ஏற்படுமோ அவர்கள், பேதம் உண்டாக்குவதை இயல்பாகவே கொண்ட வர்கள், காமத்துடன் கூடி வெட்கமில்லாமல் தீமை செய்பவர்கள், இவர்களுடன் நட்புக் கொள்ளக்கூடாது. ஒருவேளை நட்பு இருந் தாலும் உடனே விட்டுவிட வேண்டும்.

நட்பில் சிறிது குறை உண்டானாலும் அன்பை உதறிவிட்டு நட்பை அழிக்கிறவன், அபவாதம் சொல்ல முயற்சி செய்பவன், நம்மை அழிக்க முயற்சி செய்பவன், அறியா மல் சிறு தீங்கு நேர்ந்தாலும் பொறுமையை இழப்பவன், துன்பம் செய்வதையே தொழி லாகக் கொண்டவன், மனக்கட்டுப்பாடு அற்ற வன் இப்படிப்பட்ட அற்பர்களை கல்வி அறிவி னால் நன்றாக ஆராய்ந்து தூரத்தில் விலக்கி வைக்க வேண்டும்.

உறவினர்கள், ஏழைகள் பரிதாப மான நிலையில் இருப்பவர்கள், நோயாளி கள்- முதலியவர்களிடம் எந்த மனிதன் அன்பு செலுத்தி உதவி செய்கிறானோ, அந்த மனிதன் குழந்தைகளாலும் பசுக் களாலும் உண்டான செழிப்பையும் அழிவில் லாத நன்மையும் அடைகிறான். தனக்கு நன்மையையும், தன் குலத்திற்கு உயர்வை யும் விரும்பும் மனிதன், உறவினர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். உற வினர்களுக்கு உபசாரம் செய்பவன் இன் பத்தை அடைவான்.

திருதராஷ்டிரரே! உறவினர்கள் கெட்ட குணம் உடையவர்களாக இருந்தாலும் அவர் களை நன்றாகப் பாதுகாக்க வேண்டும். அப் படி இருக்கும்போது நல்ல குணம் கொண்ட வர்களும் உங்கள் அருளை விரும்புகிறவர் களுமான பாண்டவர்களை நீங்கள் பாது காக்க வேண்டும் என்று சொல்லவா வேண் டும்? அரசே! வீரர்களான பாண்டவர்களுக்கு அருள் செய்யுங்கள். அவர்களின் வாழ்வுக் காகச் சில கிராமங்களையாவது கொடுங்கள். இப்படிச் செய்தால் உலகம் உங்களைப் புகழும். வயதான நீங்கள் உங்கள் பிள்ளை களுக்குக் கட்டளையிட வேண்டும். நான் நன்மையைத்தான் சொல்லுகிறேன். உங்கள் நன்மையில் விருப்பம் உள்ளவன் நான், இதனை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நன்மையை விரும்புபவன் உறவினர்களோடு போரிடக்கூடாது. இன்பங்களை உறவினர் களுடன் சேர்ந்தே அனுபவிக்க வேண்டும். உறவினர்களோடு கூடி, ஒருவர்க்கொருவர் நல்ல உணவு, இனிமையான வார்த்தைகள், அன்பு முதலியவைகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். ஒருபோதும் உறவினர்களோடு விரோதம் கொள்ளக்கூடாது.

இந்த உலகில் உறவினர்கள் ஆபத் துக்களில் இருந்து காப்பாற்றவும் செய்வார் கள். ஆபத்துக்களிலேயே அமுத்தவும் செய் வார்கள். நல்ல குணம் உள்ள உறவினர்கள் ஆபத்துக்களிலிருந்து காப்பார்கள். தீய குண முடைய உறவினர்கள் ஆபத்துக்களில் மூழ் கும்படியாகச் செய்வார்கள். ஆகவே, பாண்ட வர்களுடன் நல்ல உறவு கொள்ளுங்கள். அதனால் உங்களுடைய மற்றைய பகை வர்களிடமிருந்தும் காப்பாற்றப்படுவீர்கள்.

விசம் தோய்ந்த அம்பைக் கொண்ட வேடனை நெருங்கிய மான் அழிந்து போகி றது. அதுபோல, செல்வ வசதியுள்ள உற வினனை அடைந்தும் கெடுதலைச் செய் கிறானோ அவன் பாவத்தை செல்வ வசதி உடைய உறவினன் அடைகிறான். அரசே!

*மனம் கடல் போன்றது. பகுத்தறிவு கூரிய கத்தி போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியின்மேல் வாழ்வது போன்ற நிலையை ஏற்படுத்தாதீர்கள். பாண்டவர்களுக்குரிய இராஜ்ஜியத்தைக கொடுத்துவிட்டு, நாசத்தைத் தவிர்த்து விடுங்கள். உயிர் நிலையில்லாதது. ஆகவே கவலையையும் பரிதாபத்தையும் உண்டாக்கும் காரியத்தைச் செய்யக்கூடாது. நீதி சாத்திரத்தைச் செய்த சுக்கிராச்சாரியாரைத் தவிர அநீதி செய்யாதவர் யார்? அநீதியானது நடந்து விட்டது. ஆகவே, செய்யவேண்டியதை அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டியது அறிவாளிகளின் கடமையாகும். துரியோதனன் செய்த தவறை நீங்கள் திருத்த வேண்டும். பாண்டவர்களுக்கு உரிய இராஜ்ஜியத்தைக் கொடுத்து, உங்களுக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்கிக்கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் அறிவாளிகளும் போற்றுவார்கள்.

தீரர்களின் நல்ல வார்த்தைகளை ஆலோசித்து முடிவு செய்து, காரியங்களை உறுதியாகச் செய்பவன் நீண்டகாலம் புகழோடிருப்பான். மிகவும் சாமர்த்தியசாலியாக இருந்தாலும், அறிந்துகொள்ள வேண்டியதை அறிந்துகொள்ளாமலும், அறிந்ததைக் கடைப்பிடிக்காமலும் இருந்தால் அவர்கள் தங்கள் ஞானத்தை நல்ல வழியில் உபயோகப்படுத்தியவர்களாக ஆகமாட்டார்கள். பாவத்தை உண்டாக்கும் காரியத்தை எந்தக் கல்விமான் ஆரம்பிக்காமல் இருக்கின்றானோ அவன் மேன்மையடைகின்றான்.

ஏற்கனவே செய்த பாவத்தைப் பற்றி ஆலோசிக்காமல், நீக்காமல் தொடர்ந்து பாவங்களையே செய்யும் தீயபுத்தி உள்ள மனிதன் கொடிய நரகத்தில் தள்ளப்படுகிறான்.

குடி மயக்கம், அதிகமான தூக்கம், அடுத்தவரின் இரகசியமான ஒற்றர்களை அறிந்துகொள்ளாமல் இருப்பது, தீய மந்திரிகளை நம்புவது, சாமர்த்தியமில்லாத தூதன் (தூதுநெறி அறியாத தூதுவன்)- இவை நாம் கெடுவதற்குக் காரணமானவை. அறிவாளியானவன் இவை தன்னிடம் இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இவற்றை அணுகவிடாதவன் அறம், பொருள், இன்பம் முதலியவைகளைக் கடைப்பிடிப்பதில் முயற்சி உள்ளவனாக ஆவதுடன், பகைவர்களையும் தன் வசப்படுத்திக்கொள்வான்.

சாத்திரங்களை அறியாமலும், பெரியவர்களை வணங்காமலும், தர்மத்தின் அர்த்தம் அறியாமலும் இருப்பவன் வியாழ பகவானுக்குச் சமமானவனாக இருந்தால்கூட சிறப்புடையவனாக முடியாது.

கடலில் விழுந்த பொருள் வீண். காது கொடுத்து அக்கறையுடன் கேட்காதவனிடம் சொல்லப்பட்டவை வீண். புத்தி இல்லாதவனிடம் சாத்திரம் வீண். சாம்பலில் விழுந்த ஆகுதி வீண்.

ஒருவரோடு நட்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன் அறிவாளியானவன் தன் அனுபவத்தால் அவன் தகுதிகளை அடிக்கடி ஆராய்ந்து நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். பின்னர் அடுத்தவர் மூலமாகக் கேட்டும், தன் கண்களால் பார்த்தும் நன்மை தீமைகளை ஆராய்ந்தும் அறிஞர்களுடன் நட்பை உண்டாக்கிக்கொள்ள வேண்டும்.

அடக்கமானது புகழைக் கொண்டு வரும். பொறுமை எப்போதும் கோபத்தை அழிக்கும். நல்லொழுக்கம் அழகை உண்டாக்கும்.

ஒருவன் அனுபவிக்கும் பொருள்கள், அவனுடைய தாயார், வீடு, ஒழுக்கம், உண்ணும் உணவு, உடுத்தும் உடை- முதலியவைகளைப் பார்த்து அவன் குலத்தை அறிந்து கொள்ளலாம்.

உடம்பின்மேல் ஆசையை விட்டவனுக்குக் கூடக் காமம் உண்டானால் தடுத்து அறிவுரை சொல்ல முடியாது. இப்படி

*அதிகம் கற்றவனாய் இரு. பிடிவாதக்காரனாய் இராதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்போது காமத்தில் ஆசை கொண்ட வனுக்குச் சொல்லவா வேண்டும்?

அறிவில் உயர்ந்தவர்களைச் சேர்ந் தவன், கல்விமான், தர்மசீலன், காட்சிக்கு எளிமையானவன், நண்பனுடன் இணைந் தவன், இனிமையான பேச்சுடையவன்- இப் படிப்பட்டவனைக் காக்க வேண்டும்.

எந்தக் குலத்தில் பிறந்தவனாக இருப்பினும், எவன் மரியாதை உடையவ னாக இருக்கின்றானோ, தர்மவானாக இருக் கின்றானோ, மேன்மைத் தன்மை உடையவ னாகவும், தீமை செய்வதில் வெட்கப்படு பவனுமான மனிதன், நல்ல குடும்பத்தில் பிறந்த நூறுபேர்களைக் காட்டிலும் சிறந் தவன் ஆவான்.

எண்ணத்தோடு எண்ணமும், இரகசி யத்தோடு இரகசியமும், அறிவோடு அறிவும் எந்த இரண்டு பேர்களுக்குள் ஒத்துப் போகின்றதோ அவர்களுக்குள் இருக்கும் நட்பானது ஒருநாளும் பிரிவுக்குட்படாது.

தீய குணமுடையவனையும், கல்வி அறிவு இல்லாதவனையும் நட்புக்குரியவ னாகக் கொள்ளக்கூடாது. ஏனெனில் அவனிடம் நட்புக்குரிய இலக்கணம் அமைந்திருக்கமாட் டாது. இவ்வாறு கர்வம் கொண்டவர்கள், கோபவயப்படுபவர்கள், ஆலோசனையின்றிய செயற்பாடுடையவர்கள், கருமிகள்- இவர் களுடனும் அறிவு உள்ளவன் நட்பு வைத் துக்கொள்ளக் கூடாது.

எல்லா உயிரினங்களிடமும் மென்மை யான சுபாவம், பொறுமை, துணிவு, நண்பர் களை அவமதிக்காமல் இருப்பது முதலா னவை ஆயுளை வளர்க்கின்றன.

அநியாயத்தால் இழந்த பொருளை மிகுந்த மன உறுதியோடு நியாயமான முறையில் மறுபடியும் பெற விரும்பும் மனி தனே உத்தமமானவன் ஆவான்.

வரப்போகும் துன்பத்தை நீக்கும் முறை அறிந்தவன், தனது செயல்களில் உறுதிகொண்டவன், எதிர்காலச் செயற்பாடு களை நன்கு திட்டமிட்டுக் கொள்பவன், இப் படியான மனிதன் எப்போதும் செல்வத்தோடு இருப்பான்.

(தொடரும்...

### அன்னை ஓர் ஆலயம்

ஒப்பரிய வானமுயர் ஓங்கார கோபுரமும்
ஒருங்கே யமைந்த இணுவையில்,
ஓதுபுகழ் ஆசிரிய மாண்பினில் மேவிய
உயர் சைவ மாதரசியே;
செப்பரிய சிவமய ஆறுமுக வள்ளலின்
சித்தத்தில் எழுந்தருளி,
சப்தஸ்வரங்கள் போல் முத்துக்கள் ஏழினைத்
தாங்கிய சரஸ்வதியே!
இப்பிறப்பில் இவர்போல் பாக்கியம் பெற்றவர்
இனியாருளர்? இறைவா!
ஏழேழு பிறப்பிலும் இவர்பெற்ற பிள்ளைகள்
இவர் பெயர் சொல்ல வைப்பர்,
தப்பேதுமில்லாமல் தெய்வீக வாலயம்
தாபித்த குல முதல்வி
தலைமுறை தோறுமே அன்னை ஓர் ஆலயம்
தாயாகும் சரஸ்வதியே.

-கே.எஸ்.எஸ்-

மனம்விட்டுப் பேசுவதைவிட சிறந்த அறிவு வேறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீராத விளையாட்டுப் பிள்ளை

– திரு சு. சிவராசா அவர்கள் –

மாதங்களில் நான் மார்கழியாக இருக்கின்றேன் என்று கண்ணன் கீதையில் சொல்கிறான். ஆனால் நாட்டு வழக்கில் மார்கழி பீடை மாதம் என்று சொல்கிறார்கள். பெருமையுடையது எனச் சுட்டும் பீடுடைய என்பது பீடை உடைய என திரிபடைந்து விட்டது எனவும் சமாதானம் சொல்லக் கேட்டிருக்கிறேன். வட மொழியில் தனுர் (வில்) மாதம் என்று இது சொல்லப்படும். கொட்டும் பனிக் குளிருக்குத் தாக்குப் பிடிப்பதற்காக உடலை மனிதர்கள் வில்போல வளைத்து முடங்கிக் கொள்வதால் இப்பெயர் பொருத்தமானதே என வேடிக்கையாகவும் சொல்லுவார்கள்.



பாவை நோன்பு, வைகுந்த ஏகாதசி, ஆஞ்சநேயர் ஜெயந்தி முதலாக பல புண்ணிய தினங்கள் மார்கழியில் வரும். யேசுநாதர் பிறப்பும் மார்கழியில்த் தான் கொண்டாடுகிறார்கள். தேவர்களுக்கான வைகறைப் பொழுது மார்கழியே என்பதும் சிறப்புத்தான். இத்தனை சங்கதிகளையுடைய மார்கழியாக நான் இருக்கிறேன் என்று கண்ணன் கூறியதன் பொருள் புரிகிறது அல்லவா?

ஒருத்தி மகனாய்ப் பிறந்து, இன்னொருத்தி மகனாய் வளர்ந்தவன் கண்ணன். வாசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்தவன். மாமன் ஆகிய ஹம்சனின் அச்சுறுத்தலால் கோகுலத்தைச் சேர்ந்த யசோதையுடனும் நந்தகோபருடனும் வளர்கிறான். அங்கேயுள்ள கோபியர்களோடு அவன் விளையாட்டாகச் செய்த குறும்புத்தனங்களும் திருட்டுத்தனங்களும் மேலோட்டமாகப் பார்த்தால் பிள்ளை விளையாட்டாகவே தெரியும். "தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணன் தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை..." என்று மகாகவி பாரதியார் பாடி மகிழ்கிறார். இதைப்போல பெரியாழ்வார் தாலாட்டுப் பாடி கொண்டாடுகிறார். கவியரசு கண்ணதாசன்வரையும் எத்தனையோ புலவர்கள் கண்ணனைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள்.

கோபியர்கள் சிரமப்பட்டு கடைந்தெடுத்து உறியில் பாதுகாப்பாக வைத்த வெண்ணெயை திருட்டுத்தனமாகத் தினமும் எடுத்துத் தின்று விடுவான் கண்ணன். ஆனால் எவ்வளவு முயன்றும் கண்ணன் வருவதையும், திருடிக்கொண்டு போவதையும் ஒருவராலும்

*தன் கையே தனக்குதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்க முடியவில்லை. எப்படியும் இவனைப் பிடித்தேதீருவது என்று ஒருத்தி திட்டம் தீட்டினாள். ஒரு நீளமான நூலை எடுத்தாள். அதன் ஒரு முனையை உறியிலே கட்டினாள். மறு முனையை ஒரு மணியோடு சேர்த்துக்கட்டி மறைவாகத் தொங்கவிட்டாள். திருட்டுக் கண்ணன் உறியிலே கை வைக்கும் போது அது அசையும். அந்த அசைவினால் மணி அடிக்கப்படும். உடனே ஓடிவந்து கையும் மெய்யுமாக கண்ணனைப் பிடித்து விடலாம் என அவள் நினைத்தாள்.

வழக்கம்போல யாரும் இல்லாத நேரம் கண்ணன் உள்ளே வந்தான். அவனுடைய சுழலும் விழிகளில் உறியில் பிணைக்கப்பட்ட நூல் அகப்பட்டது. ஏதோ ஒரு சூழ்ச்சி இருப்பதை அவன் புரிந்துகொண்டான். நூலின் மறுமுனையைத் தேடிக்கொண்டு போனான். மணியோடு பிணைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். அவனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. "மணியே! நான் வெண்ணெயை எடுக்கும் வரை நீ அடிக்கக்கூடாது" என்று கூறிவிட்டு உறியில் இருந்த வெண்ணெயைக் கையில் எடுத்துக் கொண்டான். மணி ஓசை கிளப்பாமல் சும்மா இருந்தது.

எடுத்த வெண்ணெயை கண்ணன் தின்பதற்கு வாயில் போட்டான். உடனே மணி அடிக்கத் தொடங்கியது. எனது சொல்லையும் மீறி ஏன் அடித்தாய், என மணியிடம் கேட்டான். "கண்ணா! உனது கட்டளையை நான் மீறவில்லை. இறைவனுக்கு நைவேத்தியம் ஆகிறபோது என்னால் எப்படி அடிக்காமல் இருக்கமுடியும்? என்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு நீ வெண்ணெயை வாயில் போடும் மட்டும் அமைதி காத்தேன் அல்லவா?" என்று வினையத்துடன் மணி கூறியது. சிரித்துக்கொண்டே கண்ணன் துள்ளி ஓடி மறைந்து விட்டான்.

இப்படியான விளையாடல்களுக்குப் பின்னால் நமது பெரியவர்கள் பல தத்துவங்களை ஏற்றிச் சொல்லுவார்கள். பசுவின் பால் ஆன்ம இலட்சணம், அது காற்றில் உள்ள நுண்ணங்கிகளால் தயிராகப் புளித்துப் போகிறது. காற்றினிடையே செயற்கை என்பது நாம் செய்யும் வினைகளின் ஊட்டலாகும். நீர் ஆகிய திருவருளைச் சேர்த்து பத்தி என்னும் மத்தினால் முறுக வாங்கிக் கடைய, ஆன்மா மலபரிபாகம் அடைந்து திரண்டு வருவதே வெண்ணெய் ஆகும். இத்தகைய பக்குவமான ஆன்மாக்களை இறைவன் தேடி வந்து தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வான் என்பதே கண்ணன் வெண்ணெய் உண்பதன் பொருளாகும்.

விறகில் தீயினன் பாலில் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டிங்கு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கி கடைய முன் நிற்குமே.

என்ற தேவாரப் பாடலின் பொருளையும் கண்ணன் விளையாடலோடு ஒப்பிட்டுப் பார்த்து மகிழலாம். மேலும் கோபிகைகள் எல்லாம் பசுக்களாகிய ஆன்மாக்கள். கண்ணன் மட்டும் பரமாத்மா ஆகிய இறைவன். பசுக்களெல்லாம் பெண்களாகவே இருப்பதாக பெரியோர் சொல்லுவர். பெண் ஜென்மம் ஈடேற இறைவனாகிய புருஷோத்தமனைச் சேரவேண்டும். அதுவே பேரானந்தப் பெருவாழ்வும் வைகுந்தப் பதவியும் ஆகும். கண்ணன் கனியமுதமாக சுவைக்கும் அவனுடைய புராணங்களையும் புகழ்பாடும் பாசுரங்களையும் படித்து இன்புற்று நாமும் அவனருளைப் பெறுவோமாக.

*இறைக்க ஊறும் மணற்கேணி, ஈயப் பெருகும் பெருஞ் செல்வம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

மண்டபத்தினுள் நுழைகிறோம். மண்டபத்தின் உள்ளமைப்பே எம்மைப் பிரமிக்க வைக்கிறது. காரணம் ஏனைய பகுதிகளுடனும் வளங்களுடனும் ஒப்பிட்டவண்ணம் உள்நுழைந்த எமக்கு சம தரையில் கட்டப்பட்டது போன்ற ஓர் விசாலமான 100'x30' அகலமான தனி இருக்கைகள் கொண்ட அமைப்பும் 30'x20' அகலமான பிரமாண்டமான மேடையும் அழகிய மரூன் நிறமும் மஞ்சள் நிறமும் கலந்த அகலத் திரை அழகுடன் நவீன பாணியில் சுருக்கி முடக்கூடிய பொறிமுறையுடனான திரையும் காணப்பட்டது. இலேசான ஓசையில் இனிய நாதஸ்வர இசை ஒலித்தவண்ணம் இருந்தது. வாசலில் மேடைக்கு அருகில் பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் விபூதி, சந்தனம் தந்து வரவேற்றனர். உள் நுழைந்ததும் மேடையின் மருங்கே இரு பாரிய குத்துவிளக்குகள், முதலில் மங்கள விளக்கேற்றல் நிகழ்வை அறிவித்தார்கள். அப்பொழுது எங்களில் சிலரது கரங்களிற்கு அழைப்பிதழ் கிட்டியது. ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண வைபவம் அகில இலங்கைச் சைவ மகா சபையும் சந்நிதியான் ஆச்சிரமமும் இணைந்த அனுசரணையுடன் என்று தலைப்பிட்டு நிகழ்ச்சி நிரல் அச்சடிக்கப்பட்டிருந்தது. ஓர் அழகிய இலச்சினையும் இதற்கென வடிவமைத்திருந்தனர். அதன் மகுட வாசகமாக "கல்விக்கு உயிர் கொடுப்போம்" என்றும் ஒளிரும் அகல் விளக்கின் மகுடமாக பல கலைப் பட்டமளிப்புத் தொப்பியும் அலங்கார நெற்கதிர் வளைவும் வரையப்பட்டு அடிநாதமாக "கல்வி மேம்பாட்டு ஒன்றியம்" எனப் பொறித்திருந்தனர்.




ஆம்! இப்பொழுது மங்கள விளக்கேற்றல் நடைபெறுகிறது. மங்கள விளக்கேற்றலில் முதலில் ஆலய பிரதமகுருக்களும் அதனைத் தொடர்ந்து சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத் தலைவர் வண. கலியுக வரதன் சுவாமி அவர்களும், ஆச்சிரம சுவாமிகள், சைவ மகாசபைத் தலைவர் திரு சோதிமூர்த்தி, பண்டாரவளை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு வ. மதியழகன், அருள்மிகு சிவசுப்பிரமணிய தேவஸ்தான நிர்வாக தர்மகர்த்தா திரு கணேசன், பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு ரகுபதி, ஜன லங்கா ரெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் திரு குமாரவேல், இந்து பரிபாலன சபைத் தலைவர் இறைபணிச் செல்வர் திரு கணேசமூர்த்தி சைவ மகாசபைப் பொதுச் செயலாளர் மருத்துவர் திரு ப. நந்தகுமார், அரலிய

*எதையும் திட்டமிடுவது மனிதன். நிறைவேற்றிவைப்பது இறைவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டர்பிரைஸ் திரு கிருஸ்ணசாமி, கோண முட்டாவ த.ம.வி அதிபர் திரு யோகேஸ் வரன் அவர்கள் எனப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிகளை ஒரு ஆசிரியரே தொகுத்து வழங்கியவண்ணம் இருந்தார். அவரின் சொல்லாடல் சமர்ப்பிப்பு மிகமிக அருமையாக - இனிமையாக இருந்தது. முதலில் வரவேற்பு நடனம். ஒரு நர்த்தன நங்கை மிக மிக அழகான ஆடலழகியாக அருமையான நாட்டிய நர்த்தன உடையில் கொஞ்சும் சலங்கை ஒலிக்க இறுவெட்டின் பாடலிசைக்கேற்ப நர்த்தனத்தைத் தொடங்கு கிறார். அருமையான பாடற்தெரிவு. "கோபுர... அழகே கொஞ்சும் புன்னகையின் ஒளி அழகே ...கண்ணுக்குள் மறைந்துள்ள வடிவழகே... கவிதைக்குள் பொதிந்துள்ள கருத்தழகே..." என்ற வரிகளைத் தாங்கிய பாடல் அருமையிலும் அருமை. இனிமைப் பாடலோடு வரவேற்பு நடனம்.

ஆம்! நித்தியஶ்ரீயின் சாரீரத்துடனான பாடலைப்போன்று மிகமிகக் கம்பீரமான பாடலும் அதற்கேற்ற வண்ண முத்திரை களுடனான ஆடலும் அமைந்திருந்தது. இரு மருங்கிலும் வெள்ளி முலாமிடப்பட்ட கிறாதி கள் கொண்ட ஏணிப்படிகள். அவற்றில் 2'x3' அளவுள்ள நந்திக்கொடிகள். மேடையின் முற்பக்கத்தில் நந்திக்கொடிச்சரம் மேடைச் சுவரில் மலையகப் பாங்கை மிகத் தத்ரூப மாக வெளிக்காட்டும் பச்சைப் பசேலென்ற மலைச்சாரலுடனான பின்னணியில் "ஊவா கல்வி மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண வைபவம்" என்ற பதாதை மிகமிக அலங்கார மாக இருந்து - நிகழ்ச்சியின் தரத்தையும் மலையக வரலாற்றிலேயே முத்தான நிகழ்வு களில் இதுவும் ஒன்று என ஆவணப்படுத்திய வண்ணம் இருந்தது சிறப்பு.

அடுத்து வரவேற்புரையை வசந்தாஸ் நகை மாளிகை உரிமையாளரும் ஊவா கல்வி மேம்பாட்டுக் கழக உபதலைவருமான திரு செல்வராஜ் அவர்கள் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து தலைமையுரையைக் கோணமுட்டாவ த.ம.வி அதிபரும் இவ்விழா வின் தலைவருமான திரு யோகேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார். வரவேற்புரையும் மிக அற்புதமாகவும் உச்சமாகவும் இருந்த துடன் தலைமையுரையில் இப்பிள்ளைகளின் கற்றலுக்குரிய வறுமைச் சூழலைப் புட்டுப் புட்டுக் காண்பித்ததுடன் இந்நிகழ்வின்மூலம் அவர்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வையும் விடியலையும் ஏற்படுத்த வேண்டும் - ஏற் படுத்தும் என்ற நம்பிக்கையையும் வெளியிட் டார்கள்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அத் தனை பெரியவர்களும் ஏதோ ஒரு வகையில் தங்கள் தங்கள் கருத்துக்களால் முத்திரை பதிக்கும் வண்ணம் மிகவும் பாண்டித்தியம் மிக்க பேச்சாளர்களைப்போல் சபையோரைக் கவர்ந்திழுத்த அக்கணங்களை ஞானச்சுடர் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விளை கின்றேன். அதுமட்டுமல்ல, சிறப்பாக ஆசி யுரையை வழங்கிய பண்டாரவளை அருள் மிகு ஶ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய ஆளுமை யையும் அவரது பேச்சையும் அவதானித்த பொழுது அவர் பிரதமகுருவுக்குரிய முதிர்ந்த தோற்றமின்றி மிக இளமையான வயதுடை யவராக இருந்தபொழுதிலும் பரந்து விரிந்த சமய அறிவுள்ளவராகவும் சமூகத்தின்பால் பற்றுள்ளவராகவும் அவ் ஏழைச் சிறார்களை முன்னேற்றும் அவாவுள்ளவராகவும் இருந் ததை அவதானிக்க முடிந்தது. அத்துடன் ஒரு நவீன படகுக்காருடன் மக்கள் மத்தியில் மிகவும் அந்தஸ்துள்ள சிங்கள, தமிழ் மொழி அறிவுள்ள ஒரு தகுதியான குருவாக வும் தென்பட்டார். அவர் தமது உரையில்...

(காட்சி தொடரும்....

பார்வை நேராக இருந்தால் பாதையில் தடையிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமசுந்தரியின் பாலுண்ட சம்பந்தர்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

வைதிக சைவ சமயமாகிய வேதநெறி தழைக்கவும் அதன் புனிதமாகிய அருள் துறைகள் சிவனருளால் நிறைவேற்றிய ஞானசம்பந்தப் பெருமான் பற்றிய சிறிய ஆய்வே இக்கட்டுரையாம்.

சிவனருட் செல்வர்களின் அரும்பெரும் செயல்கள்பற்றி சைவ சேக்கிழார் குடிப்பிறந்த வராய சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார். அது, "திருத்தொண்டர் புராணம்" எனப்படும். பாடல்கள் நிறைந்து பெரிதாக இருத்தலினால் "பெரியபுராணம்" எனவும் அழைக்கப்படும். இதன்பால் 63 நாயன்மார்களும் 9 தொகை அடியார்களுமாக 72 அடியவர் பேசப்படுகின்றனர். இவர்களில் சமயகுரவர் மூவர் (தேவார முதலிகள்) நான்காவது சமய குரவராகிய மணிவாசகப் பெருமானது வரலாறு. "திருவாதவூரடிகள் புராணம்" என்ற பெயரில் தனியாகவுள்ளது. இவை மாத்திரமன்றிச் சந்தான குரவர்களும் சிவநெறியாய சைவ சமய வளர்ச்சியின் பொருட்டு அளப்பரிய பணிகள் புரிந்துள்ளனர். பத்தாம் திருமுறையில் திருமூலதேவரது "திருமந்திரம்" மந்திர நூலும் சமய நூலும் ஆகும். "சித்தாந்த அட்டகம்" எனப்படும் நூலைப் பாடியவர் உமாபதி சிவாச்சாரிய சுவாமிகளாவர். மெய்கண்ட தேவர், மறைஞான சம்பந்தர் போன்றோரும் சைவ சமய வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டுகள் புரிந்துள்ள சந்தான குரவர்களாவர். இவற்றில் அகச் சந்தானம். புறச்சந்தானம் என இருவகையினர் உளர். இருபகுதியினரும் சைவ சமயத்தின் பாதுகாவலர்களேயாவர்.

பெரியபுராணத்தில் பேசப்படும் சிவனருட் செல்வர்களில் முதன்மையானவர் திருஞான சம்பந்தப் பெருமானாவர். இவர் புராணத்தில் ஏறக்குறைய அரைவாசிப் பகுதியை அலங்கரிக் கின்றார்.

சேக்கிழார் சுவாமிகள் "வம்பறா வரி வண்டுச் சருக்கத்திலே" தாம் திருத்தொண்டு பரவுவதற்கு ஞான சம்பந்தரது பாதமலர் பரவுகின்றார்.

"வேத நெறி தழைத் தோங்க
மிகு சைவத்துறை விளங்கப்
பூத பரம் பரை பொலியப்
புனித வாய் மலர்ந் தழுத
சீத வயற்புக லித்
திருஞான சம்பந்தன்
பாதமலர் தலைக் கொண்டு
திருத் தொண்டு பரவு வாம்"

அது புனிதவாய். தூய களங்கம் இல்லாத வாய். அது மலர்ந்து அழுகின்றது. மலர்தல் விரிதல் என்றும் சிரித்தல் என்றும் பொருள்படும். அந்தப் புனித வாய் எதற்காக மலர்ந்து அழுகிறது. தனக்காகவா? இல்லை உலகு உய்வதற்காக அழுகிறது. சைவசமயம்

*அறிவின்மை இழிவானது. அதைவிட இழிவு அறிய மனமில்லாமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்வதற்காக அழுகின்றது. சிலர் தமது தேவைகளுக்காக அழுகிறார்கள். அவர்கள் சுயநலமிகள். பதவி உயர்வு, பட்டம் பதவி வேண்டும் என்று கேட்டுக் கடவுளிடம் கோயில்தோறும் நின்று அழுது தொழுது கும்பிட்டுக் கூத்தாடுவார்கள். இத்தகை யோரின் தொல்லை தாங்கமுடியாமல் கரு வறைக் கடவுளர் யாவரும் வெளியேறியுள் ளனர் போலும். நாட்டில் நடக்கும் அக்கிர மங்கள் அனர்த்தங்களை நோக்க இந்த எண்ணமே எழுகிறது. "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற நிலைமாறி "எண் ணில் நல்அகதி நிலை" ஏற்பட்டு விட்டதோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

வேதங்களில் ஒன்று சைவம். அது சிவசம்பந்தமுடையது. பூவும், நீரும் சீலமும் கொண்டு உலகம் உய்யும் பொருட்டு எம் பெருமான் சம்பந்தர் புனிதவாய். மலர்ந்து அழுகின்றார். கடவுள் உண்டு- இல்லை என வாதிடும் மிலேச்சர்கள் கடவுள் எங்கும் இல்லை. எமது மனதிலேயே உறைகிறான் என்பதை உணருகிறார்கள் இல்லை. "உடம் புள் உறுபொருள் (இறைவன்) இருப்பது கண்டு உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே" என்கிறார் திருமூலர். கவலை மிகுதி யால் ஒருவன் தனக்காகத் தனது தேவை களை நிறைவேற்றுவதற்காகவே அழுகிறான். தாயாரிடம் பால் கேட்டுக் குழந்தை அழு கிறது. தந்தையிடம் புத்தகம் கேட்டுப் படிக் கும் பையன் அழுகிறான். லொத்தர் சீட்டு வாங்காமலே ஒருகோடி ரூபாய் கேட்டு இறை வனிடம் பக்தன் அழுகிறான். இவ்வண்ணம் பலவகையான அழுகைகளை நாம் பார்த் திருக்கிறோம். "தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்னுமாம்" என்பது முன்னோர் முதுமொழியாகும்.

ஆனால் சிவகாம சுந்தரியின் திரு முலைப் பாலுண்ட ஞானசம்பந்தப் பெருமான் அழுத அழுகை உலகையே வாழ்வு பெற வைத்தமையால் அது புனிதவாயானது. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" அற் புதங்களையும் அதிசயங்களையும் நிகழ்த் திக் காட்டிய பெருமைக்குரிய ஞானசம்பந்தப் பெருமானுடைய புனித வாய்மலர்ந்தது சிறப் புக்குரியதாகும்.

சேக்கிழார் சுவாமிகள் அன்னவரின் பாதமலர்தனைப் பணிந்து திருத்தொண்டு தொடங்குவாம் என்கிறார். பூழியர்கோன் வெப்பு நோய் தீர்த்தருளிய கவுணியர் கோனது புனித வாய் மலர்ந்தது. அழுகையின் மகிமை யாகும். புனிதவாய் மலர்ந்து அழுத சீர்காழி மைந்தனது கோத்திர மகிமை சேக்கிழார் சுவாமிகளின் திருத்தொண்டினை விரைவு படுத்தும் என்பது சுவாமிகளின் நம்பிக்கை யாகும். சுவாமிகளது தொண்டாவது "திருத் தொண்டர் புராணம்" எனப்படும் பெரியபுரா ணம் பாடுதலேயாகும் இதற்குப் பாடும் பணியே பணியாயுடைய புனிதவாயராய சம்பந் தப்பெருமானது பாதாரவிந்தம் பரவுகிறார்.

திருமருகல் என்னும் ஊர். நல்ல செழிப்பு மிக்க செல்வ வணிகர் வாழ்ந்த திருவூர். அங்கு பெருவணிகச் செல்வர் ஒரு வருக்கு நான்கு கன்னிப் பெண்கள் இருந் தனர். அவர்களைச் சொந்த மருமகனுக்கு மணம் புரிந்து வைப்பதாகக் கூறி மருமகனை ஏமாற்றிவிட்டு அதிக பணம் பெற்றுக்கொண்டு விற்று வந்தார். இவ்வாறு மூன்று பேரை விற்றது கண்ட நான்காவது மகள் தந்தை யாரது செயலை வெறுத்து ஏமாற்றப்பட்ட வருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் தந்தைக்குத் தெரியாமல் மருமக னாக வரிக்கப்பட்டவருடன் சேர்ந்து சென்று திருமருகல் ஆலயத்தின் திருமடத்தில் இரவு தங்கினர். அவ்விரவு கொடிய பாம்பு தீண்ட விடம் தலைக்கேறி பையன் மாண்டான். இதுகண்ட பேதைப் பெண் ஏதிலியாகப்

*நல்ல நண்பர்கள் துயரத்தை எளிதாக்குகிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதறினாள். கதறினாள். துடித்தாள். களவாக ஓடிவந்தமையால் கோபங்கொண்ட தந்தையின் சாபம் நாகமானதோ என்றும் ஐயுற்றாள். "காகம் திட்டி மாடு சாகாது" என்பதை எங்கே பேதை அறிவாள்.

ஸ்தல யாத்திரை மேற்கொண்டிருந்த திருஞானசம்பந்தர் "திருமருகல்" என்ற கோவிலில் இளம்பிறையுடன் வெந்த கண் உடைய பாம்பும் அணிந்த செஞ்சடாமுடி சூடிய "மாணிக்க வண்ணர்" என்ற பெயருடைய சிவனை வணங்கி மருகல் மடத்தில் ஒரு பக்கல் இருந்து சிரம பரிகாரம் மேற்கொண்டார்கள். அப்பொழுது அவர் காதில் கன்னிப் பெண்ணொருவர் அழும் ஓசை கேட்கிறது. யாதென உசாவுகிறார். தாய் தந்தையரை இழந்து நீதி வழுவா நெறி முறையில் வாழவென்று கூடிவந்தவர் மேனியை நான் தீண்டு முன்னரே நாகம் தீண்டி விட்டது என்றார்.

இதுகேட்ட சீர்காழி மைந்தன் இதற்கொரு அனுசரணை மேற்கொள்ள வேண்டும் எனத் துணிந்து தமது புனிதவாய் மலர்ந்தழுது பாடுகின்றார்.

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே"

என்று திருமருகலில் 11 பதிகங்கள் பாடுகின்றார். பாடுதலும், வணிகன் பொங்கி மேல் ஏறிய நஞ்சு நீங்க எழுந்து நின்றான். இந்த அதிசயத்தை- அற்புதமான செயலை நேரிலே கண்ட தொண்டர் கூட்டம் சம்பந்தப் பெருமானை வாழ்த்தி நின்றது. இவையெல்லாம் பார்த்துப் பரவசம் எய்திய பெண் அழுகையள் தொழுகையளாகி தலைமீது குவித்த கையளாய் பாதம்பட வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்று இருவருவமாக இணைந்து திருமருகல் பெருமானை வணங்கி நல்லற வாழ்வுக்காகத் திருவருள் வேண்டி நின்றனர். இவ்வாறு "சிவகாமசுந்தரியின் திருமுலைப் பாலுண்டு சிவஞானம் கைவரப் பெற்றவராய திருஞானசம்பந்தப் பெருமான் புனிதவாய் மலர்ந்தழுது தலங்கள் தோறும் சென்று பல பதிகங்கள் பாடியருளினார். அவை பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளுடன் அடக்கப்பட்டுள்ளனவாகும்.

"பூழியர் கோன் வெப்பொழித்த
புகலியர் கோன் கழல் போற்றி"
"திருமுலைப்பால் சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி"

**ஆன்மீகச் சிந்தனை**

எல்லோரிடமும் இறைவன் இருக்கின்றான் என்பதை மக்கள் உணர்ந்தால், ஆன்ம நேய ஒருமைப்பாடு இயல்பாகத் தோன்றிவிடும். மனதைத் தூய்மைப்படுத்த உதவும். மனத் தூய்மையோடு இருப்பவர்களே வீடுபேறு பெறுவதற்குத் தகுதி உடையவர்கள். உடலை வருத்தித்தான் தவம் செய்ய வேண்டும் என்பதில்லை. வாக்கினாலும் தவம் செய்யலாம் என்பதை பகவத்கீதையின்மூலம் அறியலாம்.

*இன்ப துன்பங்களை அனுபவிப்பது ஆன்மாவேயன்றி மனமன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 05

## இறப்பவர்களும் நிரந்தரமானவர்களும்

### 01. பாதுகாப்புப் பொறிமுறைகள்.

ஓர் ஆன்மீக சாதகன் தனக்கு வேண்டிய முடிவுகளையும் நோக்கத்தையும் முன்கூட்டியே தயாரித்துக்கொண்டு கூட இருக்கலாம். எனினும், அவன் நீண்ட காலத்தில் எதிர்நோக்கக்கூடிய அடிப்படைச் சிக்கல்களைப் பகவத்கீதையின் முதலாவது அத்தியாயம் சுட்டிக்காட்டுகின்றது. எமது ஆன்மிக அபிலாசைகளின் ஆரம்பக்கட்டத்தில், எமது ஆளுமையின் வெளியாய் உள்ள அடுக்குகளின் கீழே, காணமுடியாத ஆழத்தில் மறைந்து கிடக்கும் பிரச்சினைகளை நாம் பூரணமாக உணருவது இல்லை. அப்படியான பிரச்சினைகள் எமது நாளாந்த வாழ்க்கையோடு நேரடியாகத் தொடர்பு கொள்வன அல்ல. எம்மிடம் நனவிலி ஆளுமை ஒன்று உண்டு. அது எமது உடலோடு கூடிய, வரையறைக்கு உட்பட்ட வாழ்வின் ஆளுமையைவிட வேறானது ஆகும். அத்துடன் எமது நனவிலி ஆளுமை அதன் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரையில் மிகவும் பெரியது. அந்த நனவிலி ஆளுமை எமது உடலும் அதனோடு கூடிய புலன் தொடர்புகளும் என நாம் வெளியில் காணும் சில வெளிப்பாடுகளை விடவும் மிகப்பெரியது ஆகும்.

எங்களை இரகசியமான முறையில் மகிழ்ச்சி இன்றி வைத்துக்கொள்ளும் பல்வேறு வகையான பயங்கள் உள்ளன. அத்துடன் நனவு மட்டத்தில் வாழ்க்கையின் பல நடவடிக்கைகள் இந்தப் பயங்களை ஒதுக்கி வைப்பதற்கான முயற்சிகளே ஆகும். அதன் பின்பு அவை எல்லாம் இருப்பதில்லை என்று நாம் கற்பனை செய்கின்றோம். நாம் பல்வேறு வகையான வேலைகளில் மூழ்கும் அளவுக்கு எங்களை ஈடுபடுத்திக் கொள்ளுகின்றோம். அவ்வேலைகள் யாவும் இந்தப் பயங்களை வெளியேற்றுவதற்கான ஒரு வகை வாயில்கள் ஆகவோ அவற்றை எதிர்க்கக்கூடிய ஒரு சக்தியாகவோ அமைகின்றன. உளவியலாளர்கள் இதனைப் "பாதுகாப்புப் பொறிமுறைகள்" என்ற தமது கலைச் சொல்லினால் வழமையாக அழைக்கின்றனர். அவ்வாறான சில உளவியல் பொறிமுறைகளின்மூலம் நாம் எங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றோம். அந்தப் பொறிமுறைகளை எமக்கு உள்ளேயே ஒருவகையான சுய ஏமாற்று என்ற வகையில் நாம் உருவாக்கி இருக்கின்றோம். இது தீக்கோழியின் மனப்பான்மையை ஒத்தது ஆகும். தீக்கோழி வெளியே ஏதாவது பயம் மிரட்டும்போது

*பொய்யை விட்டொழித்தவர்கள் புண்ணியவான்கள் ஆவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தலையை மணலுக்குள் புதைத்துக்கொள்ளும் என்று கூறப்படுகின்றது. அது வெளியில் உள்ளவற்றைத் தான் காணமுடியாதவாறு தனது தலையை மணலினுள் மறைத்துக் கொள்கின்றது. அத்துடன், அது வெளியில் எதையும் காணாத அவ்வேளையில் வெளியில் எதுவும் இல்லை என்று கருதுகின்றது. இது தீக்கோழியின் வழிமட்டும் அன்று. அது ஒவ்வொரு மனிதனும் தீர்க்கமுடியாத பிரச்சினைகளை எதிர்நோக்கும்போது அவனிடம் ஏற்படும் மனப்பான்மையும் ஆகும்.

**02. இயற்கையின் இரகசியம்.**

பெரும்பாலும் பிரச்சினைகள் நனவிலி மட்டத்திலேயே இருக்கின்றன. அவை எப்பொழுதும் நனவு மட்டத்தின் மேற்பரப்பில் இருப்பது இல்லை. அவை எல்லாம் இருக்கின்றன என்று எமக்குத் தோன்றாமலும் போகலாம். நாம் புலன்களோடு கூடிய ஓர் உலகில் வசதியாக இருக்க வைக்கப்பட்டிருக்கின்றோம். அந்த உலகில் புலன்கள் போதிய அளவு போஷாக்கைப் பெறுகின்றன. அத்துடன், அதே புலன்கள் எம்மை அபாயகரமான ஆழத்திற்குள் பூரண அறியாமையிலும் வைத்திருக்கின்றன. அந்த அபாயகரமான ஆழத்தின் ஊடாகவே எமது வாழ்வின் எதிர்கால கட்டங்களை நாம் கடந்து செல்லவேண்டி உள்ளது. நாம் புலன்களினது முன்கூட்டிய சிந்தனை இல்லாத நடவடிக்கைகளினால் மூளைச்சலவை செய்யப்படுகின்றோம். அந்த அளவுக்கு எமக்கு முன்னால் உள்ளது எது என்பதை நாம் அறியமுடியாதவர்கள் ஆக இருக்கின்றோம். அதாவது, நாளைக்கு என்ன நிகழும் என்பதை நாம் அறிய முடியாதவர்களாக இருக்கின்றோம். எதிர்காலத்தில் எதிர்கொள்ளப்படவேண்டிய எல்லா விடயங்களினதும் இக்கருத்துக்கு நாம் உணர்ந்து விழிப்படையுமாறு ஆக்கப்பட்டால் அதன் பயத்தினாலே இப்பொழுதே நாம் அழிந்து போகலாம். ஆனால் இயற்கை தனது நோக்கத்தை மாற்றி எவரொருவரும் இந்த வகையில் இறப்பதை விரும்புவது இல்லை. இயற்கை எல்லாவற்றையும் இரகசியமாகவே வைத்துக்கொள்ளுகின்றது. அத்தியாவசியம் ஆகும்போது மட்டுமே அது தனது அந்த இரகசியம் வெளியாக அனுமதிக்கின்றது.

**03. எவ்விடத்திலும் உள்ளது எம்மிடத்திலும்.**

வீர புருஷன் அர்ச்சுனனின் முன்னால் மகாபாரத யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டி இருந்த அந்தவேளையிலேதான் மனிதனிடம் நனவிலி ஆக இருக்கும் அந்தவிடயம் அவனது சொந்தக்குரலில் வெளிவந்து பேசியது. வேறு வகையில் அறியப்படாததும், கனவு காணப் படாததும் ஆக இருந்த பயங்கள் தாம் மட்டுமே உண்மையில் உள்ளன என்றவாறு அப்போது தாமாகவே வெளிப்பட்டன. அவை அர்ச்சுனனது ஆளுமையை முற்றாக மாற்றும் அளவு ஆற்றலுள்ள மாதிரி அவனைக் கௌவிப் பிடித்துக்கொண்டன. அத்துடன், அவன் அதற்கு முன்பே இருந்த அர்ச்சுனனாக அன்றி அப்போது வேறு ஒருவன் ஆகிவிட்டான். மிகமிகக் கடுமையான சூழ்நிலைகள் எம்மை ஆட்கொள்ளும் ஆயின், ஒரு கணத்திலேயே நாம் திடீரென

*இறைவனின் நாமமாகிய மந்திரங்களின் சக்தி ஒருபோதும் குறைவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஆட்களாக மாறமுடியும். ஒருவர் முற்றும் வித்தியாசமான ஆளுமை உடையவராக மாறுவதற்கு ஒரு விநாடியே போதுமானது. அத்துடன் நாம் எமக்கு உள்ளேயே எல்லா வற்றையும் உடையவர்களாக இருப்பதனால் எந்த வகையான ஓர் ஆளுமை உடையவராக வர விரும்பினாலும் அவ்வாறு வரமுடியும். எவ்விடத்திலும் உள்ள எல்லாமே எமக்கு உள்ளேயும் இருக்கின்றது. எனவே, குறித்த ஒரு சூழ்நிலையில் எதுவும் வெளிவருவதற்கு வாய்ப்பு உண்டு. அவ்வாறு அது வெளிவருவது நாம் மாற்றி அழுத்துகின்ற சுவிச்சிலேதான் தங்கி உள்ளது. நாம் அலாவுதீனின் அற்புத விளக்கைத் தொட்டதுபோலவே அப்போது நம்மிடமுள்ள பேரறிவு வெளிப்படுகிறது. அலாவுதீனின் அற்புத விளக்கை அராபிய இரவுகள் என்ற கதைநூலில் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

**04. வீழ்ச்சி.**

மிகக் கடுமையான நோய்களைப்போல அர்ச்சுனனது மனதைப் பெரும் பயங்கள் வெற்றிகொண்டன. நாம் ஆன்மீகப் பாதையில் அடி எடுத்து வைக்க ஆரம்பிக்கும்போது எமது மனங்களைப் பல்வேறு வகையான சந்தேகங்கள் தொந்தரவு செய்ய ஆரம்பிக்கும். அதற்குக் காரணம், நாம் தெரிவு செய்துள்ள பாதையின் அர்த்தத்தைத் தவறாகப் புரிந்து கொள்வதனால் ஆகும். நாம் ஆன்மீக வாழ்க்கைக் கலையில் போதிய அளவு தகுந்த பயிற்சி பெறாமையின் காரணத்தினாலே அந்தத் தவறை விடுகின்றோம். ஆன்மீக நூல்களைக் கற்பதனாலோ ஆன்மீகக் கருத்துக்களைக் கேட்பதனாலோ கடவுள் இடத்தில் அன்பைத் தூண்டுகின்ற உணர்ச்சி ஒருவரிடம் என்றும் நம்பக்கூடிய ஆதரவாக வரும் என்று கருத முடியாது. இதயத்துக்கு உள்ளே ஆழமாகச் செல்லக்கூடிய ஒரு நம்பிக்கை அதற்கு இருக்க வேண்டும். புவியின் இரண்டு துருவங்கள்போல தலையும் இதயமும் வெவ்வேறானதாக இருக்குமட்டும் உளக்கருவிகள் ஒழுங்கின்றி அமைவதற்குச் சாத்தியம் உண்டு. அத்துடன் அந்த நிலையில் எமது ஆளுமையின் சிறிய துண்டுகளாக நாம் வெவ்வேறு திசைகளில் தூக்கி வீசப்படுவோம். அதன் விளைவாக நம்மிடம் முன்கூட்டியே இருந்தவற்றைக்கூட நாம் இழந்துபோக நேரலாம். இதனையே மறைஞானம், சமயம், ஆன்மீகம் என்பவற்றில் கலைச்சொல்லில் “வீழ்ச்சி” என்று அழைக்கின்றனர். நாம் எம்மைத் தகுந்த முறையில் கற்றுக்கொள்ளாமையின் காரணமாக இந்த வீழ்ச்சி ஏற்படுகின்றது. அத்துடன் புலக்காட்சிகள், சமூக உறவுகள் என்பவற்றுக்கு ஊடாக நாம் அறிந்து கொள்வனவற்றின் அடிப்படையில் நாம் பிழையான கருத்துக்களை வைத்திருப்பதனாலும் இந்த வீழ்ச்சி ஏற்படுகிறது. நாம் அந்த ஆன்மீகப் பாதையில் முன்னேறும்போது பின்பு மனத்தில் எழுகின்ற சந்தேகங்கள் பல வரலாம். அர்ச்சுனனது மனத்தில் எழுந்த சந்தேகங்களாகப் பகவத்கீதையின் முதலாவது அத்தியாயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளவை ஒரு சிலவே ஆகும். அவ்வாறு அர்ச்சுனன் கிருஷ்ண பரமாத்மாவுக்கு எடுத்துரைத்த மிகக் கடுமையான பிரச்சினைகள் ஒரு சிலவே ஆகும். அவை எல்லாம் யுத்தத்துக்கான தயாரிப்பே ஆகும்.

(தொடரும்...

*கல்வியின் பயன் அறிவும் பணிவுமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர்களைக் காப்பாற்ற பாதணிகளைக் கையிலேந்திய பரந்தாமன்

– திரு வீ.எஸ். ஸ்ரீகந்தசாமி அவர்கள் –

குருஷேத்திரப் போர் நடந்து கொண்டிருந்தது. கௌரவர் பக்க சேனைத் தளபதியாக கங்கை மைந்தன் பீஷ்மர் யுத்தகள மாடி மாலை பாசறை திரும்புகின்றார். அவ்வர் கூடாரம் சென்ற படை வீரர்கள் யாவரும் பீஷ்மரை புகழ்ந்து பாராட்டுகின்றார்கள். கௌரவர் தலைவன் துரியோதனன் மட்டும் கடுமையான வார்த்தைகளால் பீஷ்மரைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான்.

பீஷ்மரைத் தன் படைத்தளபதியாக நியமித்தும் ஐவரை அடக்கமுடியவில்லையே என்று ஆதங்கம், பாண்டவர்கள் சேனையின் முக்கிய புள்ளியாகிய அருச்சுனனை அழித்தால்தான் போரில் வெல்லமுடியும் என்பதை அறிந்திருந்ததன் காரணமாக கோபத்தை பிதாமகர் பீஷ்மரிடம் காண்பித்தான். அருச்சுனன் உங்கள் அருமைப் பேரன்தானே, அவனைக் கொல்ல உங்களுக்கு மனம் வராது, ஒப்புக்குத்தானே ஏனோதானோவென்று போர் புரிகிறீர்கள் என்று பீஷ்மரை பற்றி முறைகேடாகப் பேசினான்.

பீஷ்மர் கூறினார், "படைத்தளபதி என்ற முறையில் என்னுடைய கடமையை நான் தவறாமல் செய்வேன். துரியோதனா! நீ இப்படிக் கூறியபடியால் நாளைய போரில் வெல்லப்போவது அருச்சுனனா? அல்லது நானா? என்பதில் இரண்டில் ஒன்று பார்த்து விடுகின்றேன்" என்று மார்தட்டி வீரசபதம் இட்டார்.

இந்தச் செய்தி காற்றாகப் பறந்து பஞ்ச பாண்டவர்கள் காதுகளுக்கும் புகுந்து கலக்கத்தை உண்டுபண்ணியது. பாஞ்சாலி பதைபதைத்து துடியாத் துடித்து, முன்பு தன் மானத்தைக் காப்பாற்றிய பரந்தாமன் பாதார விந்தங்களை சரணாகதியடைந்தாள். முன்பு பசுக்கூட்டங்களைக் காப்பாற்றும் பொருட்டு கோவர்த்தனகிரி மலையைப் பிடுங்கி குடையாகப் பிடித்து கனமழையிலிருந்தும் காப்பாற்றியர். தன்னையே சரணாகதி அடைந்தவர்களை கைவிடுவாரா என்ன?

அன்று இரவுநேரம் எங்கும் இருளாக இருந்தது. போரில் மடிந்தோர்கள் அங்கும் இங்குமாக சிதறிக் கிடக்கிறார்கள். இவற்றை எல்லாம் தாண்டி அண்ணனும் தங்கையும் சென்றுகொண்டு இருந்தார்கள்.

"பாஞ்சாலி! போர்க்களத்தில் பெண்கள் யாரும் செல்லக்கூடாது உன்னுடைய கால்கொலுசு ஒலி உன்னைப் பெண் என்று காட்டிக் கொடுத்துவிடும். அதைக் கழற்றி என்னிடம் கொடு" என்றான் கண்ணன். அப்படியே திரௌபதி செய்தாள்.

இருவரும் ஒரு கூடாரத்திற்கு அருகில் வந்தார்கள். கூடாரத்துக்குள்ளே ஒருவர் சிந்தனையில் ஆழ்ந்தபடி குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார். "அண்ணா இது யாருடைய கூடாரம்?" இதுதான் பீஷ்மர் தங்கியிருக்கும் கூடாரம். அவர் நாளைய போரை எப்படி நடத்துவது என்று ஆலோசனை செய்துகொண்டு இருக்கின்றார். அவர் எதிர்ப்புறம் செல்லும்போது நீ உள்ளே சென்று உன்னை யார் என்று அறியமுன் அவர் பாதங்களில் விழுந்து வணக்கம் செய். அவர் உன்னை வாழ்த்தி வழி அனுப்புவார். அப்படியே செய்கிறேன் அண்ணா. நீ பாதணியுடன் சென்றால் உள் நுழைவதை காலணி காட்டிக் கொடுத்துவிடும். காலணியைக் கழற்றி

நமது இன்றைய நிலையின் காரணம் நாம் எண்ணிய எண்ணங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் கொடுத்துவிட்டுச் செல்வாயாக என்றார்.

பாஞ்சாலியும் பாதணியைப் பரந்தாமனிடம் கொடுத்துவிட்டு ஓசைபடாது உள் நுழைந்து வணக்கம் செய்தாள். பாதத்தில் குனிந்து வணங்கியபடியே இருந்ததால் வந்தது யார் என்று அறிய முன்னரே பீஷ்மர், "தீர்க்க சுமங்கலியாக வாழ்வாய்" என்று ஆசீர்வாதம் செய்துவிட்டார். பின்பு பீஷ்மர், பெண்மணி நீ யார்? எதற்காக இங்கு வந்தாய்? என்று கேட்டார். திரௌபதி தன் முகத்திரையை விலக்கியதும் பீஷ்மர் திடுக்கிட்டுப் போனார்.

பீஷ்மர் திரௌபதிக்கு திருமாங்கலியப் பிச்சை அளித்துவிட்டதால் அவரால் இனிமேல் பஞ்சபாண்டவர்களில் யாரையும் கொல்ல முடியாது என்பது விளங்கிவிட்டது. இந்தக் காரியத்தை கண்ணன்தான் செய்திருப்பார் என்று புரிந்துகொண்டார். பீஷ்மர் திரௌபதியைப் பார்த்து நீ தனியாக வந்தாயா? அல்லது உன்னை யாரும் அழைத்து வந்தார்களா? என்று கேட்க, "அண்ணன் கண்ணன் அழைத்து வந்தார்" என்றாள் திரௌபதை. இப்போது அவர் எங்கே? கூடாரத்துக்கு வெளியே இருக்கின்றார் என்று திரௌபதி கூறியதும் அவளையும் அழைத்துக்கொண்டு பீஷ்மர் கூடாரத்திற்கு வெளியே வந்தார். அங்கே கண்ணன் ஒரு கையில் கால் கொலுசையும் பிடித்தபடி மறுகையால் பாதணியையும் ஏந்தியபடி பகவான் பரந்தாமன் நின்றுகொண்டிருந்தார்.

பகவானின் பாதக்கமலங்களில் இந்த அண்டசராசரமே சரணாகதி அடைந்திருக்கும் போது கண்ணனின் காலடியே சரணம் என்று அடைக்கலம் புகுந்த திரௌபதியின் துன்பத்தைத் துடைக்கத்தானே அடியாளின் காலணியை ஏந்தி நிற்கின்றார்.

பரந்தாமா என்ன காரியம் இது. தாங்கள் பாதணியை ஏந்தி நிற்கலாமா என்று பதறியபடி கேட்டார் பீஷ்மர். என் பாதங்களைச் சரண்புகுந்த பக்தர்களைக் காப்பாற்ற எந்த வேலையையும் செய்யத் தயங்கமாட்டேன். பாதணியை ஏந்தினால் என்ன - பார்த்தனைக் காப்பாற்றி விட்டேன் என்றார் பார்த்தசாரதி.

பீஷ்மர் தனது கைகளைக் கூப்பி வணங்கியபடி, கருணைக் கடலே! உனது லீலைகளைப் புரிந்துகொண்டேன். அருச்சுனனைக் காப்பாற்றியது மட்டுமல்ல எனக்கும் மோட்சம் அளித்துள்ளீர்கள் என்று கண்ணன் காலடியில் விழுந்து வணங்கினார். பரந்தாமனின் பாதார விந்தங்களை நாமும் பணிந்து வணங்குவோம்.

**காவலனாய் இருந்து காக்கும் சந்நிதியான்**

பூவரச நிழலின் கீழே
புனிதமான ஆற்றங் கரையிலே
ஆவலுடன் வீற்றிருந் தருளும்
அன்னதானக் கந்தன் அடியவர்
காவலனாய் இருந்து காக்கும்
காரியமே அதிசயம் தானே
தேவர்கள் துயர்துடைத் ததேவன்
தேடிவந்த இடம்தான் சந்நிதி.

-வ. யோகானந்தசிவம்-

*கடவுளின் சட்டம் ஒருவருக்கும் தீங்கு செய்யாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| V.S.P. பாலா | கஸ்தூரியார்வீதி | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| வைரமாளிகை | கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| திரு கணேஸ் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சபா ரேடேர்ஸ் | ஆஸ்பத்திரிவீதி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| ஓசன் ரேடேர்ஸ் | ஸ்ரான்லிவீதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க.கு. கந்தையாபிள்ளை | ஆஸ்பத்திரிவீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| கு. கங்கைவேணியன் | வேணி ஸ்ரோர்ஸ் | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி |
| அம்பிகாபதி பான்ஸிஹவுஸ் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சாரங்கா நகைமாடம் | கஸ்தூரியார்வீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ஸ்ரீ நதியா நகைமாடம் | ஸ்ரான்லிவீதி | யாழ்ப்பாணம் | 6மூடை அரிசி |
| புதிய நதியா நகைமாடம் | கஸ்தூரியார்வீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| பெற்றா ஏசென்ஸ் | ஆஸ்பத்திரிவீதி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| ஸ்ரீரங்கன் ஸ்ரோர்ஸ் | ஆஸ்பத்திரிவீதி | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| சிவா பிரதேர்ஸ் (ஞானம்) | | திருநெல்வேலி | 2மூடை அரிசி |
| த. விக்னேஸ்வரன் | | கன்னாதிட்டி | 2000. 00 |
| திரு சின்னண்ணா (வயரிங்) | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| இந்திரா கபே | | நெல்லியடி | 10000. 00 |
| சிவதொண்டன் நிலையம் | | யாழ்ப்பாணம் (பொருட்கள் வகையில்) | 35000. 00 |
| செல்லமுத்தூஸ் புடவையகம் | | நெல்லியடி | 10000. 00 |
| அன்பர் | | கொழும்பு | 4மூடை அரிசி, 1மூடை தீட்டல் |
| நந்தினி என்ரபிறைஸ் | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி, 10k பருப்பு |
| வெங்கடேஸ்வரா | கஸ்தூரியார்வீதி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| சுந்தரம் பிறதேர்ஸ் | | அப்புத்தளை | 1மூடை அரிசி |
| சங்கரப்பிள்ளை சண்முகம் | | அவுஸ்திரேலியா | 50000. 00 |
| சு. செல்லத்துரை | | மானிப்பாய் | 30000. 00 |
| நிறோசன் தீஜஷன் | | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| அரியரட்ணம் கதிர்ஷன் | | வல்வெட்டி | 10k அரிசி |
| சாந்தி புடவையகம் | நவீன சந்தை | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| நந்தலாலா | | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| பழனி கடை | | தொண்டைமானாறு | 2மூடை அரிசி |
| T. சண்முகவரதன் | (தொண்டைமானாறு) | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| வ. இராசநாயகம் (கவிதா பொடி பில்டேஸ்) | | கரவெட்டி | 2மூடை அரிசி |
| ஸ்ரீபதி தவமலர் | | புறாப்பொறுக்கி | 2மூடை அரிசி 10000. 00 |

*நீதிபதியைவிட காலம்தான் உண்மையை வெளியே கொண்டுவருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருமதி பார்வதிப்பிள்ளை தங்கராசா ஆசிரியை நீர்வேலி | | 15000. 00 |
| அன்ரியம்மாமூலம் செ. குமாரச்சந்திரன் | U.K | 10000. 00 |
| சிவா நறுமணப் பூங்கா ஆஸ்பத்திரிவீதி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| கண்ணாடிக் களஞ்சியம் | நெல்லியடி | 4மூடை அரிசி மரக்கறி |
| பா. சிவபாதசுந்தரம் | வல்வெட்டி | 2மூடை அரிசி |
| திரு வேலு | கைதடி | 1மூடை அரிசி |
| ஐ. சிவநாதன் மருதம் | நெல்லியடி | 5மூடை அரிசி |
| சி. கிருபாகரன் | அச்சுவேலி | 30000. 00 |
| ஈஸ்வரன் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திருமதி விஜயகலா மகேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 1பரல் தே.எண்ணெய், 2மூடை அரிசி, பருப்பு, சோயா |
| கோ. சங்கவி | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| Dr மகிள்நங்கை | கொழும்பு | 10000. 00 |
| க. கிரிவேல் | மட்டுவில் | 1000. 00 |
| ப. கஜேந்தினி | கொழும்பு | 500. 00 |
| ப. சரவணகோபி | கொழும்பு | 1000. 00 |
| R. யோகேஸ்வரன் | இணுவில் தெற்கு | 10000. 00 |
| வே. ஐயம்பெருமாள் | கொழும்பு | 2000. 00 |
| கு. கிரிப்பிரியன் | கொழும்பு | 1500. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 4மூடை அரிசி |
| P. சிவதவேந்திரன் | மொறட்டுவ | 5000. 00 |
| ச. மதியழகன் | நயினாதீவு | 1000. 00 |
| S. லோகநாதன் குடும்பம் | கொழும்பு | 500. 00 |
| S. அருளையா | கொழும்பு | 1000. 00 |
| ரூபி ராயு | லண்டன் | 500. 00 |
| திருமதி ச. கனாதீபன் | தெகிவளை | 5000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 3புட்டி பருப்பு |
| அம்பாள் ரேடேர்ஸ் | கோப்பாய் | 10000. 00 |
| T. கமலாதேவி | தெகிவளை | 500. 00 |
| தனபாலசிங்கம் புனிதவதி | கனடா | 4புட்டி அரிசி, மரக்கறி |
| சு. இரத்தினவடிவேல் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| செ. அன்னலிங்கம் | தாவடி | 10000. 00 |
| அ. கேசவராஜா குடும்பம் | லண்டன் | 10000. 00 |
| ஐ. ஜெயரட்ணம் | நவக்கிரி | 5000. 00 |
| S.K. சண்முகசுந்தரம் | சொயிசாபுரம் | 1000. 00 |
| க. கிருஸ்ணானந்தி | இமையாணன் | 1000. 00 |
| மகேஸ்வரநாதன் குடும்பம் | அராலி | 1000. 00 |
| மு. தமிழ்ச்செல்வன் குடும்பம் | கனடா | 100 டொலர் |

(தொடரும்...

பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரில் தெய்வத்தைக் காணுங்கள்

– திரு கந்த சத்தியதாசன் அவர்கள் –

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழிக்கேற்ப 1863ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி தைப்பொங்கல் நன் நாளில் இந்து மதத்தில் எழுச்சிகாண வந்த உதயசூரியன்போல அவதரித்தவரே பாரெங் கும் போற்றும் விவேகானந்தர் என்ற நரேந் திரனாவார். அன்று ஐரோப்பியர் இந்தியா, இலங்கையை அடிமை கொண்டிருந்த காலம். மக்களை மதம் மாற்றிய காலம். இந்துக்கள் தலைதடுமாறிய காலம். இவற்றிற்கு மத்தி யிலும் பன்மொழிகளை மட்டுமன்றி பல சமய நூல்களையும் நன்கு கற்றுத்தேறிய பட்டதாரி யாக விளங்கிய நரேந்திரன் என்ற தீபத்திற்கு ஒளியேற்றி வைத்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரேயாவார்.

இராமகிருஸ்ணரிடம் தெய்வத்தையே காட்டும்படி கேட்டு கண்டுகொண்ட நரேந்திரன் தன் ஆத்மாவை உயர்த்திக்கொள்ள முற் பட்டவேளை நீமட்டும் வாழ்ந்தால் போதாது. உன் அயற் சமூகத்தைப் பார். இந்தியாவின் ஏழ்மை நிலையைப் பார். இந்துக்களின் வாழ்க்கையை ஆன்மீகப் பயணத்தைத் தட்டி எழுப்பி அவர்களை நன்னிலைக்கு உயர்த்த வேண்டும் என வழிகாட்டி விவேகமுள்ள விவேகானந்தராக உருவாக்கியவர் இராம கிருஸ்ண பரமஹம்சர்.

இளைஞர்களே! சற்று சிந்தித்துப் பாருங்கள். 1893ஆம் ஆண்டு அமெரிக்க சிக்காக்கோவில் சர்வமத மகாநாடு நடை பெறவிருந்தவேளை 31 வயது இளைஞனாக அழையா விருந்தாளியாக தன் ஆற்றலால் குரு பக்தியால் ஆன்மீக வீரத்தால் மகா நாட்டில் பேசும் வாய்ப்பைப் பெற்றார். தெய் வம் என்பதோர் சித்தமுண்டாகில் கைகூடா தது எதுதான் எனுமடிப்படையில் என்ன ஆச்சாரியம். சுவாமி விவேகானந்தர் பேச எழுந்து "வணக்கம்" கூறிய வேளையில் சபையிலிருந்த 600க்கு அதிகமான பேராசிரியர் கள், கல்விமான்கள், வேற்று மதத் தலை வர்கள் எழுந்து தலைசாய்த்து வணங்கி அமர்ந்தார்கள்.

அந்நியர்களோ தமது சமயம், தமது இனம் என்று குறுகிய கிணற்றுக்குள் வாழ்ந் தவர்கள் தங்கள் மதத்தை வளர்க்க வேண்டும் என்று எண்ணிய காலத்தில் இந்துக்களை தம்மதத்தின்பால் ஆசைகாட்டி கவர்ந்த காலத் தில் உலக சகோதரத்துவத்தை வலியுறுத்தி யவர் எங்கள் விவேகானந்தர்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்குமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றினாலும்
அங்கு அவைதாம் எம்பெருமா ஈற்றில்உனை
அடைகின்ற ஆறேயன்றோ.

*ஏமாற்ற நினைப்பவனைக் கடவுள் முன்பே ஏமாறச் செய்துவிடுவார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பகவத்கீதையில் சில வரிகளைக் கூறி சர்வமத மாநாட்டில் காலையில் ஒலித்த மணி மதங்களுக்கிடையேயுள்ள பிணக்கு களுக்கு சாவுமணியாகட்டும் எனப் பேசி பெருமை பெற்றவர்.

அமெரிக்கா மட்டுமல்ல இங்கிலாந் துக்கும் சென்று இந்துமத பெருமைகளையும் அதன் வாழ்க்கைத் தத்துவங்களையும் எடுத்துப்பேசி அங்கேயே பலரைத் தன்பால் கவர்ந்து சீடராக்கியவர் விவேகானந்தர். இந்து சமயத்தைப்பற்றிக் கூறிய விடயம் இன்றும் சிந்திக்கத்தக்கது.

இந்திய மண்ணிலேயே ஒன்றன்பின் ஒன்றாக பல கிளைச் சமயங்கள் தோன்றின. அவை வைதீக சமயத்தின் அடிப்படையையே உலுப்பியது. ஆனால், பயங்கரமான நில நடுக்கம் ஏற்பட்டாலும் கடலானது சிறிது நேரம் பின்னோக்கிச் சென்று விட்டு மீண்டும் 1000 மடங்கு சீற்றத்தோடு வருகிறதோ அதே போல் இந்துமதம் இவற்றால் புதுமை கண்டது என உதாரணம் காட்டினார். “எழுமின் விழி மின் கருதிய கருமம் கைகூடும் வரை உழை மின்” என்றார்.

சொல்லப்போனால் சுவாமி விவே கானந்தர் உறங்கிக்கொண்டிருக்கும் இந்துக் களை, குறிப்பாக இளைஞர்களைத் தட்டி எழுப்பினார். இளைஞர்களே நாட்டை - நம் சமயத்தை இந்துக் கலாச்சாரத்தை விழித் துப் பாருங்கள். இவற்றினை வீரமுள்ள இந்து இளைஞன் காப்பாற்றாவிட்டால் வேறு யார் தான் காப்பாற்றுவார்கள் என இந்து இளை ஞனை விவேகமிக்க வீர இளைஞனாக ஆன்மீக நாட்டமுள்ள இளைஞனாக விழித் தெழச் செய்தது மட்டுமன்றி கருதிய கருமம் கைகூடும்வரை உழையுங்கள் என வலியுறுத் தியதோடு தானும் செயற்பட்டார்.

அக்காலம் மதங்களுக்கிடையே உள்ள பிணக்குகளை தவிர்க்க குருவின் வழியில் பல உவமானக் கதைகளைக் கூறி சிந்திக்கச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். உதாரணமாக ஒரு நீர்நிலைக்கு எத்தனையோ படித்துறைகள் இருக்கின்றது. ஒருவன் விரும் பினால் எப்பாதையாலும் செல்லலாம். ஆனால் சிலபேருக்கு தங்களுக்கு முன்னே உள்ள படித்துறை இலகுவானது. இவ்வாறுதான் மதங்களும் காணப்படுகின்றது. அவரவர் தனக் குச் சுலபமான பாதையை வைத்திருக்கிறார் கள் எனக்கூறி கிறீஸ்தவர்கள் இந்துக்களை மதமாற்றத் தேவையுமில்லை. இந்துக்கள் மதமாறத் தேவையுமில்லை. நம் நாட்டிற்குப் பொருத்தமானது இந்துமதமே என வலியுறுத் தினார். இந்தியாவில் மட்டுமன்றி சிவபூமி யாகிய இலங்கைக்கும் 1897 ஜனவரி மாதம் 15ஆம் திகதி வந்து 25ஆம் திகதிவரை நின்று பல இடங்களிலும் இந்து சமயத்தின் பெருமைகளை எடுத்துப்பேசி இந்துக்களை எழுச்சி காண வைத்தார். இதனால் உருவா கியதே கொழும்பு விவேகானந்த சபை, தொடர்ந்து இராமகிருஷ்ண மிஷன்களும் தோன்றின.

இவ்வாறு வீரமுள்ள இந்து இளை ஞர்கள் தோன்ற வழிகாட்டிய சிந்தனை இன் றும் தேவையாக இருக்கிறது. இந்துக்களுக்கு சேவை செய்ய மனிதப் பண்புகளை வளர்க்க மனிதரில் தெய்வத்தைக் காண வைப்பதற்கு விவேகானந்தரின் கருத்துக்களை இந்நாட் களில் சிந்திக்க வேண்டும். நாம் பிறந்ததன் பயனை அனுபவிக்க இவர்கள் காட்டிய வழி யில் நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டும். இளைஞர்களே! சிந்தியுங்கள். விடயமோ பெரிது காலமோ குறுகியது. விரைந்து வாருங்கள். இந்து தர்மம் காப்போம். இந்து வாக வாழ்வோம். நற்பலன் பெறுவோம். சந்நிதியான் ஆச்சிரமம், சைவ மகா சபை போன்றவற்றோடு இணைந்து சைவ நற்பணி யாற்ற எழுந்து வாருங்கள்.

*சோதனைகள்தான் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டுரைத்தொடர் - 27

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர்கள்

### கடையிற் சுவாமிகள்

இலங்கையைச் சிவபூமி எனத் தவ யோகி திருமூலநாயனார் தனது தமிழ் மந்திரமாகிய திருமந்திரத்தில் குறிப்பிட்டுள் ளார். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவ சமயம் வரலாற் றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இங்கு வேரூன்றி விட்டது. இலங்கையில் இன்று நிலவிவரும் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ் தவம் ஆகிய சமயங்கள் இந்நாட்டிற்கு வந்த காலத்தை வரையறை செய்யலாம். ஆனால் சைவத்தின் காலத்தை வரையறை செய்ய முடியாது.

இலங்கையின் நான்கு திசைகளிலும் மிகத் தொன்மைக் காலம் தொட்டு ஈஸ்வரங் கள் (சிவ ஆலயங்கள்) இருந்தமைக்கான சான்றுகளை வரலாற்று நூல்களில் இருந்து அறிய முடிகிறது. வடக்கில் நகுலேஸ்வரம், கிழக்கில் கோணேஸ்வரம், மேற்கில் திருக் கேதீஸ்வரம், தெற்கில் சந்திரசேகரேஸ்வரம், வடமேற்கில் முன்னேஸ்வரம் ஆகிய சிவஸ் தலங்கள் இருந்தன. அந்நியர்களுடைய படை எடுப்பினால் இவையாவும் சேதமுற்றன. சந்திர சேகரேஸ்வரம் தவிர்ந்த ஏனைய தலங்கள் மீண்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டு அருள் ஒளிவீசும் தெய்வீகத் தலங்களாக இன்றும் மிளிர்கின்றன.

திருக்கேதீஸ்வரத்தின்மீது திருஞான சம்பந்தரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருக் கோணேஸ்வரத்தின்மீது சம்பந்தரும் அருண கிரியாரும் பாடல்களைப் பாடியுள்ளார்கள். இலங்கையின் தென் மாகாணத்தில் இருக் கும் கதிர்காம முருகனின் திருத்தலம் எல்லா இன மக்களாலும் வழிபடப்படும் அருள்மிக்க தலமாக இன்றும் மிளிர்கின்றது. கதிர்காமத் திருத்தலத்தின்மீது அருணகிரிநாதப் பெரு மான் சந்தத் தமிழில் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

ஈழமணித் திருநாட்டிலே சீவனுக் குள்ளே சிவமணம் பூத்த சித்தபுருஷர்கள் பலர் வாழ்ந்தார்கள். இன்றும் வாழ்கின்றார் கள். “சித்தன் போக்கு சிவன் போக்கு” என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. சித்தத் தைச் சிவன்பால் வைத்துச் சிவபோகத்தைப் புசித்த சித்த புருஷர்களின் சமாதிக் கோயில் கள் ஈழத்தின் நான்கு திசைகளிலும் காணப்படு கின்றன. வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவி யடியில் கடையிற் சுவாமிகளின் சமாதியும், கொழும்பு முகத்துவாரத்தில் பெரியானைக் குட்டிச் சுவாமிகளின் சமாதியும், கிழக்கில் காரைதீவில் சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் சமாதியும், மலையகத்தில் நாவலப்பிட்டி குயின்ஸ்பரித் தோட்டத்தில் நவநாதச் சித் தரின் சமாதியும் காணப்படுகின்றன. இவற்றை விட யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல கிராமங் களிலும் சித்தர்களுடைய சமாதிக் கோயில் கள் உண்டு. குடைச் சுவாமிகளின் சமாதிக் கோயில் கோண்டாவிலிலும், சந்நாசியாரின் சமாதி இணுவிலிலும் பொன்னப்பாவின் சமாதி ஒட்டுமடத்திலும், சரவணைச் சாமியாரின் சமாதி குப்பிழானிலும் காணப்படுகின்றன. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல சமாதிக் கோயில்கள் யாழ்ப் பாணக் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ளன.

ஈழத்துச் சித்தர் பரம்பரைக்கு மூல வர்களாகிய சுவாமி முத்தியானந்தர், சுவாமி சின்மயானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் ஆகிய மூவரும் பாரத நாட்டில் இருந்து ஈழ நாட்டிற்கு வருகை தந்தார்கள் எனக் கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன. முத்தி யானந்தரே கடையிற் சுவாமிகள் எனப் பெயர்பெற்றவர். சுவாமி சின்மயானந்த மரபில் வந்தவர்களே கந்தர்மடம் வேதாந்த மடத் தைச் சேர்ந்தவர்கள். சுவாமி நிரஞ்சனானந்தர் பரமகுரு சுவாமிகள் என்ற பெயருடன் வாழ்ந்து வந்தார். கோரக்கச் சித்தர் இலங்கையின் கிழக்குப் பகுதியில் திருக்கோண மலையில் சமாதி அடைந்ததாகவும் குறிப்புகள் உண்டு.

**01) கடையிற் சுவாமிகள்.**

தாதையெனத் தண்ணருள் பொழிந்திடர் தடிந்தே
தீதில் நெறியுய்த் தெமது பாசமது தீயக்
கோதில் வழிகாட்டு கடைச்சாமி, குருவள்ளல்
பாதமலர் சிந்தையிற் பதித்தினிது வாழ்வாம்.

ஆதிகடை நாதன் என்று ஆரா அன் புடன் கொண்டாடும் அருள் வள்ளலாக கடை யிற் சுவாமிகள் திகழ்ந்தார். யாழ்ப்பாணத்தில் ஒரு ஞானபரம்பரை தோன்றுவதற்கு இவர் மூலவராக இருந்தமையால் இவரை ஆதிகுரு என்று அனைவரும் போற்றுவர். யாழ்ப்பாண நகரில் இருக்கும் பெரியகடைப்பகுதியையே இவர் வசிப்பிடமாகக் கொண்டமையால் கடையிற் சுவாமிகள் என்று அழைக்கப்பட் டார். இவர் அவதரித்த ஊர், பெற்றோர் யார் என்ற விபரம், பிள்ளைத் திருநாமம் ஆகிய விபரங்கள் எதுவும் யாருக்கும் சரியாகத் தெரியாது. மகான்கள், ஞானிகள் தமது வாழ்க்கையில் உலகத் தொடர்புடைய விடயங் களை யாருக்கும் வெளிப்படுத்துவதில்லை.

எனினும் இத் தவசிரேஷ்டர் கன்னட தேசத்தவர் என்றும், யாழ்ப்பாணம் வருவதற்கு முன்பு சுவாமி முத்தியானந்தர் என்னும் தீட்சா நாமத்துடன் இருந்தார் என்றும் அறி யக்கூடியதாக உள்ளது. ஆங்கிலம், வட மொழி, கன்னடம், தமிழ் ஆகிய நான்கு மொழி களிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். உயர்ந்த உத்தியோகத்தில் இருந்து திடீ ரென ஏற்பட்ட வைராக்கியம் காரணமாகப் பதவியை உதறிவிட்டுத் துறவு பூண்டார் என்றும் கூறப்படுகிறது.

ஆதி சங்கராச்சாரியார் நிறுவிய மைசூர் சிருங்கேரி மடத்தின் 32ஆவது தலை வராக (கி.பி. 1817 முதல் 1879 வரை) நர சிம்ம பாரதி என்ற ஞானசித்தர் பணியாற்றி னார். இவர் இணையற்ற ஆத்மசித்தி கைவரப் பெற்றவர். பல ஞானிகளையும், யோகிகளை யும் சித்தர்களையும் சீவன் முத்தர்களையும் சிருஷ்டிக்கக் கூடிய அற்புத சக்தி வாய்ந்தவர். கடையிற் சுவாமிகளுக்கு ஞான உபதேசம் வழங்கிய குருநாதராக நரசிம்ம பாரதியே இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் கடையிற் சுவாமி கள் நடமாடித் திரிந்த காலத்தில் கீரிமலை யில் பரமகுருவடிகள் என்பவர் வாழ்ந்து வந் தார். கடையிற் சுவாமிகளுடன் நெருக்கமாக இருந்த குழந்தைவேற் சுவாமிகளுக்கு செவ்வி யுரை ஆசிரியராக பரமகுருவடிகள் வாய்த் திருந்தார். கடையிற் சுவாமிகளைச் சிவனாக வும், குழந்தைவேற் சுவாமிகளைப் பிள்ளையார் ஆகவும், பரமகுரு அடிகளை முருகனாகவும்

*ஆழ்ந்த அன்பிலேயே உண்மையான இன்பம் மலர்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய ஆன்றோர்கள் கருதிப்போற்றி வந்தனர். சுவாமி முத்தியானந்தர், அவரது சகோதர சந்நியாசிகளான சின்மயானந்தர், நிரஞ்சனானந்தர் ஆகிய இருவருடன் ஈழத்திற்கு வந்தகாலம் கி.பி. 1862ஆக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த மூன்று பேர்களும் தாய்நாட்டில் ஒரே குருபரம்பரையைச் சேர்ந்திருந்த போதிலும், சேய் நாட்டில் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட குரு பரம்பரை மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஆனால் இந்த அடியார் கூட்டம் முழுவதும் கடையிற் சுவாமிகளுக்கே முதலிடம் வழங்கி வணங்கினர். நிரஞ்சனானந்தரைத் தமது குருவாக ஏற்றுக்கொண்ட குழந்தைவேற் சுவாமிகள் அருளிய பாடல் இந்த உண்மை யைத் தெளிவுபடுத்துகின்றது.

"வீறு படு பில்லிமுதல் வெஞ்சினப் பசாசும்
வேறு செய் மருந்து விசர்கொண்டு திரிபித்தம்
நீறுபட வேண்டுமெனில் நீவிர் வந்து செய்மின்
கூறு கடைச் சாமி குருபூசையினை அன்றே"

கடையிற் சுவாமிகளின் புகைப்படம் எவராலும் எடுக்கப்படவில்லை. இப்போது பலரிடம் இருக்கும் படங்கள் ஓவியக் கலைஞரான ஒரு பக்தரால் வரையப்பட்டதாகும். இவர் விசாலமான தோள்களையும், நீண்ட கரங்களையும் உடையவர் என்பதும், முகத்தில் சதா ஓர் புன்னகை ஒளிவீசிக் கொண்டிருந்ததென்பதும் தெரியவருகின்றன. இவருடைய முகத்திற்கு பிறிதோர் அழகுக்குறியாக நீண்ட நுனியில் வளைந்த மூக்கு அமைந்திருந்தது. துடுக்கான வேகமான கம்பீரமான நடையும், ஹாஸ்யப் பேச்சும் அவரது சிறப்பான குணங்களாக இருந்தன.

மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன்றாகிய சிவஞானசித்தியார் சுபக்கத்தின் எட்டாம் சூத்திரம் சித்தர்கள், ஞானிகளின் நிலையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"ஞானமதின் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை
சீலமிலைத் தவமில்லை விரதமோடாச்சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமலமில்லை
கோலமிலை புலனில்லை கரணமில்லைக்
குணமில்லைக் குறியில்லை குலமுமில்லை
பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணமருவிப்
பாடலினோ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்"

இப்பாடலில் குறிப்பிடப்படும் இலக்கணத்திற்கு அமைவாக வாழ்ந்தவரே கடையிற் சுவாமிகள் ஆவார்.

யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பா சுவாமிகள் கடையிற் சுவாமிகளின் சீடராகும். கடையிற் சுவாமிகள் நல்லூர் வீதியில் சஞ்சாரம் செய்தபோது செல்லப்பா சுவாமி களைச் சந்தித்தார். கடையிற் சுவாமிகள் ஒரு ரூபாய் பணத்தை வெற்றிலையில் வைத்து மடித்துச் செல்லப்பா சுவாமிகளிடம் கொடுத்து குடையை அவரின் தலையின்மேல் வைத்து அசைத்து ஓடும்படி ஏவிவிட்டார். இதுவே செல்லப்பா சுவாமிகளுக்குக் கிடைத்த குரு உபதேச மாகக் காணப்படுகிறது. கடையிற் சுவாமிகளது அக்காலத் திருக்கோலத்தை அவரது சீடர்களில் ஒருவரான குழந்தைவேற் சுவாமிகள் பின்வரும் பாடலிலே தெளிவாக விளக்குகின்றார்.

*வறுமையை எண்ணிக் கவலைப்படாதே. அதிலிருந்து மீளப்பார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கடை நாதன் பித்தன் திருக்கோலம்
கரிய வர்ணச் சீலை கருந்தோலன சால்வை
துரியாதீதப் பொட்டுத் துலங்க நடை மெட்டுச்
சரியாயறிந்தேத்தித் தழைத்தாட்படுவீரே.

யோகர் சுவாமிகள் தாம் பன்னிரெண்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது கடையிற் சுவாமிகளைக் கண்டதாகக் கூறியுள்ளார். கடையிற் சுவாமிகள் சிவபோகத்தைப் புசித்தவர். அவரோடு ஒப்பிடும்போது நாமெல்லாம் எங்கே? கிருஷ்ண பரமாத்மாபோல பல லீலைகளைப் புரிந்துள்ளார். அவர் நன்மை தீமைக்கு அப்பாற்பட்டவர். அவரை ஒருவரும் குறை சொல்வது கிடையாது. அவர் புத்தர், யேசுநாதர் முதலாயினோரிலும் பன்மடங்கு பெரியவர் என யோகர் சுவாமிகள் கடையிற் சுவாமிகள் பற்றிக் கூறியுள்ளார்.

கடையிற் சுவாமிகளுடைய ஈழத்தின் முதற் சீடரும் அவர் யாத்திரை செய்தபோது தென்னாட்டிலே சந்தித்து ஆசிபெற்றவருமான வண்ணார்பண்ணை வயிரமுத்துச் செட்டியார் அவர்களே குறித்த மகானின் யாழ்ப்பாண வருகைக்கு மூலகாரணமாக இருந்தார். சுவாமிகள் தமது உறைவிடமாக யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலே உள்ள பெரியகடைச் சதுக்கத்தையே கொண்டிருந்தார். பெரியகடைப் பகுதியிலே உள்ள மேற்கு, வடக்கு வீதிகளில் இருந்த வியாபார நிலையங்கள் பெரும்பாலும் வாணிபச் செட்டிமார்களுக்கே சொந்தமாய் இருந்தன. செட்டிமார்கள் இயல்பாகவே தெய்வ பக்தியிலும், அடியார் சேவையிலும் ஆர்வம் உடையவர்கள். வயிரமுத்துச் செட்டியார் தமிழ் நாட்டிலே சுவாமிகளைக் கண்ட நாள்முதலாக அவருடைய நினைவாகவே வாழ்ந்து வந்தார்.

ஒருநாள் வெள்ளிக்கிழமையன்று செட்டியார் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபட்டுக் கொண்டிருந்தார். தமது குருநாதனாகிய கடையிற் சுவாமிகளைத் தமக்குத் தந்துவிடல் வேண்டும் என்பதே அவருடைய உருக்கமான வேண்டுகோளாக இருந்தது. வழிபாடு முடிந்து குருவைப் பெற்றுவிட்டாற்போன்ற மனமலர்ச்சியுடன் செட்டியார் வீடு திரும்பிக்கொண்டிருந்தார். அன்றைய தினம் சுவாமியார் ஒருவர் செட்டியார் வீட்டிற்கு வருகை தந்திருந்தார். செட்டியாரின் மனைவி நண்பகல் உணவைத் தயாரித்து முடிக்கும் நிலையில் இருந்தார். இவர் சுவாமியாரை வணங்கி உபசரித்து நின்றார். சுவாமியார் தாம் உடனே பசியாற வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார். நோன்பு நாளாகிய வெள்ளிக்கிழமையில் சுவாமியார் ஒருவர் விருந்துக்கு வந்திருக்கிறார் என்பதில் அம்மையார் பெரும் உவகையுற்றார். கணவரும் கோயிலால் வந்துவிட்டால் நல்லாயிருக்கும் என்று மனதிலே சிந்தித்தார். சுவாமியாருக்கு உணவு வழங்குவதற்கான ஆயத்தங்கள் அனைத்தையும் செய்தார். சுவாமியார் எழுந்து சென்று இலை முன்பு அமர்ந்துகொண்டு இன்னுமொரு இலை போடு என்றார். சுவாமியாரின் கட்டளையைச் சிரம்மேற்கொண்டு அம்மையாரும் அவ்வாறே செய்தார். இரண்டு இலைகளிலும் உணவு படைத்துக் கொண்டிருக்கையில் செட்டியார் வீட்டினுள் நுழைந்தார். கற்புநெறியும் தெய்வ நெறியும் அம்மையாருக்கு ஒருங்கே பலித்து விட்டன. செட்டியாரும் தான் கும்பிட்ட பயனை உடனே கண்டு கொண்டார். குருவருளும் சீடரின் குருபக்தியும் ஒருங்கே கலந்து கொண்டன. இதுவே யாழ்ப்பாண மண்ணில் கடையிற் சுவாமிகள் கால்பதித்த முதல் நிகழ்வாகும். சுவாமிகளிடத்திலே பயபக்தி பூண்டவர்கள் கடையிற் சுவாமிகள், கடையிற் பெரியவர்,

*முயற்சியே மனிதனை இறைவனின் முன்னால் எடுத்துச் செல்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையான், பித்தன், பாலன் எனப் பல பெயர்களால் அவரை அழைத்து வந்தார்கள். யாழ்ப்பாண நகரில் என்றும் மக்கள் நடமாட்டம் மிகுந்து காணப்படும் சந்தை நிலையமாகிய பெரியகடைப் பகுதியிலேயே பெரும்பாலும் சுவாமிகள் நடமாடித் திரிந்தார்கள்.

தம்மை நாடிவந்த மெய்யடியார்கள் இடையே சாதிபேதம், உயர்வு தாழ்வு, செல்வர் வறியவர் என்ற பேதம் எதுவும் சுவாமிகள் பாராட்டுவதில்லை. எல்லோருக்கும் ஒரே விதமாகக் கருணை காட்டி அவர்களது உடல் நோய்க்கும், உளநோய்க்கும், வறுமைக்கும் பரிகாரம் செய்து வந்தார். இதனால் இவரைத்தேடி வரும் அடியார் கூட்டம் பெருகியது. ஏழைகளும் சுவாமிகளைத் தமது இல்லங்களுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள். சுவாமிகள் அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றபோதெல்லாம் மச்ச, மாமிச, மது சேர்ந்த விருந்தையே அளித்தனர். தாங்கள் நாளாந்தம் உண்ணும் உணவினையே சுவாமிகளுக்கும் கொடுத்தார்கள். விருப்பு, வெறுப்பு அற்றவரான சுவாமிகள் அவற்றையும் ஏற்றனர். தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நின்ற அருட் பெரியோனின் செயற்பாடுகளை வைதீகச் சைவர்கள் வெறுத்தனர்.

சிஷ்யர்கள் சிலவேளைகளில் தமது குருநாதர்களின் ஆன்ம பக்குவத்தினைப் பரிசோதித்துப் பார்ப்பது உண்டு. சமாதிநிலை கூடியிருந்த இராமகிருஷ்ண பரமஹம்சரை அவருடைய பிரதம சிஷ்யரான சுவாமி விவேகானந்தர் ஒருமுறை பரிசோதனை செய்து பார்த்தார். மெழுகுதிரியைப் பற்றவைத்துக் கொண்டுபோய் அவருடைய தொடையில் பிடித்துப் பார்த்தார். இராமகிருஷ்ணர் அசையவே இல்லை. விவேகானந்தர் தமது குருநாதரின் காலடியைப் பற்றிக்கொண்டு கண்ணீர்விட்டு அழுதார். இதேபோலச் செல்லப்பா சுவாமிகளுக்கு தமது குருநாதன் மது அருந்துகிறார் என்பதைப் பிறர் சொல்லக் கேட்கச் சகிக்க முடியவில்லை. அவரால் நம்ப முடியாமலும் இருந்தது. நேரே பரிசோதிக்க விரும்பி ஒரு போத்தல் சாராயத்துடன் குருநாதரைத் தேடிப் பெரியகடைக்குச் சென்றார். போத்தலைச் சால்வையில் சுற்றி மறைத்துக் கொண்டு அருகில் உட்கார்ந்தார். “ஓகோ! நீயும் எனக்குச் சாராய விருந்தளிக்க விரும்பி விட்டாயா? சரி பின்புறமாக மறைத்து வைத்திருக்கும் போத்தலை எடுத்துத் திற... நீயும் நானும் இங்கிருக்கும் அன்பர்களும் எல்லாரும் பகிர்ந்து குடிப்போம் எனக் கடையிற் சுவாமிகள் கூறினார். நடுக்கத்துடன் செல்லப்பா சுவாமிகள் போத்தலை முன் வைத்துத் திறந்ததுமே திராவகம் முழுவதுமே ஆவியாக மாறிக் காற்றோடு கலந்துவிட்டது. செல்லப்பர் தமது குருநாதரின் பாதங்களை இறுகப் பிடித்துக் கண்ணீராற் கழுவிவிட்டு நல்லூர்த் தேரடிக்குத் திரும்பிவிட்டார்.

சுவாமிகள் அடிக்கடி மண்டைதீவுக்கும் போய் வருவார். அங்கே வாழ்ந்த மீனவரிடையேயும் அவரை வணங்கும் அடியார்கள் இருந்தார்கள். ஒரு சமயம் சுவாமிகள் அங்குள்ள கரையூர்ப் பகுதியால் நடந்து சென்ற பொழுது ஒரு கொட்டிலில் அழுகுரல் கேட்டது. அவ்வீட்டின் தலைவன் மீன்பிடிக்கச் சென்றபோது சுழல் காற்று வீசியதால் கடலில் அலைந்து வழி தப்பி வீட்டுக்கு மீளவில்லை. அதனால் அவன் மனைவி மனமுடைந்து அழுததை அறிந்த சுவாமிகள் வீட்டினுள் புகுந்து வளையிற் செருகியிருந்த பனைமட்டையை எடுத்து நடுவீட்டில் நின்று கூத்தாடி “ஏலையா ஏலவேலோ” என்று வள்ளம் வலிப்பதுபோலச் செய்தார். இவ்வாறு கூத்தாடியபின் மட்டையை எறிந்துவிட்டு வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார். மீனவன் வீட்டிற்கு வந்தபின்பு நிலமெல்லாம்

*இறைவனிடம் பயம் ஏற்பட்டாலன்றி நல்லொழுக்கம் உண்டாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளறப்பட்டிருந்ததைக் கண்டு என்ன நடந் தது என்று மனைவியிடம் கேட்டான். அதற்கு மனைவி "இது உன்னுடைய பைத்தியம் வந்து கூத்தாடியது'' என்று கூறினாள். அதைக் கேட்ட மீனவன் கண்களில் இருந்து அருவி நீர் சொரிய "என்னப்பன் அங்கே வந்து வள்ளம் வலித்து என்னைக் காப்பாற்றிய அதேநேரம் இங்கேயும் அதே நிகழ்வு நடந் திருக்கிறது" என்று கூறி மெய்சிலிர்த்தான்.

மண்டைதீவில் வாழ்ந்த நன்னியர் என்பவர் கடையிற் சுவாமிகளின் இணை பிரியாத நண்பராக வாழ்ந்து வந்தார். நன்னி யருடைய வீட்டில் கடையிற் சுவாமிகளின் ஞாபகச் சின்னங்களோடு விளங்குங் கொட்டி லில் அவ்வூர் அன்பர்களின் முயற்சியால் வருடாவருடம் புரட்டாதி மாசத்துப் பூரட்டாதி நட்சத்திரத் தினத்திலே சுவாமிகளின் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஞானகுரு பரம்பரைக்கு வித்திட்ட கடையிற் சுவாமிகள் இறுதிக் காலத்திலே வண்ணார் பண்ணை யைச் சேர்ந்த நீராவியடியில் நிலையாக இருந்தார்கள். அவர்கள் வெளியே எங்கும் செல்வதில்லை. நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்குத் தென்மேற்குத் திசையில் உள்ள குடிசையில் சுவாமிகள் தங்கியிருந் தார்கள். கர வருடம் புரட்டாதி மாதத்தில் பூரணையும் பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய புண்ணிய வேளையில் இவர் மகாசமாதி அடைந்தார். சுவாமிகளுடைய சமாதிக் கோயில் வண்ணார்பண்ணை நீராவியடியில் உள்ளது.

(தொடரும்...

## நற்சிந்தனை

மிகப்பெரிய வணிகர்களையும் கோடீஸ்வரர்களையும் பெரிய பதவி வகிப்பவர்களையும் நூற்றுக்கணக்கில் சீடராகக் கொண்ட துறவி ஒருவர் திருட்டுக் குற்றங்களுக்காக அடிக்கடி மறியலுக்குப் போய்வருவார். எது வேண்டுமானாலும் உடனே கொடுப்பதற்கு எல்லோரும் தயாராக இருக்கும்போது இப்படிச் செய்கிறாரே என்று சீடர்களுக்கு மிகுந்த வருத்தம். துறவியும் மரணப்படுக்கையில் இருந்தபோது சீடர்களில் ஒருவர், அழுதபடி... இந்தத் திருட்டுப் பழக்கத்துக்கு விளக்கம் கேட்டார். அதற்கு அந்தத் துறவியானவர் "சிறையில் இருக்கும் கைதிகளைப் புத்தி சொல்லித் திருத்துவதற்கு நான் ஒரு போதகராகப் போனால் அவர்கள் என்னை அந்நியனாகப் பார்ப்பார்கள். நான் சொல்வதைக் கேட்டுத் திருந்த மாட்டார்கள். நானும் ஒரு சக குற்றவாளியாக இருக்கும்போது எனது சொற்கள் வேலை செய்யும். இதன் காரணமாக அந்தச் சிறையிலே ஒருமுறை நான் பார்த்தவரை மறுமுறை பார்ப்பதில்லை. இதனால் அவர்கள் எனது புத்திமதியை மதிக்கிறார்கள் என்பது உண்மையாயிற்று. புகழ் என்ன புகழ்? யாருக்கு வேண்டும் அது? எத்தனை பேருக்கு யான் பயன்பட்டிருக்கிறேன்...." என்றபடி நிம்மதியாக உயிரை நீத்தார் ஞானி.

துறத்தல் என்பது பெண்ணை மட்டுமல்ல. ஆணவத்தைக் கூர்மைப்படுத்தி வளர்க்கும் அனைத்தையும் துறத்தலே துறவு.

*உறுதியைப்போல உழைப்பும் இருந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல் தத்துவம்

– திரு ஆர். வீ. கந்தசுவாமி அவர்கள் –

பண்டைய காலம் தொட்டு இன்றுவரை தமிழருக்கே உரித்தான திருநாளாகக் கொண்டாடப்பட்டுவரும் தைப்பொங்கல் விழாவினை, உழவர்கள் தமது நன்றிக்கடனைச் சூரிய பகவானுக்குத் தெரிவிக்கும் விழாவாகக் கொண்டாடி வந்துள்ளனர்.

உயிர் போன்ற நெல்லையும், நீரையும் சேர்த்து நமக்கு உயிரளித்த சூரியனுக்குப் படைப்பது பொங்கலாகும்.

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். தேவர்களின் பகல்பொழுது தைமாதம் முதல் ஆறு மாதங்கள். தை மாதத்தில் செய்யத் துவங்கும் அனைத்துச் செயல்களும் மங்களமாகவே நிறைவுபெறுவது பொங்கல் விழாவின் தாற்பரியம். தேவர்களைத் துதிப்பது பொங்கலன்று செய்யப்படும் முக்கிய வழிபாடு. உலகுக்கே கண்கண்ட தெய்வமாகவும் விளங்குபவன் கதிரவன் ஆவான்.

இருக்கு வேதம் மூன்று அக்கினிகளில் ஒன்றாகக் கதிரவனை குறிப்பிடும். சூரியன் எல்லா வடிவமாகவும், பிராணனாகவும், அக்கினியாகவும், ஒளியாகவும், சக்தியாகவும் உள்ளான். பிரபஞ்சத்திற்கு ஒளி, சக்தி ஆகியவற்றைப் பல கோடி ஆண்டுகளாக அளித்து வருகின்றான்.

சூரியன் இருதய நோய், காமாலை நோய் ஆகியவற்றை நீக்கும் ஆற்றல் உள்ளவன் என்கிறது அதர்வண வேதம். மக்களைச் செயல்புரியுமாறு தூண்டி, சோம்பல், அறியாமை ஆகியவற்றை நீக்குபவன் சூரியன்.

சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடுவது மரபு. இப்படி நாம் உலகியல் ரீதியில் செய்யும் பொங்கலைச் சான்றோர் இவ்வாறு கூறுகின்றனர்.

**மதுரச்சோறு**

சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் சந்நிதிமுறையைச் சேர்ந்த ஒரு சைவ மகான், அவர் நாம் தினமும் பொங்கல் படைக்கவேண்டும் என்கிறார்.

பொங்கல் செய்பவர் மூன்று கற்களை அடுக்கி அடுப்பாக்குவர். அவை அன்பு, பொறுமை, ஆசையின்மை ஆகிய மூன்று நற்பண்புகளைக் கொண்டு அடுப்பு செய்ய வேண்டுமென்கிறார். அடியவரது நற்பண்புகள் அடுப்பாகிவிட்டன. அடுப்புமட்டும் போதாது விறகு, அக்கினி, பானை வேண்டும். விறகு நம்மிடம் உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள்.

விறகைப் பற்ற வைக்க நெருப்பு என் செய்வது? ஞானமே அக்கினி. ஞானாக்கினி தோன்றியதும் மாயை, கன்மம், ஆணவம் ஆகியவை எரிந்து விடும்.

ஆன்மா- உயிர் என்ற பானையை அடுப்பில் வைத்து அதனுள் நமது நல்லது கெட்டது அனைத்தையும் இடச்சொல்லுகிறார்.

இப்படிச் சமைக்கும்போது, நம் மனம் பக்குவப்பட்டு விடும். சமைத்தல் என்றாலே பக்குவப்படுத்தல் என்று பொருள்.

*முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் மிகவும் ருசியுடனிருக்க வெல்லம், சர்க்கரை ஆகியவை இடாது கருப்பஞ் சாறு இடுவது நன்று. இறையருள்தான் இந்தக் கருப்பஞ்சாறு. இவை சேர்ந்து கிடைப்பது மதுரச்சோறு. பக்குவப்பட்ட நம் குணங்களில் நிலைத்து நின்று இறையருள் கூடும்போது கிடைப்பது பிரம்மானந்தம். அதுவே மதுரச்சோறு என்கிறார் சுவாமிகள்.

ஆகவே இப்படி நம்மை நாம் நன்கு சமைத்துக்கொண்டு பிரம்மானந்தம் பெற வேண்டும் என்பதே தைப்பொங்கலின் ஆன்மீகத் தாற்பரியமாகும்.

**மாட்டுப்பொங்கல்**

விலங்குகளில் முக்கியமான பசுவிற்குப் பூசை செய்வதன்மூலம் நாம் அனைத்து விலங்குகளுக்கும் நன்றி தெரிவிக்கும் தினமாக மாட்டுப் பொங்கலைக் கொண்டாடுகிறோம். நாம் அதிக அன்பை வெளிப்படுத்தும்போது விலங்குகளும் நம்மேல் அன்பை வெளிப்படுத்துகின்றன.



பசுவின் உடலில் எல்லாத் தெய்வங் களும், முப்பத்து முக்கோடி தேவர்களும் வசிப்பதாக ஐதீகம். முற்காலத்தில் அதிதி பூஜை மிகவும் முக்கியமாகக் கடைப்பிடிக் கப்பட்டது. அதிதிகள் கிடைக்காவிட்டால் பசுவிற்குப் பூஜை செய்வார்கள். இதன்மூலம் நம் முன்னோர்கள் ஒவ்வொரு வீட்டிலும் பசுவை வளர்த்தார்கள். அவற்றை அவர்கள் மிகவும் கௌரவமாக நடத்தினார்கள் என்பது புரிகிறது.

பசு இயற்கையாக இறந்தபின் அதன் கொம்பைச் சேகரித்துத் துளையில் அதன் பசுஞ்சாணம் இட்டுப் பூமியில் புதைக்க வேண்டும். ஆறுமாதத்தின் பின்பு அந்த மக்கிய பசுஞ் சாணத்தை வெளியில் எடுத்து வயலுக்குப் பயன்படுத்தினால் அது மிகச் சிறந்த உரமாகிறது.

மாட்டின் கொம்பு வான் வெளியில் உள்ள பல சக்திகளைப் பெறுகின்றது. அப்படிச் சேகரித்ததைத் தன் காலடி வழியாகப் பூமியில் செலுத்துகிறதாம். இது இயற்கையில் உருவாகும் நுண்ணுயிர்களுக்கும் பயிர்களுக்கும் உதவும்.

இப்படிப் பல சிறப்புக்களை உடைய பிராணிக்கு நன்றி பாராட்டும் தினமே மாட்டுப் பொங்கலாகும். மாடு வைத்திருப்போர் பூஜை செய்வர். மாட்டின் நெற்றியிலே விபூதி, சந்தனம், குங்குமம் இட்டுக் கொம்புகளில் மஞ்சள் பூசி, புது வஸ்திரம் கொம்புகளில் கட்டி ஆராதிப்பர்.

அன்று பெரியோர்களிடம் ஆசிபெற்று, சுற்றத்தாரிடமும், நண்பரிடமும், சென்று பழகி மகிழும் தினமாகும். இப்படி அகந்தை அகன்று தூய மனத்தினராகித் தேவர்களையும், மிருகங்களையும், சக மனிதர்களையும் மதித்து வாழ வேண்டும் என்பதை உணர்த்துவதுதான் வேதம் கூறும் வாழ்க்கை முறை. பொங்கல் விழா அந்த வாழ்க்கை முறையை உணர்த்து கின்றது. வளம் பெருகி, ஆரோக்கியம் நிறைந்து, எல்லா நல்ல உறவுகளுடன் இணங்கி வாழ்ந்து ஆனந்தம் பொங்க இறைவன் நம் எல்லோருக்கும் அருள் பாலிப்பாராக.

*அசட்டுத் துணிவுடன் எதையும் எடாதே. ஆழச் சிந்திக்காமல் செயலில் ஈடுபடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம் அறப்பணிகள் - 2016

– தொகுப்பு –

**சந்நிதியான் ஆச்சிரமத்தால் வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் பணிகள் - சேவைகள் வரிசையில் 2016இல் வழங்கப்பட்ட சேவைகளில் சில இங்கே தரப்பட்டுள்ளது.**

*15.01.2016 வெள்ளிக்கிழமை:*

அல்வாய் வடமேற்கு திக்கத்தில் வசிக்கும் மாணவி ஜெ. நிரோசா என்பவருக்கு பெறுமதிமிக்க மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

*22.01.2016 வெள்ளிக்கிழமை:*

சுன்னாகம் யா/ உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை மெய்வல்லுனர் போட்டியின் பரிசளிப்பு வேளையில் வழங்கப்படுவதற்காக 30 புத்தகப் பைகள் வழங்கப்பட்டன.

*29.01.2016 வெள்ளிக்கிழமை:*

வல்லைவீதி - தொண்டைமானாற்றில் வசிப்பவரும், யா/ நெல்லியடி மத்திய கல்லூரியில் கல்வி கற்பவருமான யோ. ரகுகரன் எனும் மாணவனின் போக்குவரத்து வசதிகருதி துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*20.05.2016 வெள்ளிக்கிழமை:*

சந்நிதிவீதி - தொண்டைமானாற்றைச் சேர்ந்த, யா/ உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலையில் தரம் 8இல் கல்வி கற்கும் மாணவன் ச. டினோஜன் என்பவருக்கு துவிச் சக்கரவண்டி வழங்கப்பட்டது.

*30.09.2016 வெள்ளிக்கிழமை:*

மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பெறும் முதியோர் தின விழாவிற்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

*07.10.2016 வெள்ளிக்கிழமை:*

பருத்தித்துறை பிரதேச செயலகம் நடாத்தும் முதியோர் தின விழாவிற்காக, சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட உடுபுடவைகளை, ஆச்சிரம வெள்ளி வாராந்த நிகழ்வில் திரு அ. குமாரவேல் ஆசிரியர் அவர்கள் வழங்கினார்.

*02.11.2016 வெள்ளிக்கிழமை:*

தொண்டைமானாறு வளர்மதி முன்பள்ளி கலைவிழாவை முன்னிட்டு 65 மாணவர் களுக்கான தண்ணீர்ப் போத்தல், சாப்பாட்டுப் பெட்டி, புத்தகப்பை முதலான பரிசுப் பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டது. இவை ஆச்சிரம வெள்ளி நிகழ்வு மேடையில் வைத்து திரு E.S.P நாகரத்தினம் அவர்களால் வழங்கப்பட்டது.

*09.12.2016 வெள்ளிக்கிழமை:*


யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உயர் வகுப்பில் கல்வி பயிலும் மாணவியான செல்வி சாகித்தியா அன்பழகன் என்பவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. திரு மு. தட்சணா மூர்த்தி அவர்கள் இதனை, சந்நிதியான் ஆச்சிரம வெள்ளி வாராந்த நிகழ்வில் வைத்து வழங்கினார்.

பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு1500 ரூபா தொடக்கம் 5000 ரூபா வரையிலான மாதாந்த உதவிப்பணம் வெவ்வேறு வங்கிகளில் வைப்பில் இடப்படுகிறது.

ஆச்சிரம வைத்திய சேவை மண்டபத்தில் வாரம் இருமுறை (ஞாயிறு + புதன்) இலவச வைத்தியசேவை தொடருகிறது. வாராந்தம் 100 பேருக்குக் குறையாமல் பயன்பெறும் நோயாளர்களுக்கான மருந்துகள் அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகிறது.

சுவாமிகளின் மாதாந்த மலையகப் பயணவேளையில், மலையகத்தின் பதுளை - பண்டாரவளை - அப்புத்தளை போன்ற பிரதேசங்களில் உள்ள அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகளுக்குரிய கற்றல் உபகரணங்கள் - வாழ்வாதார உதவிகள் என்பன மாதாந்தம் இடம்பெற்று வருகின்றது.

ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட - கணவனை இழந்த குடும்பத் தலைவியருக்கு வாழ்வாதார உதவியாக அரிசி, உதவிப்பணம் என்பனவும் வழங்கப்படுகிறது.




ஞானமும் பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ்செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் தெய்வமாகலாம்

– திரு நீர்வைமணி அவர்கள் –

உலகிலே மக்களாகப் பிறந்த எல்லோரும் உயர்ந்த நிலை பெறவேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள்.

மனிதருடைய உயர்வுக்குக் கல்வியும், செல்வமும், பதவியும், குலமும், அதிகாரங் களும் காரணங்களாகமாட்டாது.

"பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள" என்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

"கற்றாரை யான் வேண்டேன்" என்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

"கல்லாதவரே நல்லவர்" என்கின்றார் தாயுமான சுவாமிகள்.

எனவே மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் உள்ளத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். இத்னையே மிகச் சிறப்பாக

வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்த்ர்தம்
உள்ளத்தனையது உயர்வு. என வள்ளுவர் எடுத்துக் கூறுகின்றார்.

எனவே மனிதர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் உள்ளத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும்.

உள்ளம் உயர்வதென்றால் அது என்ன? எப்படி? என்று தோன்றும். உள்ளம் உயர்வதென்பது, தன்னை நிந்திக்கும் பகைவனுக்கும், வாழ்க வளமுடன் என்று நலம்புரிவது. அவனுடைய பாவ மன்னிப்புக்கு இறைவனிடம் வேண்டுதல் செய்வது.

தன்னை இகழ்ந்தாரை தான்பொறுப்பதன்றியே
எம்மை இகழ்ந்த வினைப் பயத்தால் - உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர் கொல்என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்

என நாலடியார் சிறப்பாகச் சான்றோர் கடன் இதுவென எடுத்துக் கூறுகின்றது.

ஒரு மனிதனுக்கு அவன் மனைவிதான் சிறந்ததுணை. இதனால் திருவள்ளுவரும் வாழ்க்கைத் துணை நலம் என்கிறார். மனைவி மறுமைக்கும் துணையாக வருகின்றாள் என மகாபாரதத்தில் யட்சப் பிரச்னையிற் தருமர் கூறுகின்றார்.

"பொற்றாலியோடு எவையும் போம்" என்பது ஔவையார் வாக்காகும்.

உத்தம பத்தினியாகிய சீதையைச் சிறை வைத்த இராவணன் முதல் நாட்போரில் யாவும் இழந்து வெறுமையாய் நிற்கவும், அவன் நிலைகண்டு உள்ளத்தால் உயர்ந்த வள்ளல் இராமபிரான் இரக்கங் கொண்டவராக நீ இன்று போய் நாளை வா! என்று கூறிய அருளுரையை உலகம் மறக்க முடியாது. பகைவனுக்குக் கருணை காட்டிய இராம பிரான் உள்ளம் உயர்ந்தது.

சுண்ணாம்பு அறையில் அடைத்தும், நஞ்சு பருக்கியும், மத யானையை ஏவிக் கொல்ல விட்டும், கல்லிற் கட்டிக் கடலில் விட்டும் தீமைகள் செய்த மகேந்திர பல்லவன் தான் செய்த

*வீழ்வது வெட்கமல்ல; ஆனால் வீழ்ந்து கிடப்பதுதான் வெட்கமானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்களை எண்ணி வருந்தி, உள்ளம் திருந்தி திருநாவுக்கரசரை அணுகியபோது, தனக்குச் செய்த குற்றங்களையெல்லாம் மன்னித்து, மறந்து அவனை ஆட்கொண்டார் அப்பர் சுவாமிகள். இதனால் அப்பரடிகளின் உள்ளம் உயர்ந்தது.

தன்னைக் கொலைக் குற்றஞ் சாட்டி சிலுவையில் அறையுமாறு பணித்தவர்களின் பாவமன்னிப்புக்காகப் "பரம மண்டலத்தில் இருக்கும் ஞானப் பிதாவே, என்னைக் கொல்லுமாறு பணித்த அன்பர்களின் பாவத்தைத் தேவரீர்! மன்னித்துக் கருணை புரிவீராக. என்று வேண்டிக் கொண்ட ஏசுநாதரின் உள்ளம் உயர்ந்த உள்ளமாகும்.

எனவே நாம் நம் உள்ளத்தை உயர்த்திக் கொண்டால் தெய்வீகப் பெற்றியைப் பெறலாமன்றோ.

மக்கள் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையிற் பெரும் துன்பங்கள், சிரமங்கள் ஏற்படும் போது எதிர்பாராது வந்து உதவி செய்பவர்களைப் பார்த்து கடவுள் தான் வந்து காப்பாற்றினார் எனப் பெருமைப்படுவதைக் காண்கின்றோம்.

எனவே மனிதனும் உள்ளத்தால் உயர்ந்தால் அவன் தெய்வமாகலாம் என்பதை நாம் நன்கு உணர்வதுடன் வாழ்க்கையிற் பணம், பொருள், பதவி, அதிகாரம் எவை இருந்தாலும் உள்ளத்தால் உயர்வு இல்லையேல் அவை யாவும் சிறுமையே ஆகும்.

இதனையே எமது பண்டைய இதிகாசங்கள், புராணங்கள் பல்வேறு கதைகள்மூலம் எடுத்துக்கூறுகின்றன. எனவே நாமும் உள்ளத்தால் உயர்ந்தவர்களாக தெய்வீக வாழ்வு வாழ முயல்வோமாக.

"உள்ளத்தால் உயர்ந்தால் மனிதனும் தெய்வமாகலாம்"

---

## நற்சிந்தனை

மனதின் ஆற்றல் அளவிட முடியாதது. பஞ்சபூதங்களையும் தாண்டிய ஒரு பெரும்பூதம் மனமாகும். பூதம் என்பது ஒரு வேலையைச் செய்துகொண்டே இருக்கும். சும்மா இருக்காது. அதேபோல்த்தான் மனமும் சும்மா இருக்காது. ஆனால் இது ஒரு விசித்திரமான குட்டிப்பூதம். அறிவுதான் பூதத்தை ஆளவேண்டும். மாறாகப் பூதம் அறிவை ஆளுகை செய்தால் அழிவுக்கு வித்திட்டுவிடும். மனம் நமது கட்டளைக்கு அடிபணியாது. ஆனால் பழக்கத்துக்கு அடிமையாகும் தன்மையுடையது. "நாளைமுதல் மது அருந்தாதே" என்று கட்டளையிட்டால் கேட்காது. ஆனால் ஏதாவது தீராத வியாதி வந்துவிட்டால் பல்லைக் கடித்துக்கொண்டு நாம் விரும்பும் வழியில் அதைப் பழக்கப்படுத்திவிட்டால் வழிக்கு வந்துவிடுகிறது. மனதைப் பார்த்து அறிவு எப்படி எல்லாம் சொல்கிறதோ அப்படியே ஆகிவிடும் தன்மை அதற்கு உண்டு. "எனக்கு இப்போ முன்போல் ஞாபகசக்தி இருப்பதில்லை" என்று நினைக்க ஆரம்பித்தால் மனம் படிப்படியாக ஞாபகசக்தியை இழந்துவிடும். அதேநேரம் "முன்னரைவிட நான் இப்போ தெளிவாக இருக்கிறேன்" என்று நினைக்க ஆரம்பித்தால் மனம் அப்படியே ஆகிவிடும். இதுதான் மனதின் இயல்பு. மனதை ஒருமுகப்படுத்தினால் அதன் செயலாக்கம் அதிகரிக்கும். அதைவிடுத்து மனம் அலைபாய ஆரம்பித்தால் அதன் செயலாற்றும் திறன் குறையும். உடல் பலமில்லாதவனை பலமுள்ளவன் அடித்து வீழ்த்துவதைப்போல மனோபலம் இல்லாதவனையும் மனோபலம் உள்ளவன் அடக்கியாள்வான். அதனால்த்தான் "ஒருவனுடைய நண்பனும் பகைவனும் அவனது மனமே" என்கிறது கீதை.

***இறைவனிடம் காட்சி பெறும்போது அகவிருள் முழுவதும் விலகிவிடுகிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் திருவடி சார்தல் நலமன்றோ

- திரு பொ. பாலேஸ்வரன் அவர்கள் -

அடியேன் அல்லன் அழிந்தே போனேன்
ஆட்கொள் என்னை யிங்கு
பொடிசேர் உடலும் பொய்யாய் காண
புழுத்தே போகும் போய்விட்டால்
அடியா ரானர் ரெல்லாரும் தேடி
வந்தார் உன் தாள்சேர
படியே எனத் தான் கண்ணுற்றார்
பாவம் போகப் பணிவுற்றார்.

எந்தன் அன்பும் பொய்யன்று யான்
பெற்ற அன்பும் பொய்யன்று
சிந்தை செயலும் ஒன்றாகித் தேடித்
தேடித் திரிதல் இயல்பாமோ!
முந்தையான காலம் தன்னை மூடி
மறைக்க முயல் வனோ
கந்தனான தேவன் தன்னை இன்னும்
காலம் மறக்க முடியுமோ.

பூக்கொண்டு திருமேனி போர்த்தி மகிழுவேன்
ஆர்த்தி யெடுத்து ஆரத் தழுவி நிற்பேன்
பாக் கொண்டு பாடி ஆடி மகிழ்ந்திடுவேன்
நேர்த்தி யான் செய்ய நித்தம் வலம் வருவேன்
நோக் கெலாம் ஒன்றாகி நோய் துன்பம் தீர்த்திடுவேன்
நீர்த் தீர்த்தம் கொண்டுமே வார்த்து மகிழ்ந்திடுவேன்
சாக்கடைப் புழுபோல் சகதியில் வீழாமல்
சந்நிதியான் திருவடியே சார்ந்து யான் நிற்பேன்.

ஊனாகி உயிராகி உன்னுடனே நான்கலந்து
தேனாகி நிற்கும் சிற்றம்பலவன் மைந்தா
வானோர் இடர்தீர்க்க வந்துதித்த தேவா
ஆற்றங்கரை யமர்ந்த அருமருந்தான புதல்வா
நானோர் விதிவிலக்கோ நாயினேனைக் கண்பாராய்
தேனார் அமுதமாய் தித்திக்கும் தீஞ்சுடரே
வானோர் துயர் தீர்த்தாய் என நினைத்து மாளாமல்
நேராய் வந்துன் தாள் பணிதல் நன்றாமோ!

*ஆண்டவனை உணர்ந்தவர்களை எதுவும் பாதிக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016ஆம் ஆண்டு வாசகர் போட்டிக்கான விடைகள்

| | | மாதம் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பட்டினத்தார் | ஆவணி | 45 |
| 2. | மாம்பழம், மாதுளை | ஆவணி | 04 |
| 3. | கல்வி | புரட்டாதி | 15 |
| 4. | பணிவு | ஐப்பசி | 32 |
| 5. | "சரவணபவா", "குமாராயநம" | தை | 10 |
| 6. | ஞானிகள் | மாசி | 61 |
| 7. | வானம் | தை | 27 |
| 8. | சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் | தை | 61 |
| 9. | முத்துச்சாமி தீட்சிதர் | மாசி | 10 |
| 10. | கொங்கணவர் | மாசி | 60 |
| 11. | உடலும் உயிரும் உளமும் உணர்வும் யாவையும் கடந்த ஆன்மாவில் கலந்திருப்பதே நமது உண்மைநிலை | பங்குனி | 18 |
| 12. | பன்னாடை | பங்குனி | 23 |
| 13. | தெருமுட்டிமடம் | பங்குனி | 53 |
| 14. | காமம், மோகம், கோபம், லோபம், மதம், மாச்சரியம் | சித்திரை | 40 |
| 15. | இறைவன் | வைகாசி | 05 |
| 16. | வெளிநோக்கியே ஓடும் புலன்களின் பின்னால் மனதை ஓடவிடாமல் அதைக் கட்டுப்படுத்தி உள்முகமாகத் திருப்பி ஆத்ம தரிசனம் பெற வேண்டும். | ஆவணி | 27 |
| 17. | எல்லோருக்கும் நல்லதையே விரும்புவது கெடுதலில் ஈடுபடாத மனது, சத்தியம், மென்மை, அடக்கம் முதலியவைகள் | ஆடி | 33 |
| 18. | பெரியாழ்வார் | ஆடி | 53 |
| 19. | விட்டில்பூச்சி | ஆனி | 35 |
| 20. | அருணகிரிநாதர் | ஆனி | 13 |
| 21. | கலை | ஆனி | 23 |
| 22. | அகத்தியர் | வைகாசி | 51 |
| 23. | சமயம், விஷேடம் ஆகிய தீக்கைகளை செய்வித்து சிவவழிபாட்டினைப் பிறருக்கு அளிப்பவர் | சித்திரை | 18 |
| 24. | ஆறாம் அறிவு | சித்திரை | 52 |
| 25. | அன்றில் பறவை | சித்திரை | 53 |

பரபரத்து ஓடுவதில் பயனில்லை; உரியநேரத்தில் புறப்படுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | |
|---|---|
| 1ஆம் பரிசு | திருமதி வத்சன் சத்தியவாணி<br>07- பயணியர் வீதி,<br>மட்டக்களப்பு. |
| 2ஆம் பரிசு | திருமதி ம. சுவாமிநாதன்<br>ஆவரங்கால் மேற்கு,<br>ஆவரங்கால். |
| 3ஆம் பரிசு | திருமதி ச. சந்திரிகா<br>207- பசார் வீதி,<br>சிலாபம். |

## ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்

**1. திருமதி தயாநிதி பாலசுந்தரம்**
கலைவாணி வாசம்
பிள்ளையார் கோவிலடி,
நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

**2. திரு தி. பாலசுப்பிரமணியம்**
280, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**3. திருமதி நிஷாந்தி ஜோதிவேல்**
159/2, பலாலி வீதி,
கோண்டாவில்

**4. நிர்மலாதேவி கணபதிப்பிள்ளை**
49/1, பெரஹரா லேன்,
வெள்ளவத்தை.

**5. திருமதி மலர்மகள் ஞானலிங்கம்**
159/6, கே.ஆர். ஒழுங்கை,
பலாலி வீதி,
கோண்டாவில்.

**6. திருமதி இ. யாழினி**
சாரையடி,
புலோலி தெற்கு,
புலோலி.

**7. திருமதி ம. ஸ்ரீஸ்கந்தராசா**
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**8. திருமதி ஏ. ஜெயராணி**
இல.2, புறாடி ஒழுங்கை,
அரியாலை.

**9. திரு குகராஜா அகிலன்**
கட்டைபறிச்சான் - 03,
மூதூர்.

**10. திரு வ. ஆறுமுகம்**
ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.

**வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாசிமாத ஞானச்சுடர் வெளியீட்டின் போது (24.02.2016) வழங்கப்படும்.**

*தூய மனதுக்கு இறைவன் புலப்படுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக விழா - 2016

– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும் வருடாந்த திருவாசக விழா (2016) 01.01.2017இல் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. சந்நிதி வேலவனின் பூசை வழிபாடுகளுடன் காலை 09.00 மணியளவில் விழா கோலாகலமாக ஆரம்பமானது. ஆச்சிரம வாசலிலிருந்து விழா மண்டபம் வரையிலான பகுதிகளும் - விழா மேடையும் சிறப்பு அலங்காரம் பெற்றிருந்தன.



சந்நிதி வேற்பெருமானுக்கு விசேட அபிஷேக - ஆராதனைகள் நிறைவு பெற்றதும், நால்வர் படத்துடன் - திருவாசக ஏடுகளும் அலங்கார கேடகத்தில் வைத்து பக்தர்கள் தோளில் சுமந்துவர, மாணவர்கள் உட்பட விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரும் திருவாசக பாராயணம் ஓதியபடி முன்னும் பின்னுமாக நடந்துவர, பக்திபூர்வமான அந்த ஊர் வலம் சந்நிதியான் ஆச்சிரம வாசலை அண்மித்தது. வாசலில் பூரண நிறைகுட வரவேற்பளிக்கப்பட்டு நால்வர் படமும் - திருவாசக ஏடுகளும் விழா மேடைக்கு எடுத்துவரப்பட்டது.



ஏழையின் பக்தியில் இறைவன் மகிழ்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவின் முதல் நிகழ்வாகப் பஞ்சபுராணம் பாடப்பட்டபோது மண்டபத்தில் கூடியிருந்த அனைத்து மக்களும் எழுந்து நின்று இறைவணக்கம் செய்தனர். ஆசியுரை வழங்குவதற்காக வருகை தந்திருந்த நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆச்சிரம வாசலில் - நிறைகுட வரவேற்பிடத்தில் பேரவை உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டு விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.



சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் முன்னெடுக்கப்படும் விழாக்களில் முதன்மையானதும் - முக்கியமானதுமான திருவாசக விழாவின் சிறப்புப்பற்றி நல்லை ஆதீனம் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்ததுடன், ஆச்சிரமத்தின் பணிகள் - சேவைகள் பற்றியும், ஆச்சிரமத்தினை வழிநடத்திவரும் மோகனதாஸ் சுவாமிகளின் செயற்திறமைபற்றியும் வியந்து பாராட்டி தமது ஆசியுரையினை நிறைவு செய்தார்.

ஆசியுரையினைத் தொடர்ந்து கம்பர்மலை பெரியதம்பிரான் அறநெறிப் பாடசாலை மாணவி செல்வி சி. ஹஜீனாவின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து திருவாசகப் பண்ணிசை - பக்கவாத்தியம் சகிதம்- பாடப்பட்டன. செல்விகள் தயாளரூபினி குமாரசாமி, தயாளநீதினி குமாரசாமி ஆகிய இரு சகோதரிகளதும் திருவாசக பண்ணிசை கேட்ட சபையோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.







அடுத்து, புட்டளை மகா வித்தியாலய அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள், முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரனது நினைவுப் பேருரை ஆற்றினார். திருவாசக விழா நடைபெற்ற 01.01.2017 மறைந்த அமைச்சர் மகேஸ்வரனின் நினைவு நாளாகவும் பொருந்தி வந்தமையால் - விழா மேடையில் இந்த நினைவுப் பேருரை முக்கியத்துவம் பெற்றது. திரு ஆ. சிவநாதன் அவர்கள் தமது பேச்சின் முதற் பகுதியினை திருவாசகத்தின் பெருமை, விழாவின் அவசியம், விழாவின் ஒழுங்கான நிகழ்ச்சி நிரல் என்பவற்றை உள்ளடக்கியதாகவும், நினைவுப் பேருரையினை இறுதிப் பகுதியாகவும் நிகழ்த்தி நிறைவு செய்தார்.

*ஒருவன் கற்ற நூலின் அளவாகவே நுண்ணறிவு அமையும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தியாகராசா மகேஸ்வரன் அமைச்சராக இருந்த காலத்தின் புறச்சூழல் நெருக்கடிகள், பொருட்களின் பற்றாக்குறை, மக்களின் அவலங்கள், இப்படியான சூழலில் அவர் ஆற்றிய பணிகள் பற்றி மிகத் தெளிவாக - விபரமாக எடுத்துரைத்தார். குறிப்பாக சந்நிதியான் ஆச்சிரமத்தோடு அவருக்கு இருந்த நெருங்கிய ஈடுபாடுகள்பற்றி சபையோர் புரியும்படியாகக் கட்டம் - கட்டமாக விபரித்தார். தியாகராசா மகேஸ்வரன் அமரராகி 9 ஆண்டுகள் கழிந்த நிலையில், திரு ஆ. சிவநாதன் அவர்களது நினைவு உரையினை அனைவரும் அமைதியாகச் செவிமடுத்தனர்.

இந்த உரையினைத் தொடர்ந்து மேடையில் நடைபெற்ற கலகலப்பான நிகழ்ச்சி சபையோரைக் களிப்பூட்டியது. தி. மிருணா, உ. அசுவா, ம. அபிதா, இ. துஸ்யந்தி, மு. கிஷானி, சி. ஹஜீனா, அ. ராகவி, சு. விசாலினி ஆகியோர் கலந்துகொண்ட வேப்பிலை நடனம் - கோலாட்ட நிகழ்ச்சிகள் பார்வையாளர்களுக்குப் பெரு விருந்தாக அமைந்தது.



மண்டபம் நிறைந்திருந்த பார்வையாளர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்த திருவாசக விழாவின் உச்ச நிகழ்வான "பட்டிமன்றம்" பலத்த கரகோஷத்துடன் ஆரம்பமானது.



திருவாசகத்துள் கற்றோர் மனதை கவர்வதில் விஞ்சி நிற்பது, "தத்துவ அறிவே"- "பக்தி உணர்வே" என ஆரம்பமான பட்டிமன்றத்திற்கு, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபரான செந்தமிழ் சொல்லருவி திரு ச. லலீசன் அவர்கள் நடுவராக வீற்றிருந்தார். திருவாசகத்துள் விஞ்சி நிற்பது "தத்துவ அறிவே" என யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர் திரு சி. ரமணராஜா அவர்களும், ஸ்ரீபாத தேசியற் கல்லூரி விரிவுரையாளர் சைவப்புலவர் திரு கா. கமலநாதன் அவர்களும் ஒருபக்கம் மன்றத்தில் வாதிடக் காத்திருந் தனர். "பக்தி உணர்வே" எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் திரு இ. சர்வேஸ்வரா அவர்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக அபி விருத்தி உத்தியோகத்தர் திரு வே. சிவராஜா அவர்களும் எதிராடத் தயாரான நிலையில், நடுவரின் முன்னுரையுடன் கலகலப்பாகப் பட்டிமன்றம் ஆரம்பமாகியது. மாறிமாறி இரு பகுதியினரும் கூறிய வாதிப் பிரதிவாதங்களைச் செவிமடுத்த பார்வையாளர், தமது மனோ நிலையை வெளிப்படுத்த அடிக்கடி கரகோஷமிட்டு உற்சாகப்படுத்தினர். இறுதியில் பட்டி மன்றத்தின் நடுவராக வீற்றிருந்த திரு ச. லலீசன் தமக்கே உரித்தான அழகு தமிழில் முடிவுரை வழங்கினார். தத்துவ அறிவு சார்ந்த கண்ணோட்டத்துடன் நோக்குபவர்களுக்கும் சரி, பக்திபூர்வமான உணர்வுடன் பார்ப்போருக்கும் சரி தேனாகத் தித்திக்கும் திருவாசகம் "அவரவர் ஆராயும் அறிவின் பாற்பட்டது" எனத் தீர்ப்பு வழங்கியதுடன் பட்டிமன்ற நிகழ்வு நிறைவுக்கு வந்தது.

அடுத்து மேடையில் ஒரு கூட்டு நடன நிகழ்ச்சி அரங்கேறியது. சி. டயானிகா, சி. டக்சிதன், த. தர்ணிகா, த. பிரவினா, அ. காவியா, ர. லக்சிகா, பு. ரக்ஷயா ஆகிய ஏழு மாணவிகள் இந்தக் கூட்டு நடனத்தில் பங்கேற்று விழாவைக் கலகலப்பாக்கினர்.

கம்பர்மலை பெரிய தம்பிரான் அறநெறிப் பாடசாலை மாணவிகளான அ. ராகவி, தி. மிருனா, கி. அரணிகா, மு. கிஷானி, சு. விசாலினி ஆகியோர் கலந்து சிறப்பித்த பண்ணிசை நிகழ்வு மேடையேறியது. அற்புதமான இந்தப் பண்ணிசை நிகழ்வினைப் பார்வையாளர்கள் கேட்டு ரசித்தனர்.

அனைவரதும் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்ற எல்லா பண்ணிசை - நடன நிகழ்வுகளையும் சரிபார்த்து - ஒருங்கமைத்து - மேடைக்கு உகந்தபடி தயாரித்து அளித்த திருமதி சி. சபிதா, கு. மேகலா, ஜெ. பிலேசியா, ச. சுஜா ஆகிய ஆசிரியைகள் எமது உளமார்ந்த நன்றிக்குரியவர்கள்.



*உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும் அதனைப் பின்தொடருங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனைத் தொடர்ந்து திரு துரை கணேசமூர்த்தி அவர்களின் "திருவாசகச் சிறப்பு" எனும் தலைப்பில் ஆற்றிய பேருரையுடன் மேடை நிகழ்ச்சிகள் நிறைவுக்கு வந்தன. அடுத்து, சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் வழங்கப்படுகின்ற "மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள்" வழங்கும் நிகழ்வு ஆரம்பமானது. அவரவர் வகுப்பிற்கு ஏற்றவகையில் பொதியிடப்பட்ட அன்பளிப்புப் பொதிகளை மொத்தம் 175 மாணவர்கள் பெற்றுக்கொண்டனர். விழாவிற்கு வந்திருந்த முக்கியஸ்தர்கள் பலருடன், ஆச்சிரம அறப்பணிகளுடன் அதீதமான ஈடுபாடு கொண்ட பலரையும் சுவாமிகள் பெயர் சுட்டி அழைத்து அவர்களைப் பெருமைப்படுத்திக் கொண்டார்.



*பேராசை முடிகிற இடத்தில் மகிழ்ச்சி தொடர்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வானது பல வருடங்களாகத் தொடரும் ஆச்சிரமத்து அறப்பணிகளின் ஒரு பகுதியேயாகும்.

எதிர்பார்த்ததைவிட திருவாசக விழா நிறைவுபெற பகல் 02.00 மணிவரை ஆகிவிட்ட காரணத்தால் குறுகிய நன்றியுரையுடன் விழா நிறைவுக்கு வந்தது. மாணவர்களும், மாணவர்களின் பெற்றோரும், மற்றோரும் பகல் நேர அறுசுவை உணவருந்தியபின் தத்தம் இல்லம் ஏகினர்.

---

## வரலாறுகளும் வழிபாடுகளும்

கேந்திரமுக்கியத்துவமும், வாணிபவர்த்தகங்களும், கடல்
வழிப்பயணங்களும் நிறைந்திருந்தபண்டைய காலத்தில்
இந்துசமுத்திரத்தின் முத்தெனவே இலங்காபுரி செல்வச்
செழிப்புமிக்க கட்டிடக்கலைகளுடன் விளங்கிய காலத்தில்
அந்நிய மதமாற்றங்களும் ஆயிரமாயிர மாண்டுகளுக்கு
முன்னரே பல்வகைச் சமயங்களும் சமணசமயமுமாய்
இந்துசமயத்துள்ளூடுருவி, உருவத்தை வழிபடும் சமண
சமயப்பிரிவுக்குள் முருகனும் பைரவனும் ஆண்டியாக
இந்த வகையில், அருவத்தை மட்டுமே வழிபடும் சமயப்பிரிவுகள்
வேலாயுதத்தையும் சூலாயுதத்தையும் சமாதிக்குள் ஒளித்து
சந்நிதிமுருகனும் சகல அடையாளங்களையும்
இழந்து மடாலயமாய் மறைந்தருளும் காலத்தில்
குழுக்குழுவாய்க் குலதெய்வ வழிபாடாய், சூலாயுதமும்
வேலாயுதமும், வெளிப்பட்டும், மறைந்தும் சமாதிக்குள்
அழிந்தும் அழியாது, மறைந்தும் மறையாது, மறை
பொருளாய், மௌனபூசைகளுடன், காப்பாற்றப்பட்டுவர
தெளிந்து, பௌத்தமன்னர்கள், தமிழ்மன்னர்களுக்கெதி
ராகப்போராடி, சமணசமயத்தின் ஆட்ச்சியைஅகற்றி - ஆகம
வழிமுறை ஆலயங்களைத் தொன்மைகாத்த
சமாதியாலயங்களுக் கெதிராக அமைக்கவும்
எழுச்சிபெற்றுத் தமிழ்நாட்டில் நாயன்மார்கள்
மூலமும், ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரை
வழிவந்த ஆட்சியாளர்கள், ஆசீர்வாதத்துடனும் வணிகச்
செட்டிமார் மூலமும் பராமரிக்கப்பட்டு வரச் சந்நிதியான்
மீண்டும் ஏற்பட்ட அந்நியப் படையெடுப்புக்களால்
அழிந்துபோக, ஆகம நெறிமுறை ஆலயங்கள்
தொண்டைமானாற்றில் தொன்மை, ஆதிமுருகன்
அற்புதங்கள் செய்து மருதர் கதிர்காமர் வழி
தொன்மை காட்டி நிற்கும் நாற்பத வடிவில்
நானில மெங்கும் சிறக்க முருகனருள்
கற்றவனுமில்லை, கடவுள் வரங்களைப் பெற
தகுதி பெற்றவனுமில்லை, காலமென்னை
ஆற்றங்கரையானிடம் சரணடைய வைத்து என்
னுள் உணரவைத்தது பிறவிப் பெரும்பேறே.

**-இராம. ஜெயபாலன்-**

*நாகரிகம் என்பது மனப்பண்பாட்டையே குறிக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் 2017 தைமலர்

# மாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**03.02.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "சமயமும் வாழ்வும்"

வழங்குபவர் :- திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

[சைவப்புலவர்]

---

**10.02.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "வீணை இசை"

வழங்குபவர் :- ஜனனி நடேசமூர்த்தி அவர்கள்

[விரிவுரையாளர்] (பக்கவாத்திய சகிதம்)

---

**17.02.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**24.02.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் மாசிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

மதிப்பீட்டுரை :- திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

[முதுநிலை விரிவுரையாளர், யாழ்ப்பாணம்]

230ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. *QD/82/NEWS/2017*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org